ஒரு மராட்டிய நாடகத்தின் தமிழ் வடிவம்

# சக்காராம் பைண்டர்



கலைஞர்
**கலைச்செல்வன்**

**Vijay Tendulkar**

# SAKHARAM BINDER
# சக்காராம் பைண்டர்

மராட்டிய நாடக ஆசிரியர்
விஜய்டெண்டுல்காரின்

# சக்காராம் பைண்டர்

தழுவலாக்கம்

## கலைஞர் கலைச்செல்வன்

வெளியீட்டகம்
இலக்கிய முற்றம்
இல. 06, பெட்றிகா றோட்,
கொழும்பு - 06.

## தரவுகள்


| | |
|---|---|
| நூல் தலைப்பு: | **சக்காறாம்** பைண்டர் |
| வகை: | நாடகம் |
| தழுவலாக்கம்: | கலைஞர் கலைச்செல்வன்<br>0774 16 16 16 |
| உரிமை: | திருமதி. மசாஹிமா ரவூப்<br>0112 30 40 71 |
| முதற் பதிப்பு: | 24 டிசம்பர் 2009 |
| அட்டை ஓவியம்: | அனுர தஹநாயக்க |
| அட்டைப்பட அமைப்பு: | எஸ். அனுர்ஜன் |
| பக்கங்கள்: | XVI + 80 = 96 |
| அச்சிட்டோர்: | டிசைன் லப்-கொழும்பு-13.<br>0112 45 15 31 - 0114 57 57 77 |
| வெளியீட்டாளர்: | இலக்கிய முற்றம்<br>06, பெட்ரிகா றோட், கொழும்பு-06. |
| விலை: | ரூபா 250/= |

## Bibiliographilcal Data

| | |
|---|---|
| Title: | **SAKHARAM BINDER** |
| Category: | Stage Play |
| Addaptation by: | Kalaignar KALAI CHELVAN<br>E/G/02, Stuart Street Flats,<br>Colombo-02.<br>0774 16 16 16 |
| Copy Rights: | Mrs. Mazahima Rauff<br>+94 112 30 40 71 |
| First Edition: | 24th December 2009 |
| Cover Art By: | Anura Dahanayake<br>+94 112 89 74 70 |
| Cover Design: | S.Anurjan<br>0775 38 31 39 |
| Pages: | XVI + 80=96 |
| Printed By: | Design Lab<br>+94 112 43 15 31-<br>+94 114 57 57 77 |
| Published By: | Ilakkia Mutram<br>No. 06, Fedrica Road,<br>Colombo.06. |
| Price: | Rs.250/= |
| ISBN: | 978-955-518-03-1-0 |

# சமர்ப்பணம்...

தலைநகர் நாடகத்துறையின் முன்னோடிகளான...

கொழும்பில் ஒரு கலைப் பரம்பரையைத் தோற்றுவித்த
மனோரஞ்சித கான சபா
எனும் குருகுலத்தின் நிறுவனர்
**நாடகத்தந்தை கே.பி.ஏ.ராஜேந்திரம் மாஸ்டர்**

நாடகக்கலைக்காக தன்னையே அர்ப்பணித்த
**தவக்கலைஞர் நடிகவேள் லடீஸ் வீரமணி**

அறுபதுகளில் தமிழ் நாடக அரங்கை
பதினைந்து ஆண்டுகள் முன்னோக்கிக் கொண்டுசென்ற
**இயக்குநர் சுஹைர் ஹமீட்**
ஆகியோர்க்கு.

# விடியலின் வெளிச்சப் பிழம்புகள்!

புரவலர் சில பதிவுகள்...

எமது இலக்கிய முற்றத்தின் முதல் வெளியீடாகும்.

அதன் மூலம் இலக்கியப் புரவலர் ஹாசிம் உமர் அவர்களின்

அடையாளத்தை அடுத்த தலைமுறைக்கு ஆவணமாக்கி இருந்தோம்.

அட்டைப்படத்திலிருந்து உள்ளடக்கம் ஈறாக அச்சுப்பதிவுவரை

கச்சிதமாய் அமையப்பெற்ற அந்நூலை வியந்து பாராட்டாதார்

எவருமிலர்.

இது இலக்கியப் பரப்பில் ஒரு முன்னோடி நிகழ்வு;

முன்மாதிரியான முயற்சி!

* * *

நாலரை மாதத்திற்குள்....

இலக்கிய முற்றத்தின் இரண்டாவது வெளியீடு.

"சக்காராம் பைண்டர்" எனும் மராத்திய நாடகத்தை

தமிழுக்கு அறிமுகம் செய்து வைக்கின்றோம்.

தலைசிறந்த மராத்திய நாடகாசிரியர் விஜெய் டெண்டுல்காரின்

பிரசவிப்புக்களில் இது பிரதானமானதாகும்.

மானிட உள்ளங்களில் நீறு பூத்த நெருப்பாய் மறைந்திருக்கும்

இருள் சூழ்ந்த பகுதிகளை வெளிச்சத்திற்குக் கொண்டுவரும்

ஓர் உளவியல் நாடகம் இது.

இப்படையலின் கருவறை வித்தியாசமானதே தவிர

விரசமானது அல்ல!

சரசம் கூட விரசம் ஆவது பார்வையின் கோளாறினாலே என்பது நிஜம்!

* * *

புரவலர் சில பதிவுகளுக்கு தொகுப்பாசிரியராக இருந்து

தனது கைவண்ணத்தாலும் கலைவண்ணத்தாலும் அந்நூலுக்கு

வளம் சேர்த்த பன்முக ஆற்ற கொண்ட கலைஞர் கலைச்செல்வன் அவர்கள்

இந்நாடகத்தின் தழுவலாக்கத்திலும் தனிமுத்திரை பதித்துள்ளார்.

மராத்திய மண்ணை பிறப்பிடமாகக் கொண்ட
சக்காராமை சென்னையிலே குடியமர்த்தியுள்ளார்.
அதனால் சிங்காரத் தமிழ் சிந்தையை குளிர்விக்கின்றது.
சில இடங்களில் காணப்படும் உரையாடல்கள்
கலைச்செல்வனாரின் கற்பனைத் தடாகத்தில் ஊற்றெடுத்தவை
என்பதை அவருக்கே உரிய சங்கீதத் தமிழ்நடை சான்று பகர்கின்றது.
விஜெய் டெண்டுல்காரின் விழிகளுக்கே விழி முளைக்க வைக்கும்
வகையில் அவரது விரல்களின் வித்தைகள் நாடகம் முழுவதும்
வியாபித்து இருக்கிறது.
கலைஞர் கலைச்செல்வன் அவர்களுக்கு எங்கள் நன்றியும் பாராட்டுக்களும்.

* * *

தமிழ் நாடகக் கலையின் விடுதலைக்கு
யதார்த்தபாணி எழுத்துருவும், நடிப்பும், மேடையேற்றமுமே
இன்றைய தேவையாகும்.
சமுதாய நடத்தையின் விளக்கங்களே
இலக்கியத் தரம் வாய்ந்த நாடகங்களை உருவாக்குகிறது.
இவ்வாற்றுகையின் மூலம் அதற்கு அடித்தளம் இடுவதே
இலக்கிய முற்றத்தின் தவம்
நாளைய விடியலின் வெளிச்சப் பிழம்புகள்
நம்பிக்கைச் சூரியனில்தான்....!

**- பதிப்பகத்தார்**

**இலக்கிய முற்றம்**
2009 டிசம்பர் 24ஆம் நாள்

## தமிழ் நாடக அரங்கிற்கு ஓர் உளவியல் நாடகம்...

இலங்கையில் நாடகம் தொடங்கிய காலந்தொட்டு இன்றுவரை, நாடகப் பிரதியொன்றை எழுதக்கூடிய எழுத்தாளனுக்கும், நாடகாசிரியனுக்குமே தமிழ் நாடக மேடையில் தட்டுப்பாடு நிலவுகிறது.

ஐம்பது அறுபதுகளில் மட்டுமன்றி அதற்கு முன்னைய தசாப்தங்களிலும் நம்மிடையே இருந்த நாடகப்பிரதியாக்கக்காரர்கள் தமிழ் நாட்டு நாடகங்களை அல்லது பிறமொழி நாடகங்களைப் பின்பற்றியே எழுதக்கூடியவர்களாக இருந்தார்கள். அவர்களின் வாசிப்பும் தேடுதலும் குறிப்பிட்டு சொல்லக்கூடிய சில சுய ஆக்கங்களை சிருஷ்டிக்க முடிந்ததெனினும் அது தமிழ் நாடக வளர்ச்சிக்குப் போதுமானதாக இருக்கவில்லை என்பது உண்மை.

எண்பதுகளுக்குப் பின்னர் வந்த இளங்கலைஞர்களிடத்தில் அரங்கியல் பற்றிய அறிவோ தெளிவோ போதுமானதாகவில்லை. வாசிப்பும் தேடுதலும் கூட அவர்களுக்கு அந்நியமாகி வருகின்றது.

இதேபோன்றுதான் சிங்கள அரங்கிலும் சிறந்த ஆற்றுகைக்கான பற்றாக்குறை இருந்ததன் காரணமாக சிங்களக் கலைஞர்கள் பிறமொழி நாடகங்களில் மூழ்கி எழுந்தார்கள். அந்த 'மூழ்குதலில்' ஓர் உள் அந்தரங்கம் இருந்தது. அந்தப் 'புனித'மான அந்தரங்கத்தை புரிந்துகொண்ட ஒரு சில கலைஞர்கள் இன்றும் நம்போடு வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

ஓர் அயல் படைப்பை தமது மொழியில் கூறுவதற்கான இசைவின்றி, தமது அரங்கின் தேவை கருதி அல்லது தம் சமூகத்தின் தேவை கருதி பிறமொழி சிருஷ்டிகளின் மூலக் கருவின் அடிப்படை சிதைவுறாதவாறு, கதை மாந்தர்களினதும் இடங்களினதும் பெயர்களை மாற்றி, சம்பவங்கள் அனைத்திலும் மாற்றத்தைப் புகுத்தி, ஆடை அலங்காரம் முதல் அரங்க நிர்மாணம் வரை நமது நாட்டு அடையாளத்தைப் பிரதிபலிக்கச் செய்ததன் மூலம் சில அயல் படைப்புக்களை தங்கள் அசல் படைப்புக்களாக்கினார்கள்.

அந்தக் கைங்கரியத்திற்காக சிங்களக் கலைஞர்கள் பிறநாட்டுப் படைப் புக்களை குத்தகைக்கு எடுத்தார்கள். ஆனால், நமது தமிழ்க் கலைஞர்களோ, அவர்களையும் ஒருபடி மிஞ்சி உள்ளூரிலேயே தங்கள் 'கைவரிசை'யைக் காட்ட முனைந்தார்கள்.

இந்தச் சூழலில்தான் பிரபலமான சிங்களக் கலைஞர்களும் தமிழ்க் கலைஞர்களும் அறுபது எழுபதுகளில் பகிரங்கமாகவே பிறமொழி நாடகங் களைக் - குறிப்பாக மேல்நாட்டு நாடகங்களை மொழி மாற்றம் செய்து அல்லது தழுவலாக்கம் செய்து மேடையேற்றலானார்கள்.

மூலத்தின் ஆன்மாவை நன்கு மனதிற் பதித்துக்கொண்டு நேர்த்தியாக தமிழ் வடிவம் பெற்ற நாடகங்களில் சில வருமாறு....

பொம்மலாட்டம் - அவளைக் கொன்றவள் நீ - நகரத்துக் கோமாளிகள் - டயல் எம் போர் மர்டர் - விட்னஸ் போர் த பிராசிகியூசன் - கதையில் இல்லை - சலோமியின் சபதம் - பதிவூர் ராணி - சவப்பெட்டி - பேசும் நெஞ்சங்கள் - நினைவுகள் உறங்குவதில்லை - திறந்த கல்லறை - யுகதர்மம் - பிச்சைவேண்டாம் - கடலின் அக்கரை போனோரே - கண்ணாடி வார்ப்புக்கள் என பட்டியல் நீளுகிறது.

இவ் அயலகப் படைப்புக்களின் மூலவர்களையும், தமிழுக்குத் தந்தவர் களையும், இயக்கிவர்களையும் குறிப்பிட்டுக் கூற இயலவில்லையே என்ற ஆதங்கம் அடிமனதை உறுத்த, பக்கங்களின் தட்டுபாடு கருதித் தவிர்த்துக் கொண்டாலும், தலைநகர் நாடக வரலாற்றுக்காக அவர்களை விரிவான வகையில் பதிவுசெய்யவிருக்கிறேன் என்ற செய்தி கலை நிலத்திற்கான ஒரு கோமேதகச் சாரல்.

அரங்க அளிக்கையைப் பொறுத்தவரையில் அயல் படைப்புக்களில் வெற்றி பெற்றதும் உண்டு. தோல்வியைத் தழுவியதும் உண்டு. எனினும் அப்படைப்புக்களின் வாயிலாக சிறந்த நாடகப்பிரதிகளையும் அளிக்கைகளை யும் தரிசிக்க முடிந்ததை மறுதலிக்க முடியாது. பிறமொழி நாடகங்களின் தமிழாக்கங்களும் தழுவலாக்கங்களும் தலைநகர் தமிழ் நாடக மேடைக்கு வலுவூட்டின - வளமூட்டின என்பது நீர்த்துப் போகாத நிஜம்!

உதாரணத்திற்கு காலஞ்சென்ற இயக்குநர் சுஹைர் ஹமீத் நெறிப் படுத்திய "பொம்மலாட்டம்" எனும் அயற்புல ஆற்றுகை தமிழ் நாடகத்துறையை 15 ஆண்டுகள் முன்னோக்கிக் கொண்டு சென்றுள்ளது என ஆங்கிலத் தினசரி ஒன்று பதிவு செய்துள்ளமையை இங்கு குறிப்பிடுவது பொருத்தமானதாகும்.

அதேபோல் தழுவலாக்கங்களுக்குத் தனி மதிப்பை பெற்றுத் தந்ததில் மாதவி கலாமன்றம் - புதுமை அரங்கு - தமிழர் முன்னேற்றக் கலைமன்றம்

போன்ற தலைநகர் கலைக்குழாம்களுக்குப் பெரும் பங்குண்டு.

சுயஆக்கம் - சுயசிருஷ்டி என்ற சிந்தனைக்குள் சிறைப்பட்டிருந்த எனக்குள்ளும் ஒரு தாக்கம். நாடகப்பிரதி என்பது அரங்க அளிக்கையை மனதிற்கொண்டு உருவாக்கப்படுவது என்கின்ற கருத்து என்னுள் வேரோடி இருந்ததால், இரவல் ஒன்றை இறக்குமதி செய்வதற்கு என் ஆர்வம் அக்கறை காட்டியது.

இந்த சந்தர்ப்பத்தில்தான் தலைசிறந்த மராட்டிய நாடகாசிரியர் விஜெய் டெண்டுல்காரின் "சக்காராம் பைண்டர்" எனும் நாடகப் பிரதியின் - குமுத் மேத்தா - சாந்தா கோகாலே (Kumud Metaa and Shanta Gokhale) ஆகிய இருவரினதும் ஆங்கில மொழிபெயர்ப்பு என் கரங்களுக்குக் கிட்டியது.

ஓர் அந்நிய வாழ்க்கையையும், அங்குள்ள சூழலையும், அவர்களது பிரச்சினைகளையும் மூலப் பிரதி வழங்குமாறு தமிழ்ப்படுத்துவது மொழி பெயர்ப்பாகும். அவையாவையும் மூலப் பிரதிக்கு முரண்படாதவாறு நமது சூழலுக்கு மாற்றுவது தழுவலாக்கமாகும்.

மொழிபெயர்ப்பு என்பது நியாயம், தழுவல் என்பது தர்மம்.

அந்த தர்மம்தான் இக் கருப்பொருளுக்கான சரியான களம் தமிழ்நாடு எனத் தீர்மானித்தது.

விஜெய் டெண்டுல்காராகவும் இல்லாமல் - குமுத் மேத்தா சாந்தா கோகாலே ஆகிய இருவராகவும் இல்லாமல் கலைச்செல்வனாக இருந்து கதையை நகர்த்துவதென முடிவு செய்தேன்.

அதனால் மூலப் பிரதியில் உள்ள சில நிகழ்வுகளை கத்தரித்தேன். புதிதாக சில நிகழ்வுகளைச் சித்தரித்தேன். உரையாடல்களில் கூட என்னையே முன்னிலைப்படுத்தினேன். மூலப்பிரதியின் உரையாடல்களையும் - என் தழு வலாகத்திலுள்ள உரையாடல்களையும் ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு உண்மை புரியும்.

மரியாதைக்குரிய பேராசிரியர் சபா. ஜெயராசா அவர்களின் அணிந் துரையில் "மகிழ் முறுக்கேற்றத்துடனான மொழியாட்சி" எனக் குறிப்பிட் டுள்ளமை என் கருத்துக்குக் கட்டியம் கூறுவதாய் அமைந்துள்ளது. அதுமாத்திர மன்றி "சக்காராம் பைண்டர்" எனும் இந்நாடகப் பிரதியில் என் அனுபவத்தின்

சுவடுகள் ஆங்காங்கே பிரதிபலிப்பதையும் காணலாம்.

முடிவாக ஒன்றைச் சொல்ல வேண்டும். இது ஒரு வித்தியாசமான படையல். நிமிடத்திற்கு நிமிடம் மனம் மாறும், குணம் மாறும் மனிதர்களின் - மற்றவர் கண்களுக்குப் புலப்படாத மறுபக்கத்தை ஆழ ஊடுருவி அதனை வெளிச்சப்படுத்துவதுதான் விஜெய் டெண்டுல்காரின் இப்படையலுக்கான கருவறை.

இதில் ஆபாசமோ, ஆசாபாசமோ இல்லை. அத்தனையும் ஆடை கட்டாத உண்மை.

முத்தாய்புக்கு முன் முக்கியமான ஒன்று,

ஒரு கலைஞனாக இருந்த என்னை, இலக்கியப் படைப்பாளியாகவும், வெளியீட்டாளனாகவும் உயர்த்திய இலக்கியத் தாதா புரவலர் ஹாசிம் உமர் அவர்களுக்கு எனது கலப்படமற்ற நன்றிகள்.

ஓர் உளவியல் நாடகத்தை தமிழ் நாடக அரங்கிற்கு அறிமுகப்படுத்தியவன் என்ற வகையிலும், உலகப்புகழ் நாடக மேதை சேக்ஸ்பியரின் 'ஒதெல்லோ' (தேசிய நாடக விழாவில் ஏழு விருதுகள் பெற்றது) ஐநூறு தடவைகளுக்கு மேல் மேடையேறிய சிங்களக் கலைஞர் ஜோர்த் சில்வாவின் 'சீலவதி' (டைமன் ராணி) ஆகிய தழுவலாக்கங்களை தமிழ் நாடக மேடைக்குத் தந்தவன் என்ற வகையிலும் கர்வத்தோடு விடைபெறுகின்றேன்.

எல்லாம் வல்ல இறைவனுக்கே புகழ் அனைத்தும்.

- **கலைஞர் கலைச்செல்வன்**
தொலைபேசி : 0112 304071
கைபேசி : 0774 161616

மசாஹிமா மன்ஷில்
ஈ.ஜி.02, ஸ்டுவர்ட் வீதி தொடர்மாடி,
விதானகே மாவத்த,
கொழும்பு 02. ஸ்ரீலங்கா.

## தமிழ் அரங்கியலை வளப்படுத்தும் புதுவரவு
## மகிழ் முறுக்கேற்றத்துடனான மொழியாட்சி

விஜெய் டெண்டுல்கார் அவர்கள் நாடக எழுத்துருவாக்கப் படைப்பாளி களிலே தனித்துவமானவர். மராட்டிய மொழி வாயிலாக இந்திய அரங்குக்கு வளமும் வலுவும் ஊட்டியவர். முழுநீள நாடகங்கள், ஓரங்க நாடகங்கள், சிறுவர் நாடகங்கள் என்ற வகைகளில் ஐம்பதுக்கு மேற்பட்ட கனதியான ஆக்கங் களைத் தந்தவர்.

நகர வாழ்க்கையின் பாதிப்பும், நெருக்குவாரமும் மீண்டெழும் சூழலில் நிகழும் தனிமை அந்நியமயப்பாடு மற்றும் உள்வியல் அவலங்களை நுண் சித்திரிப்பு முறைகளால் அரங்க வெளிக்குக் கொண்டு வந்தவர். முழுச் சமூகத் தளத்தில் தாழ் மத்தியதர வகுப்பினர் எதிர்நோக்கும் மன அவலங்களுக்கு எளிதிலே தீர்வுகண்டறிய முடியா சிக்கலாகும் உளக்கோட்டங்கள் மேலெழுந்து விரிவுகொள்கின்றன. அவ்வாறான விரிவில் மெய்யியற்படுத்தலைக் காட்டிலும் புலக்காட்சிப்படுத்தலே அவரது ஆக்கங்களில் வலிமை பெறுகின்றன.

டெண்டுல்காரின் அரங்கியல் ஆக்கங்களைத் தமிழுக்குக் கொண்டு வரும் கலை முயற்சியை கலைஞர் கலைச்செல்வன் அழகியல் குன்றாத நிதானத்துடன் மேற்கொண்டுள்ளார். தழுவலும், நேரடி மொழிபெயர்ப்பும் கலந்த "இருநிலைக் கோல இணைப்பு", "சக்காராம் பைண்டர்" என்ற இந்தப் படைப்பில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. ஒக்ஸ்போட் பல்கலைக்கழக வெளியீடாக வந்த டென்டுல்கரின் ஐந்து நாடகத் தொகுப்பில் மேற்கூறிய நாடகமும் இடம் பெற்றுள்ளது. ஆங்கிலப் பிரதியையும் கலைச்செல்வனது தமிழ்ப் பிரதியையும் ஒப்புநோக்கும் பொழுது மேற்குறித்த "இருநிலைக் கோல இணைப்பு" மேலெழுதலைக் காணலாம்.

மூலமும் தழுவலும் சமூக இயற்பண்பு நெறியுடன் (Social Naturalism) இணைந்து நிற்கின்றன. பிராமண சமூகத்தைச் சேர்ந்த சக்காராமின் 'விலகல்' நெறியினூடாக இயல்பூக்கப் பிதிர்வுகளைக் காட்டுவதில் டெண்டுல்காரும் கலைஞர் கலைச்செல்வனும் ஒன்றித்து நிற்கின்றனர். அதேவேளை லக்ஷ்மி மற்றும் சம்பா ஆகிய பாத்திரங்கள் சமூகப் புறவய ஈட்டல்களைக் கொண்டுள் ளன. பாத்திரங்கள் முனைவுப்பாடுகளைக் (Polorisation) கொள்ளாது பலமும் பலவீனமும் கொண்ட இருநிலை இணைப்பைத் தாங்கி நிற்கின்றன.

சக்காராமின் "வெளிப்படையான" மத்தியதரக் குணவியல்பும் லக்ஷ்மியின் இந்திய இலட்சியப் பெண்ணின் உளப்பாங்கும் உராய்வுகொள்ளலும், அவளின் இருப்பு சம்பாவின் வருகையால் பயமுறுத்தலுக்கு உள்ளாக்கப்படுதலும் கலைச் செல்வனின் எழுத்துருவில் மிதந்தெழுகின்றன.

பாத்திரங்களின் சிக்கலான இயல்புகளும், மாறுபாடு கொண்ட இடைவினைகளும், பாத்திரத் தரநிர்ணயங்களின் மோதலும் நாடக இயக்கத்தின் உளவியலுக்கு வலுவூட்டுகின்றன. நாடக ஆக்கத்தின் தழுவற் பண்பு தனித்துவத்துடன் மேலெழுவதற்குரிய அரங்கியல் நுட்பங்கள் கலைச்செல்வனால் எடுத்தாளப்படுகின்றன.

நகரப் பின்புலத்தையும், தாழ் மத்தியதரத்தினரது வாழ்க்கைக் கோணங்களையும் கலைநயப்படுத்திக் காட்டுவதற்குரிய பாத்திரவாக்கங்களும் சூழமைவுகளின் நகர்வுகளும் கச்சிதமாகத் தமிழ் வடிவாக்கப்பட்டுள்ளன. கேள்விக்கும் அரவணைப்புக்கும் மானிடம் உள்ளாக்கப்படுகின்றது. கதை நகர்ச்சியூடே காணப்படும் இசைவாக்கம் நாடகப் படிமத்துக்கு வலுவூட்டுகின்றது. நாடகப் படிமச் சீர்மையை காட்சி உருவாக்கம் பராமரித்து ஒழுங்கமைத்து நிற்கின்றது. மொழியாட்சி மகிழ் முறுக்கேற்றத்துடன் (Crisp) இணைந்து நிற்கின்றது.


உலக அரங்கியல் பற்றிய அறிகை, தமிழ் அரங்கியலை வளர்க்கவும் வலுவூட்ட வும் வல்லது. நேரடி மொழி பெயர்ப்புக்களைக் காட்டிலும் தழுவல்கள் மொழி நிலையிலேயே கூடியய இயைபு கொண்டிருந்தலைக் கலைச்செல்வன் அவர்களின் ஆக்கம் புலப்படுத்துகின்றது. அரங்கியல் சார்ந்த நெடிய அனுபவம் மற்றும் எழுத்துருவாக்கத் திறன் ஆகியவை தழுவல் ஆக்கத்துக்கு வலுவூட்டுகின்றன.


தமிழ் அரங்கியலை வளப்படுத்தும் கலைப்பயனுள்ள புதுவரவாக இந்த எழுத்துரு அமைந்துள்ளது.

வாழ்த்துக்களும் பாராட்டுக்களும்

**- பேராசிரியர் சபா. ஜெயராசா**

தலைவர்
**இலக்கியமுற்றம்**


அட்டைப்படத்திற்காக
ஒரு படப்பிடிப்பையே நடத்தியபோது
புகைப்படக் கலைஞர் சுதனின்
கேமிராவுக்குள் சிக்கிக்கொண்ட
சக்காராமும் சம்பாவும்
அட்டையில்...
பிரதீப் - சாந்தி பானுஷா
அட்டைப்படம் :
ஈஸ்வர பிரசாத் (சுதன்)
அட்டைப்பட அமைப்பு :
எஸ். அனுர்ஜன்


1985இல்
சக்காராம் நாடக அரங்கேற்றத்தின்போது....
கே.ஏ.ஜவாஹர்,
பிரியா ஜெயந்தி
ஜோபு நஸீர்
மணிமேகலை
பிரதீப் குருஸ்
சாந்தி பானுஷா



நன்றி...!

புரவலர் புத்தகப் பூங்காவின்
*"மாதம் ஒரு நூல் -*
*இலவச வெளியீட்டுத் திட்டம்"*
ஊடாக ஒரு படைப்பாளியை
வெளியீட்டாளனாகவும் உயர்த்திவரும்
இலக்கியப் புரவலர் **ஹாசிம் உமர்** அவர்களுக்கு...

**புரவலர் புத்தகப் பூங்கா** – இல. 25, அவ்வல் சாவியா றோட், கொழும்பு – 14.

## கதாபாத்திரங்கள்:

**சக்காராம் பைண்டர்**– ஒரு பிராமணன். நடுத்தர வயது. மிடுக்கான தோற்றம். பைண்டிங் அவனது தொழில். ஆசார அனுட்டானங்களுக்கு அப்பாற்பட்டவன். எதையும் ஒளிவு மறைவின்றி நேரிடையாகப் பேசுபவன்.

**லக்ஷ்மி**– கணவனால் கைவிடப்பட்ட ஒரு அபலை. ஆனால் கணவனை நேசிப்பவள். கடவுள் பக்தி மிக்கவள். சாதாரண தோற்றம். அடக்கமானவள்.

**தாவுத்**– சக்காராமின் நம்பிக்கைக்குரிய நண்பன். தமாசான பேர்வழி.

**சம்பா**– வசீகரத் தோற்றமும் வாலிப்பான உடற்கட்டும் கொண்டவள். துணிச்சல் மிக்கவள். லக்ஷ்மியை விட வயதில் குறைந்தவள்.

**ராஜேஸ்**– சம்பாவின் கணவன். ஒரு போலிஸ்காரன். மதுவுக்குத் தன்னை அடிமையாக்கிக் கொண்டவன்.

---

1985ம் ஆண்டு கொழும்பு மருதானை 'டவர்' மண்டபத்தில் இந்நாடகம் மேடையேறியபோது மேற்காணும் பாத்திரங்களில் தோன்றிய நடிப்புக் கலைஞர்கள்.

காலஞ்சென்ற **நடிகமணி. கே.ஏ.ஜவாஹர்**– தினகரன் தமிழ் நாடகவிழா-1969இல் கலைஞர் கலைச்செல்வன் எழுதிய 'மனிததர்மம்' நாடகத்தில் சிறந்த துணை நடிகருக்கான விருதும், அரச தமிழ் நாடகவிழா-1974இல் காலஞ்சென்ற எம்.எச்.பௌசுல் அமீர் எழுதிய 'பிள்ளை பெற்ற ராஜா' நாடகத்தில் சிறந்த நடிகருக்கான விருதும் பெற்றவர்.

**செல்வி. பிரியா ஜெயந்தி**–தேசிய நாடகவிழா-1974இல் 'பிள்ளை பெற்ற ராஜா' நாடகத்திலும், அரச தமிழ் நாடகவிழா-1978இல் மாத்தளை கார்திகேசுவின் 'ஒரு சக்கரம் சுழல்கிறது' நாடகத்தில் சிறந்த நடிகைக்கான விருதுகள் பெற்றவர்.

**கலாபூஷணம் எம்.எம்.ஏ.லத்தீப்**– 'லயனல் வெண்ட்' அரங்கில் நடைபெற்ற பிரிட்டிஷ் நாடகக் கலைஞரான ஏர்னஸ்ட் மெக்கின்ரயர் பயிலரங்கில் நடிப்புப் பயிற்சி பெற்றவர்.

**மணிமேகலை இராமநாதன்**– தினகரன் தமிழ் நாடகவிழா-1969இல் 'மனிததர்மம்', அரச தமிழ் நாடகவிழா-2004இல் எஸ்.பாக்கியராஜ் எழுதிய 'மனமாற்றம்' ஆகிய நாடகங்களிலும் நடித்து சிறந்த துணை நடிகைக்கான விருது பெற்றவர்.

**நடிப்புச்சுடர் ஜோபுநசீர்**– தேசிய நாடகவிழா 1974இல எம்.எச்.பௌசுல்அமீரின் 'தோட்டத்துராணி', அரச நாடகவிழா-2000இல் நீர்கொழும்பூர் முத்துலிங்கத்தின் 'மௌனத்திரை' ஆகிய நாடகங்களில் நடித்து சிறந்த துணை நடிகைக்கான விருது பெற்றவர்.

இயக்கம் - ***கலைஞர் கலைச்செல்வன்***

## அங்கம்: ஒன்று

## காட்சி : 01

**கதை நிகழும் இடம் : சக்காராம் பைண்டர் வீடு**

(அது ஒரு சேரிப்புறம். ஒரு மாலை நேரம். சக்காராமின் சிகப்பு ஓடு போட்ட வீடு. இரண்டு அறைகள். ஒன்று முன்னறை. பக்கத்தில் ஒரு சமையல் அறை. பின்னால் ஒரு ஜன்னல். இரு அறைகளும் பார்வையாளர்களுக்குத் தெரியக்கூடியதாக அமைந்துள்ளது. வெளியே பிள்ளைகளின் சப்தமும் ஜனசந்தடியும் கேட்கக் கூடியதாக இருக்கும்.)

**குரல் :** *இந்தியத் துணைக்கண்டத்தின் மாநில அரசான தமிழ் நாட்டில், பத்தினித்தெய்வமாம் கண்ணகி எரித்த மதுரை மாநகரில், பகல் வேஷத்தை எதிர்த்துவாழும் ஓர் அபூர்வ மனிதன். சக்காராம் என்பது அவன் பெயர். பைண்டிங் அவனது தொழில். அதனால் எல்லோரும் அவனை சக்காராம் பைண்டர் என்றழைத்தனர்.*

*தன்னை யார், எப்படி, எடை போட்டுக் கொண்டாலும் தன்மனசாட்சிக்கு சரி என்று பட்ட சில நியாயங்களைத் தன் வாழ்வில் தர்மங்களாக ஆக்கிக் கொண்டவன். நமக்கு அசிங்கமாக தோன்றுபவை அவனுக்கு அழகாக காட்சி அளிக்கும். நாம் மரத்தை நடுகிறோம். அவன் விதையைத் தேடுகிறான். நிலவுக்கும் ஆடை அணிவிக்க விழைகிறோம் நாம், நிலவானத்தையும் நிர்வாணமாக ரசிக்க விரைகிறான் அவன். அந்த வேகத்தில் தாகம் உண்டு, மோகம் உண்டு, சோகமும் உண்டு!*

**சக்காராம்:** *(மேடைக்குளிலிருந்து)* ஏன்டா டேய்! என்னடா சுத்தி வளைச்சி பார்க்குறீங்க? ஆங்!... என்னடா மொறைக்கிறே? வழிய விடுறா... *(மேடைக்கு வந்து கொண்டே)* ரேசன் கார்டை நம்பி இருக்கிற சோமாரி பசங்களுக்கு ரோசம் வேற... இந்தாடா துண்டு பீடி ! இது ஒன்னும் சந்தையில் உள்ள வேஸ்ட் இல்ல... இந்த சக்காராமோட கெஸ்ட்டு...

*(கதவை திறந்துவிட்டு திரும்பி பார்கிறான்)*

**சக்காராம் :** ஏன் அங்கேயே நின்னுட்டே... உள்ள வா...

*(சக்காராம் நடுத்தர வயதுடையவன். மீசையுடன் கூடிய மிடுக்கான தோற்றம். ஜாக்கட்டுடன் கூடிய ஒரு சல்வார் அணிந்திருக்கிறான்.*

*காலில் செருப்புப் போட்டிருக்கிறான். அவன் பின்னால் லக்ஷ்மி என்னும் பெண் தயங்கித் தயங்கி வருகிறாள். அவள் ஒரு சாதாரண அழகி. பயந்த சுபாபம் உடையவள். ஒருவித அடக்கமும் அவளிடம் காணப்படுகிறது. கையில் ஒரு துணி முட்டையுடன் நிற்கிறாள்)*

**சக்காராம்** : இது சக்கரவர்த்திகளோட அரண்மனை இல்ல. இந்த சக்காராம் பைண்டரோட அந்தப்புறம். என் சொந்த பங்களா... நல்லா பார்த்துக்கோ...

*(லக்ஷ்மி பயந்தவாறு ஒருசுற்று சுற்றி பார்க்கிறாள்)*

வீட்ட மட்டும் பார்க்காதே... என்னையும் ஒரு தரம் நல்லா பார்த்துக்க...

*(லக்ஷ்மி சக்காராமை தலை முதல் கால் வரை பார்க்கிறாள்)*

என்னப்போலத்தான் வீடும். வீட்டைப் போலத்தான் நானும்! ரெண்டும் உனக்கு பிடிச்சிதுன்னா உன் மூட்டைய அந்த மூலையில வை... பிடிக்கல்லே... இதோ இருக்கு வாசல்! தாராளமா நீ போகலாம். நான் உன்னோட முந்தின ஆள் மாதிரி இல்ல. நான்... நானதான். போகப்போக நீ அதை புரிஞ்சிக்குவே. ஆங்... ஒன்ன மட்டும் இப்பவே மனசுல வைச்சிக்க... எனக்கு பொசுக்குனு கோபம் வரும். கோபம் வந்ததுன்னா... *(லக்ஷ்மி பயப்படுகிறாள்)* ஒரு ருத்ர தாண்டவமே நடக்கும். நீ உள்ள வரும் போதே அதைப் பார்த்திருப்பே... நான் வாயத்தொறந்தேன்னா ஒன்னு பீடி புகையா வரும்... அப்படி இல்லேன்னா பச்சை பச்சையா *(லக்ஷ்மி இடத்தில் மெதுவாக)* அம்மாளும் ஆத்தாளும்தான் ஏலத்துக்கு வரும். *(லக்ஷ்மி கூச்சப்படுகிறாள்)*

ஏன்? திரு...திருன்னு முழிக்கிறே? முதல்ல உன் மூட்டைய இறக்கிவை *(தலையை ஆட்டுகிறாள்)* கவனமா கேட்டுக்க. நான் ஒன்னும் பெரிய பணக்காரன் இல்ல. அதனால பிச்சைக்காரன்னு நினைச்சிடாதே. பாலுக்கு வழியில்லையே தவிர கூலுக்கு பஞ்சம் இல்ல. ஆனா... உனக்கு இங்க ஒரு குறையும் இருக்காது. சாப்பாடு ரெண்டு வேலை. இப்போதைக்கு கட்டிக்க ரெண்டு சேல. அதுக்கு மேல எதையும் எதிர்பார்க்கக் கூடாது. ஆனா... ஒன்னு நீ இங்கே இருக்கிறதுன்னா வீட்டு வேலையெல்லாம் ஒழுங்கா நடக்கணும்.

ஒழுங்கு முறையா நடந்துக்க முடியாதுன்னா மூட்டைய தூக்கிட்டு இப்பவே போயிட வேண்டியதுதான். அப்புறம் என்ன குத்தம் சொல்லாதே. தப்பித்தவறி குத்தம் செய்தே... அப்புறம் ஈவு இரக் கத்தை இரவலுக்குக்கூட வாங்க மாட்டேன். நான் சொல்லுறபடி தான் நீ எல்லாம் பண்ணனும். வெளிய உள்ளவனுக நாலுபேர் நாலு விதமா பேசுவானுக. அது அவனுங்க பொழைப்பு. இந்த வீட்டுக்கு நான் தான் ராஜா. நான் தான் மந்திரி. இங்கே நான் வச்சா சட்டம். செறைச்சா மொட்ட... புரியுதா?

*(லக்ஷ்மி புரியுது என தலையை அசைக்கறாள்)*

அதோ... அங்க பாரு... அங்கே ஒரு கிணறு இருக்கு. அதைக் கொஞ்சம் தள்ளி போனேன்னா... காலைக்கடன்களை கழிக்கிற துக்கு டெம்பரரி செட் ஒன்னு இருக்கு... கோடைக் காலத்தில கிணத் துல தண்ணி வத்தி போகும். டைமுக்கு சப்ளை பண்ணுற கார்ப்ப ரேஷன் குழாயிலகூட தண்ணி வராது. இங்கே இருந்து அரை மைல் நடந்து ஆத்துக்குப் போய்த்தான் தண்ணி கொண்டுகிட்டு வரணும். மழைக் காலத்துல மட்டும் இந்த வீட்டை குத்தகைக்கு எடுத்திருக்கு ஒரு கூட்டம். மனுஷங்க இல்ல... இந்த தேள், பூரான், நட்டுவாக்காலி எல்லாம். ஆங்... இன்னொன்னையும் முக்கியமா கேட்டுக்க... காரணமில்லாம இந்த வீட்டுப்படியை தாண்டக் கூடாது. யாராவது உன்னோட வலிய வந்து பேசினா...தலைய நிமிர்த்தி பதில் சொல்லக் கூடாது.அதுவும் பழக்கமில்லாத ஆளா இருந்தா பல்லைக் காட்டவும் கூடாது. நான் இல்லாத நேரமா பார்த்து பொல்லாத பசங்க வருவானுக. ஒரு பயலையும் உள்ளே விடாதே... புரியுதா?... நான் ஒரு போக்கிரியா இருக்கலாம்... இருக்கலாம் என்ன... போக்கிரியேதான். அதோட நான் நல்லா குடிப்பேன். அது பாரீன் ஆகவும் இருக்கும். பட்டையாவும் இருக்கும். என்னை மதிச்சி நடந்தாத்தான் இந்த வீட்டுல இருக்கலாம். என்ன... சம்மதமா? இல்ல ஏதாவது சொல்ல இருக்கா?

*(சொல்ல வாயெடுக்கிறாள்)*

எதுவும் சொல்லத் தேவையில்லை. சொல்றதை கேக்கணுமே தவிர... எதிர்க்கேள்வி கேக்கக்கூடாது.

இஷ்டமுன்னா இருக்கலாம். இல்லேன்னா.... (வாசலைக் காட்டுகிறான்) சொல்ல மறந்துட்டேன் . மோஸ்ட் இம்போட்டன் சப்ஜெக்ட். (தலையால் முட்டுகிறான்) இங்கே இருக்கிற வரைக்கும் நீ எனக்கு பொண்டாட்டியாவும் நடந்துகிறனும். தலையில ஏதாச்சும் இருந்தா நான் என்ன சொல்றேன்னு புரியும் . நான் சொல்லுறதை சொல்லிட்டேன். அப்புறம் உன்பாடு... உங்கப்பன் பாடு...

(அவள் சம்மதம் என தலையாட்டுகிறாள்.)

**சக்காராம்** : பொழைக்கத் தெரிஞ்சவ.. உள்ளே போ...

(தனது மூட்டை முடிச்சிகளோடு சமையக்கட்டு பக்கம் விரைகிறாள்)

**சக்காராம்** : (சற்று அதிகாரத்தோடு) முதல்ல காப்பி போடு... சர்க்கரையும் காப்பி பவுடரும் அடுப்புக்குப் பக்கத்திலேயே இருக்கு...

(லக்ஷ்மி அடுப்புக்கு அருகில் நிற்கிறாள். சக்காராம் பீடியொன்றை பற்ற வைக்கிறான்.)

**சக்காராம்** : ஏய் ஒன்னத்தான். இங்கே இருக்கிற வரைக்கும் யாருக்கும் பயப்படத் தேவையில்ல.இந்த சக்காராம் யாருக்கும் பயப்படமாட்டான். வெறும் சால்ஜாப்புன்னு நினைச்சிக்காதே. எனக்கு ஆண்டவனும் ஒன்னுதான். அவன் அப்பனும் ஒன்னுதான்.

(லக்ஷ்மி மிரண்டு நிற்கிறாள்)

என்ன அப்படிப் பார்க்கிறே...? நான் பொல்லாத கில்லாடிதான் ஆனா மனசாட்சிக்கு மதிப்பு கொடுக்குறவன். நீதி, நேர்மை, நியாயம் பார்க்கிறவன்.சில பேருக்கு அது தப்பா படலாம் .என்னை பொறுத்தவரை நான் எதையும் ஒழிச்சு மறைச்சு செய்யிறதில்ல. எல்லாமே ஓப்பன் தான்... இதுவரையில என் மனசறிய யாருக்கும் துரோகம் பண்ணுனது இல்ல... ஏமாத்துனதும் இல்ல...

(ஜிப்பாவை கழட்டுகிறான்) ஏங்கிட்ட உள்ள ஒரே ஒரு ரகசியம்... இந்த உடுப்பு மட்டும்தான். நான் என்ன செய்தாலும் அதைத் தண்டோரா போட்டு இந்த உலகத்துக்கே சொல்ல ரெடி. எவனுக்காவது தெரிஞ்சிக்க ஆசையா இருந்தா உடனே வரச்சொல்லு. கையோட கூட்டிக்கிட்டு போய் ஒவ்வொரு விபச்சார விடுதியா காட்டி... பால் நிலவு பகல் நேரத்துல பாய் விரிச்ச கதையெல்லாம் சொல்லத்தயாரா இருக்கிறேன். நெஞ்சில கைவைச்சி நான் இப்படியெல்லாம்

நடந்தேன் அப்படின்னு என்னை மாதிரி சொல்ற தைரியம் எவனுக் காவது இருக்கா? ஆனா இப்ப எல்லா நான் அந்தப்பக்கம் போறதே இல்ல ஏன்னா... தொழில்ல சுத்தம் கம்மியாகிட்டுது. ஆனாப் போன காலத்துல பார்க்கணுமே... அங்கே வர்ற பயலுகள. பூனை மாதிரி வருவாங்க இருட்டுனத்துக்கு அப்புறம். அதே பயலுகள பகல் நேரத்துல பார்த்தா இந்த பூனையும் பாயாசம் குடிக்குமாங்குற மாதிரி நடந்துக்குவாங்க. திருட்டு பயலுக... வெளிச்சத்துக்கு வெக்கப்படுறவனுக்கு வெளிப்படையாக ஒன்னையும் செய்யிற துணிவு கிடையாது. ஒன்னத்தான் கேட்கிறேன் (அவள் அருகில் போகிறான்) அங்கே போறதுல என்ன தப்பு? பாவம்ங்கிறியா? பாவமான இந்த ஒடம்பை ஏன் படைச்சான்? ஆதாம் ஏவால படைக்கிறபோதே இப்படியெல்லாம் நடக்குமுன்னு ஏன் தெரியாமப் போச்சுது? நாம என்ன ஆசைகளை அடக்கி ஆளுற முனிவர்களா? ஆசாபாசங்களை குடங்குடமா கொட்டி வச்சிருக்கிற சாதாரண மனுஷங்க (கை இரெண்டையும் முன்னால் கட்டிக்கொண்டு) தெரியாமத்தான் கேக்குறேன். சாமியை கும்பிட்டா மட்டும் போதுமா? மனுஷனுக்குதான் ஒரு இச்சை இருக்கே... இதுல வெக்கப்படுறதுக்கு என்ன இருக்கு? யார்கிட்ட ஒளிக்கிறது? நம்ப அப்பன்கிட்டேயா?

(லக்ஷ்மி கதவோரயாய் வந்து நிற்கிறாள். மெதுவாக செருமுகிறாள்)

**சக்காராம்**: என்ன வேணும்...? பேசேன்...? நான் பேசுறதை கேட்கிறதுக்கு அசிங்கமா இருக்கா...? நான் அம்மணமாத்தானே பொறந்தேன்... பெரியவனானதுக்கு அப்புறமும் "வெட்கங்கெட்ட கழிசடை" அப்ப டீன்னு அம்மா திட்டுவா. மேல்ஜாதி பிரமண வீட்டுல ஒரு கீழ் ஜாதிப் பய பொறந்திருக்கான்னு அம்மா அடிக்கடி சொல்வா. நான் கீழ் ஜாதியா இருந்தா என்னை பெத்தவளும் நான் பொறக்கிறத் துக்கு காரணமாயிருந்தவரும் என்ன சாதி?

**லக்ஸ்மி**: (அதிர்ச்சியுடன்) ராம்... ராம்!...

**சக்காராம்**: ஏன்...ஏன்... எதுக்கு நீ பதர்றே... நீயும் பிராமணப் பொண்ணா? (இல்லையென தலை அசைக்கிறாள்) இதுதான் உலகம்... நீ பிரா மணக் குலத்துல பொறக்கல்ல. ஆனா பிராமணப் பொண்ணு

மாதிரி நடந்துக்குறே...? உயர்ந்த ஜாதியில பொறந்தும் நான் தாழ்ந்த ஜாதிக்காரனாகிட்டேன். ஆமா... நான் காப்பி போடச் சொன்னேன் இல்ல...?

**லக்ஷ்மி :** தீப்பெட்டி...

**சக்காராம் :** இந்தா...

(தீப்பெட்டியை நீட்டுகிறான். அதை வாங்க அவள் கூச்சப்படுகிறாள்.)

அட எதுக்கு இப்படி வெட்கப்படுறே....? வெட்கம் வரவேண்டிய நேரத்துலதான் வரணும்.எல்லா நேரத்துலேயும் வந்தா வெட்கத் துக்கு வெட்கம் இல்லாமப் போயிடும் ... என்ன வேணும்னாலும் ஏங்கிட்ட கேளு... கிடைக்கல்லேன்னா குத்தம் சொல்லாதே...

(போவதற்கு திரும்பியவள் நிற்கிறாள்)

இன்னும் ஏன் நிக்கிறே?... ஓ! காப்பி பவுடரா... ஏதாச்சும் ஒரு டப்பாவுல இருக்கும் பாரு... டப்பா காலியா இருந்ததுன்னா... உனக்கு முன்னாடி இங்க இருந்தவ முடிச்சிருப்பா... அவளுக்கு 'எனி டைம் இஸ் டீ டைம்.' போனகிழமையே போயச் சேர்ந் துட்டா....

**லக்ஷ்மி :** சாமி படம் எங்கே இருக்கு...

**சக்கா :** ஓ... சாமியா...? இங்கே எங்கேயாவது கெடக்கும். கொஞ்ச நாளைக்கு முன்னால ஒருத்தி இருந்தா. அவதான் சதா சாமி கீமின்னுகிட்டு இருப்பா... அவதான் தூக்கிக்கிட்டு போயிட்டாளோ தெரியல.

(அவள் போகிறாள். சக்காராம் தொடர்ந்து பேசுகிறான்.)

**சக்காராம்:** (பார்வையாளர்களை நோக்கி) பின்னால வந்தவளுக்கு அந்த பைத்தியமில்ல. புருஷனோட சேட்டை தான் கும்பிடுவா...? அப்படி ஒரு கெரெக்டர். அவ புருஷன் அவளை சாகடிக்க துடிச்சான் அப்பவும் அவன்தான் அவளோட தெய்வமாம். சாப்பாடு போட்டு காப்பாத்துன நான் சாதாரண மனுஷனாம். பக்தமீரா... அவகிட்ட பிச்சை வாங்கணும். ரெண்டு வருஷமா புருஷன் சட்டைக்கு பூஜை பண்ணுனா... பாவம்... அவளுக்கு டீ.பி. ஆஸ்பத்திரிக்கு கூட்டிக் கிட்டு போனேன். அங்க வைச்சே குட் பாய் சொல்லிட்டா. அப்பவும் புருஷன் சேட்டை மார்போடு அணைச்சப்படிதான் மண்டைய

போட்டா. நீ சீக்கிரமாய் காப்பியை போடு. எனக்கு சர்க்கரை வியாதி ஒன்னும் கிடையாது. அதனால சர்க்கரையை தாராளமா போடு... டிகாசும் ஜாஸ்தியா இருக்கணும். சீக்கிரம் கொண்டா...

(சக்காராம் பாயை கொண்டு வந்து போடுகிறான். பின்பு மிருதங்கத்தை கையில் எடுக்கிறான்... ஓரிடத்தில் அமர்ந்து அதை தட்டுகிறான். லக்ஷ்மி காப்பியோடு வருகிறாள். அவன் அருகில் வந்து கனைக்கிறாள். சக்காராம் காப்பியை வாங்கி குடித்து விட்டு...)

**சக்காராம்:** ஹ ஹ் ஹ ஹ் ஹா... (சிரிக்கிறான். அவள் திகைக்கிறாள்) ரொம்ப டேஸ்டா இருக்கு. நீயும் சாப்பிடு. நான் சொல்லுறவரைக்கும் பார்த்துக்கிட்டு இருக்காதே...

(அவள் உள்ளே போகிறாள். தாவுத் வெளியிலிருந்து வருகிறான்.)

**தாவூத்:** (வாசலில் நின்று) சக்காராம்...

**சக்காராம்:** தாவுதா... வாப்பா உள்ளே ... உட்காரு...

**தாவூத்:** நமஸ்தே ஜீ...

**சக்காராம்:** சலாம் சஹாப்

(இருவரும் சிரிக்கிறார்கள்.)

**சக்காராம்:** இந்தா... உன்னைத்தான். இன்னொரு காப்பி எடுத்துக்கிட்டு வா....

**தாவுத்:** புதுக் குடித்தனத்துக்கு புதிய பறவை வந்ததா நிவுஸ் கிடைச்சிது.

**சக்காராம்:** அடிரா சக்கைன்னானாம். அதுக்குள்ள அதுவும் தெரிஞ்சிட்டுதா...?

**தாவுது:** அது கிடக்கட்டும் ஆள எங்க பிடிச்சிங்க...?

**சக்காராம்:** கழுதை கெட்டா குட்டிச்சுவரு. சீரழியிற சீதைகளுக்கு அடைக்கலம் கொடுக்கிறது ஒன்னு பஸ் ஸ்டாப்பு... இல்லேன்னா... நம்ப மங்கம்மா சத்திரம். இது சத்திரம் கேசு. அதான் நம்ப சாவடிக்கு கூட்டியாந்தேன்.

**தாவுத்:** சக்காராமா கொக்கான்னேன்.! சும்மா சொல்லப்படாது கன்னிராசி ரொம்ப தான் டால் அடிக்குது பொண்ணு எப்படி?

**சக்காராம்:** ஒரு காலத்துல நல்லா இருந்திருப்பா... இப்போ சாறு போயிட்டுது. சக்கைதான் மிச்சம். இந்த புருஷன்மார்க இருக்கானுகளே இவனுகளுக்கு ஒரு புள்ளை பெத்துப்போட தெம்பில்ல. ஆனா பொண்டாட்டிக்கிட்ட வீரத்த காட்டுறதுல மட்டும் கொறவைக்க மாட்டானுங்க. அவளுகள போட்டு அடிக்கிறதும்.... ஒதைக்கிறதும்,....

மிதிக்கிறதும்..... பொறுக்கிப்பயலுக.

*(லக்ஷ்மி காப்பியோடு சமையலறை வாசலில் நிற்கிறாள். சக்காராம் அவள் அருகே போய்....)*

என்ன...? என்ன யோசிக்கிறே...? நான் பொம்பளைங்களை அடிக்கிறது இல்லேன்னா... தப்பு... நானும் விளாசித் தள்ளிடு வேன். ஆனா இந்த காதுல பூ வச்சிருக்கிறவனுங்க மாதிரி என் வீரத்தை காட்டுறதுக்காக இல்ல. நான் இந்த மிருதங்கம் மாதிரி. ஓங்கி அடிச்சா 'ஓன்னு' சத்தம் கேக்கும். ஒழுங்கா வாசிச்சா... சுதி சூப்பரா இருக்கும் . *(காப்பியை பருகிக்கொண்டு)*

இப்போ பாரு... நான் ஒரு புருஷனா. இல்லாம இருக்கிறது எவ்வளவு நல்லதா போச்சு. இருந்தாலும் இப்படி வாழ்றதுல ஒரு புருஷனுக்கு கிடைக்கிற எல்லா சுகத்தையும் நான் அனுபவிக் கிறேன். அதே நேரத்துல அவனுக்கு இருக்கிற பொறுப்பும் இல்ல ... பேர் சொல்றதுக்கு ஒரு பிள்ளையும் இல்ல. எப்போ எனக்கு போதுமுன்னு படுதோ. எப்போ அவளுக்கு தேவையில்லேன்னு தோணுதோ... அப்பவே ரெண்டு பேரும் பிரிஞ்சிக்கலாம். அதுக்கு தடை போட எந்த "லா"வும் குறுக்கே வரமுடியாது. இதனால என்ன லாபமுன்னு கேக்குறியா...? அவளுக்கு ஒருத்திக்கு ஒருத்தன் என்ற பெருமை. எனக்கு ஓட்டல் சாப்பாட்டுக்கு பதிலா வீட்டு சாப்பாடு கிடைச்சா அருமை. இந்த அருமை பெருமையெல்லாம் அம்மி மிதிச்சு. அருந்ததி பார்த்து கல்யாணம் கட்டுறதுல கிடைக்குமா? கிடைக்காது. அதனால... என்ன நடக்கும்... கோவலன் வேஷத்துல மாதவி வீட்டுக்குத்தான் போகனும். நான் உண்மையத்தான் சொல்றேன். எனக்கு ரெட்டை நாக்கும் கிடையாது. ரெட்டை அர்த்தத்துல பேசுறதும் பிடிக்காது.

**தாவுத்** : கதைய முடிங்க. கச்சேரிய ஆரம்பிப்போம்

**சக்காராம்** : கச்சேரியா?.... ஓ...! கஞ்சாவா...?, கஞ்சாவ கஞ்சான்னு சொல்ல வேண்டியதுதானே. அதுக்கு வேற வெக்கம். தாவுது! இந்த கப்பல் இருக்கே... அதான் கஞசா. இது சின்ன வீடு இல்ல. சிறுக்கி மாதிரி. ஒன்னு சொல்றேன் கேளு. இந்த தாசி பொம்பளைங்க இருக்காளுகளே... அவளுகள அந்த காலத்தில "ஆண்டவனுக்கு

அடியாள்ன்னு" சொல்லுவாங்க. அது கரெக்ட்டு. இன்னைக்கும் நம்மை எல்லாம் விட ஆண்டவன்கிட்ட போய் அவளுகளாலதான் தைரியமா நிற்க முடியும். அவளுக டைரெக்டா ஆண்டவன்கிட்ட சொல்லலாம் "அப்பனே சாமி ...! நீ என்ன படைச்சதுதான் படைச்சே... கூடவே ஏன் பசியையும் படைச்சே... பசியை போக்கிறதுக்கு வேறு வழி கிடைக்கல்ல. அதனாலே இந்த வழிக்கு வந்துட்டேன். ஆனால் வழிபிசகல்ல வழி தவறி நடந்த ஜென்மங்களுக்கு வஞ்சகமும் பண்ணல்ல. இந்த ஆம்பளைங் களுக்கு வச்சிருக்கியே ஒரு ஆசை. அடங்கா ஆசை... அந்த ஆசை... வெறிக்கு கல்யாணமாகாத கன்னிப் பொண்ணுக தப்பிக்கிறத்துக்கும், கழுத்துல தாலி விழுந்ததுக தப்புத் தண்டா பண்ணாம இருக்கிறதுக்கும் நான் என்னைய பலியாக்கிட்டேன். இது தப்பா... ஒன்னோட சந்நிதியிலே சமத்துவம். என்னோட சந்நிதியிலே சமதா்மம். ஏழை,பணக்காரன், படிச்சவன், பாமரன், பலசாலி, நோஞ்சான் அப்படீங்கிற வித்தியாசம் பார்க்காம, தரிசனம் கொடுத்து உதவினேனே தவிர, வேறொன்றும் அறியேன் பராபரமே"ன்னு ஒரு தாசியைத் தவிர வேறு யாராலே மேல இருக் கிற அப்பன்கிட்ட நின்னு சொல்ல முடியும்? கொஞ்சம் பொறு... நெருப்பு எடுத்துக்கிட்டு வாரேன்.

*( ஒரு சாமி படத்துடன் லக்ஷ்மி எதிரே வருகிறாள் )*

**லக்ஷ்மி :** சாமி படம்...

**சக்காராம் :** சரி.. கொண்டு வைச்சிக்க.. இப்ப கொஞ்சம் தணல் வேணும்...

*( லக்ஷ்மி பக்குவமாக வைத்து அதன் முன் அமர்கிறாள் )*

**சக்காராம் :** *( சற்று அதட்டலாக )* ஏய்! நெருப்புத்தணல் வேணும்...

*( திடுக்கிட்டு எழுந்து அவள் உள்ளே போகிறாள் )*

இந்த மிலிட்ரிகாரங்கள மாதிரி ராத்திரி ஏழு மணிக்கு எனக்கும் சாப்பாடு இருக்கணும். காரம் நிறைய இருக்கணும். ஏதாவது ஒரு டப்பாவுல மாவு இருக்கும். கூடையிலே மிளகாய் இருக்கும்

*( ஒரு தட்டில் தணல் கொண்டு வந்து கொடுக்கிறாள் )*

உனக்கு சாதம்தான் வேணும்னா இங்கே எங்கயாவது தேடிப் பாரு... அரிசி இருக்கும். உனக்கு முன்னாலே இருந்தவளும்

இப்படித்தான். எப்ப பார்த்தாலும் சோறுதான். இரவுல நமக்கு சோறுன்னா அலர்ஜி.

(லக்ஷ்மி சமைக்கத் தொடங்குகிறாள். சக்காராம் மிருதங்கத்தை வாசிக்கிறான். தாவுத் ரசித்து பாடுகிறான். மேடையில் ஒளி மங்குகிறது - மிருதங்கம் ஓசை மட்டும் ஒலித்துக்கொண்டிருக்கிறது.)

(மேடை முழுவதும் இருள்)

## காட்சி : 02

*(பின்னணியில் மிருதங்க இசை மெல்ல ஒலித்துக்கொண்டிருக்கிறது மேடையில் இருள் விலகி வெளிச்சம் பரவுகிறது. இரவு நேரம். சக்காராம் மிருதங்கம் வாசித்துக்கொண்டிருக்கிறான். சாமி படத்தருகே ஒரு சிட்டி விளக்கு எரிகிறது. சக்காராம் மிருதங்கத்தை எடுத்து வைத்துவிட்டு வெளியே போகிறான். பஜனையில் இருந்த லக்ஷ்மி எழுந்து வீட்டை பெருக்குகிறாள். பின் ஒரு விரிப்பை போடுகிறாள். சக்காராம் அதை கவனித்தவாறு வருகிறான் அவள் அந்த இடத்தை விட்டு அகலும் போது...)*

**சக்காராம்** : இங்கேயே தூங்கிட்டா என்ன?

*(போர்வையை கொடுத்துவிட்டு அவள் சமாளித்துக்கொண்டு மெல்ல நகரும் போது )*

இப்படி உட்காரு... நான் சொல்றது காதுல விழல்ல. இப்படி இருந்து என் காலைப்புடிச்சிவிடு. தினம் நீ தூங்க போறத்துக்கு முன்னால என் காலைப் புடிச்சிவிடனும். அது தான் இங்கே வழக்கம் எவ வந்தா என்ன?... எவ போனா என்ன?... வழக்கம் வழக்கம் தான் . ம்... காலை புடிச்சிவிடு...

*(சக்காராமின் விரிப்பில் அவள் உட்காருகிறாள் )*

நான் என்ன வெள்ளைக்காரன் பாஷையிலேயா பேசுறேன். காலைப் புடிச்சுவிடு

*(அவள் அவசரமாகவும் பயத்தோடும் சற்றுத் தள்ளி அவன் காலருகே உட்காருகிறாள் )*

மெல்லமா புடிச்சிவிடு

*(அவள் அரை மனதோடு காலை அழுத்துகிறாள் )*

இன்னும் கொஞ்சம் மேல... ஒழுங்கா புடிச்சிவிடேன். என் கால் என்ன கடிக்கவா போகுது...? அநியாயம் சொல்லக் கூடாது. மசாஜ் கிளினிக் காரிக இந்த விஷயத்துல ரொம்ப கெட்டிக்காரிக. உன்னே கூட்டியாரதுக்குதானே இவ்வளவு நடை. தொடை ரெண்டும் புண்ணாக்கிட்டுது.

*(அவள் அமைதியாக காலைப் பிடித்து விடுகிறாள் )*

ஆமா... இவ்வளவு நேரமா உன் பேரைக் கேட்க மறந்துட்டேனே! உன் பேரு என்ன ?

**லக்ஷ்மி :** லட்சுமி

**சக்காராம் :** லக்ஷ்மின்னு அழகா சொல்லு... பேர் நல்லாதான் இருக்கு. என்ன லக்ஷ்மி? ராஜலக்ஷ்மி, அஷ்டலக்ஷ்மி... கஷ்டலக்ஷ்மி... அப்படீன்னு ஏதாவது...

**லக்ஷ்மி :** இருக்கு...

**சக்காராம் :** என்ன அது?

**லக்ஷ்மி :** தனலக்ஷ்மி

**சக்காராம் :** தமிழ்நாட்டுக்காரனுக்கு தலையில சரக்கே இல்ல. பேரு வைக்கிறத் துல கூட வெவெஸ்தை கிடையாது. தங்கமுன்னு பேரு வைப்பாங்க காதுல கழுத்துல ஒண்ணும் கெடக்காது. கண்ணப்பன்னு பேரு வைப்பான். ஆளைபார்த்தா ஒன்றரை கண்ணனா இருப்பான். அதுபோலதான் உனக்கும். காது கழுத்தில ஒரு பொட்டு தங்கம் கிடையாது. பேரு மட்டும் தனலக்ஷ்மி. போகட்டும் உன் புருஷன் பேரு?

(அவள் பதில் சொல்லாது இருக்கிறாள்)

உன்னைத்தான் கேடக்குறேன். உன் புருஷன் பேரு என்னா? ஓ...! புருஷன் பேரு சொன்னா பண்பு கெட்டுபோயிருமோ? இந்தப் பட்டிக்காட்டு பழக்கம் எல்லாம் நமக்கு பிடிக்காது.

(கண்களில் வழியும் கண்ணீரை சேலைத் தலைப்பால் அடைத்துக் கொள்கிறாள்)

இப்ப என்ன நடந்திட்டுது? சரி... சரி... விடு. நான் கேட்கல்ல. எல்லா சனியன்களும் இப்படித்தான். புருஷன்னு சொன்னா போதும் கண்ணீர் பொல பொலன்னு கொட்டிடும். அவனுங்க உங்கள போட்டு அடிக்கட்டும் மிதிக்கட்டும் ஏன் வீட்டை விட்டே துரத்தட்டும். அப்பவும் அவனுங்கதான் உங்களுக்கு சாமி. அந்த ஆசாமிகளுக்கு எதால பூஜை பண்ணனும் தெரியுமா? செருப்பால...! சரி சாப்புட் டியா? ஏய்! நான் ஏதாவது கேட்டா டக்குடக்குன்னு பதில் சொல்ல ணும். நீ சாப்புட்டியா?

(இல்லையென தலை அசைக்கிறாள்)

**சக்காராம்** : ஏன்னு சொல்லேன்...?

(போர்வையைத் தூக்கி எறிகிறான். அவள் பயத்தோடு எழுந்து நிற்கிறாள்)

**லக்ஷ்மி:** இன்னைக்கு சதுர்த்தி... அதோட எனக்கு பசிக்கல்ல.

சக்கா : ஓ... விரதமா..? விரதம் பிடிச்சிருக்கேன்னு சொல்றதுக்கு என்ன...? காலையிலயும் சாப்பிட்டிருக்கமாட்டே... நேத்து ராத்திரி...?

(இல்லையென தலை அசைக்கிறாள்)

நேத்தும் விரதமா... என்ன விரதம் பிடிச்சே சாகப்போறியா?

**லக்ஷ்மி** : இது என்னோட பழக்கம்...

**சக்காராம்** : பழக்கமா? வயித்துக்கு மட்டும் வஞ்சகம் செய்யாதே...அதோட இந்த பழக்க வழக்கத்தையெல்லாம் இன்னையோட நிறுத்திக்க... ஒரு நாளைக்கு ரெண்டு தடவை வயிறார சாப்பிடனும். என் உடம்பு மாதிரி ஜம்முன்னு இருக்கனும். இதெல்லாம் எதுக்கு சொல் றேன்னு புரியனும். சரி போய்த் தூங்கு...போ...

**லக்ஷ்மி** : ஒன்னு கேட்கனும் கேக்கலாமா?

**சக்காராம்** : என்ன கேக்க போறே...?

**லக்ஷ்மி** : இந்த திரி எங்கே இருக்கு? சாமிக்கு விளக்கேத்தனும்.

**சக்காராம்** : கஞ்சா எங்கே இருக்கு மில்லி எங்கே இருக்குன்னு கேளு... சொல்றேன்... திரி எங்கே இருக்குன்னு மட்டும் கேட்காதே.... ஏன்னா உனக்கு முந்தி இருந்தவ எங்கேயாச்சும் வைச்சிருப்பா...

**லக்ஷ்மி** : (ஆவலோடு) அவ எப்படி இருப்பா...? எனக்கு முந்தி இருந்தவ..?

**சக்காராம்** : போச்சுடா... நீ ஒருத்திதான் இந்த கேள்வியை கேட்க மாட் டேன்னு நினைச்சேன். நீயும் கேட்டுட்டே... விஷேசமா ஒண்ணும் இல்ல. காத்துப்போன பொம்மை எப்படி இருக்குமோ அசல் அப்படித்தான் இருப்பா?...

**லக்ஷ்மி** : பிள்ளைங்க...?

**சக்காராம்** : ரெண்டு பேரு... அதை அவன் புருஷனே வச்சிக்கிட்டான். அவ ளுக்கு அதுதான் வருத்தம். கடைசி நேரத்திலேயும் புள்ளைய கேட்டா... சாகப்போகிறவளுக்கு கடைசிவாய் தண்ணி ஊத்துன வன் நான். என்னை பத்தி ஒரு வார்த்தை. ஊஹூம்.... நான்தான் கொள்ளி வைச்சேன். அதுக்குக் கூட அவளுக்கு ஒரு நாதியில்ல. வீட்டுக்கு வந்து தலை முழுகினேன். அவ நெனைப்பு அதோட சரி...

எவ ஒருத்தி இந்த வீட்டுல கால் எடுத்து வைக்கிறாளோ... அவ இந்த வீட்டுக்கே சொந்தமாகிடுவா. எப்போ அதே காலை வெளியே வைக்கிறாளோ... அப்பவே எனக்கும் அவளுக்கும் சொந்தமும் இல்ல. பந்தமும் இல்ல. ஏய் இப்படி வா. அந்த நேரத்திலேயும் ஒரு நியாயத்தை நான் கடைப்பிடிக்கிறேன். இங்கே இருந்து ஒவ் வொருத்தியும் பிரிஞ்சி போறப்போ... கட்டிக்க ஒரு சேலை. கையில அம்பது ரூபா காசு. கடைசியாப் போய்ச் சேரவேண்டிய இடத்துக்கு ஒரு ரெயில் டிக்கட்டு... இவைகள தவறாம கொடுத்திடுவேன். கவலைப்படாதே உனக்கும் அந்த சலுகை கண்டிப்பா உண்டு. போய்த்தூங்கு. சொன்னதை மறந்திடாதே... விரதம் கிரதம் இருந்து உடம்பை கெடுத்துக்காதே. உன் உடம்புல உனக்கு அக்கறை இல்லாமல் இருக்கலாம். எனக்கு அக்கறையே அதுல தான். புரியுதா...? காலையில ஏழு மணிக்கு பிரஸ்ல நிக்கணும். மத்தியானம் ரெண்டு மணிக்கு சாப்பாட்டுக்கு வருவேன். அப்புறம் "ஒன் அவர் ரெஸ்ட்டு..." திரும்ப மூணு மணிக்கு போயிடு வேன்...ம்...(பெரும் மூச்சு) இன்னைக்கு உன்னாலே என் எல்லா வேலையும் பாழாயிட்டுது பரவாயில்ல... நாளைக்கு ஓவர்டைம் செஞ்சுட்டா போச்சுது...

*(சக்காராம் படுக்கையில் சாய்கிறான். அவள் அடுக்களையில் அமர்ந்திருக்கிறாள்.)*

**(மேடையில் இருள் சூழ்கிறது)**

## காட்சி : 03

(மேடையில் ஒளி பரவுகிறது லக்ஷ்மி அடுக்களையில் அமர்ந்திருக்கிறாள். இப்பொழுது அவள் சிறிது களைப்பாக காணப்படுகிறாள்)

**லக்ஷ்மி:** தள்ளிப்போ ...ஏய் என்னை ஏமாத்தவா பார்க்கிறே? சும்மா... அட சும்மா இருடா... மேலே ஏறாதே போக்கிரி. ஏய்... இப்போ தான் தூக்கி எறிஞ்சேன் அதுக்குள்ள வந்துட்டியா? களவாணிப்பயலே! எந்த நேரமும் சாப்பாடா வேணும். சீ... நீ கெட்டுப்போயிட்ட. ம்... தர மாட்டேன். இப்ப ஒன்னும் கெடைக்காது. போன்னா... சொன்னா கேக்கமாட்டே? அப்படி பாக்காதே... போ... கிட்டவராதே. கேக்கலையா உனக்கு? வந்தே... உதைப்பேன். ஏய் மேலே ஏறாதே. போன்னா.. காது கேக்கலையா? போ... தூரப்போ... முதல்ல கீழே இறங்கு. ஏன் என்னை தொந்தரவு பண்றே? இறங்கு... மேலே ஏறாதே போ...

(வேலையைவிட்டு வெளியில் இருந்து வரும் சக்காராம் அதைக் கேட்டு, ஆத்திரத்துடன் அடுக்களைக்குள் போகிறான். லக்ஷ்மி தனியே இருந்து நெளிந்து நெளிந்து சிரித்துக்கொண்டிருக்கிறாள். அவனைக் கண்டவுடன் சிரிப்பை நிறுத்தி எழுந்து ஒதுங்கி நிற்கிறாள்.)

**சக்காராம்:** இங்க என்ன நாடகம் நடக்குது? (லக்ஷ்மி தலையாட்டுகிறாள்) அப்போ ஏன் ஹிஹிஹீன்னு சிரிச்சே. யாரோட பேசிக்கொண்டிருந்தே... (அவள் சிரிப்பை அடக்கிக்கொள்கிறாள்) உனக்கென்ன பைத்தியமா? ஒம்பாட்டுக்கு பேசிக்கிட்டிருக்கே. யாரோட பேசிக் கொண்டிருந்தே?

(சக்காராம் வெளியே வந்து சட்டையை கழற்றிக் கொண்டு....)

(தனக்குள்) என்னடா இது! தனக்குத்தானே பேசிக்கொள்றா? இது ஒரு டைப்பு.

(லக்ஷ்மி வெளியே வந்தது கீழே குனிந்து எதையோ பார்கிறாள்.)

இந்தா... இந்த பைத்தியக்காரதனமெல்லாம் இங்கே வைச்சிக் கிறாதே. சிரிக்கிறாளாம் சிரிப்பு...

(வெளியறைக்கு வந்து ஒரு பாயில் உட்கார்ந்து கொள்கிறான் சக்காராம். லக்ஷ்மி அருகில் வந்து உட்கார்ந்து காலை பிடித்துக்கொண்டிருக்கிறாள்.

இருவரும் ஒருவரையொருவர் பார்க்கின்றனர். கண்கள் சந்திக்கின்றன. சக்காராம் அவள் கையைப்பிடித்து... )

**சக்காராம்** : ஏன் அப்போ சிரிச்சே ?

**லக்ஷ்மி** : (கையை பறித்துக்கொண்டு) யாராவது பார்த்திடப் போறாங்க...

**சக்காராம்** : நான் யாருக்கும் பயந்தவனில்ல...

**லக்ஷ்மி** : இருங்க ... காப்பி எடுத்துகிட்டு வர்ரேன்..

**சக்காராம்** : சீக்கிரம் வா

(லக்ஷ்மி உள்ளே போய் காப்பி கொண்டு வந்து கொடுக்கிறாள்)

இப்படி இரு... (அவள் நிற்கிறாள்) இப்படி உட்காரு... (மரியாதையாய் தள்ளி உட்காருகிறாள்) இதென்ன மரியாதை கட்டின பொண்டாட்டி மாதிரி. ஏய்...பக்கத்துல வா... (அருகில் இழுத்து தேநீர் கொடுக்கிறான்) சாப்பிடு...

**லக்ஷ்மி** : எனக்கு அங்கே இருக்கு.

**சக்காராம்** : பல்லை உடைச்சுடுவேன்... இந்த மாதிரி பேசினா. நான் என்னோட டம்ளரிலிருந்து கொடுக்கிறேன் எனக்கு உள்ள இருக்காம் இந்தா... குடி...

(அவள் ஒரு வாய் குடிக்கிறாள். பின்பு போதும் என கையால் காட்டுகிறாள் சக்காராம் மிகுதியை குடித்துவும், டம்ளரோடு உள்ளே போக எத்தனிக்கிறாள் )

இந்தா உண்மையைச் சொல்லு... அப்போ யாரோட சிரிச்சுக் கிட்டிருந்தே.....?

**லக்ஷ்மி**: ஒருத்தரோடேயும் இல்லே...

**சக்காராம்** : நான் என்ன கனவா காண்கிறேன்?

**லக்ஷ்மி** : இல்லே...

**சக்காராம்** : அப்படீன்னா..

**லக்ஷ்மி** : ஒன்னும் இல்ல...

**சக்காராம்** : ஒன்னும் இல்லையா?

**லக்ஷ்மி** : ஒரு எறும்போட ...

**சக்காராம்** : என்ன எறும்போடயா?

(ஆம் என தலையை அசைக்கிறாள்)

**லக்ஷ்மி** : ஒரு கறுப்பெறும்பு...

**சக்காராம்** : அந்த கறுப்பெறும்பு உன்ன பார்த்து பேசிச்சாக்கும்...
(எழும்புகிறான்)

**லக்ஷ்மி** : ம்... இல்ல... இல்ல... நான் தான் எறும்புக்காகவும் பேசினேன்.

**சக்காராம்** : உனக்கென்ன பைத்தியமா? எறும்போட பேசினாளாம்? அந்த எறும்பை உனக்கு தெரியுமா?

**சக்காராம்** : ஓ... நான் சக்கரை போடுவேன். அது ஓடி வருமாக்கும்.

**சக்காராம்** : ஏதோ ஒரு எறும்புதான் இங்க இருக்கிற மாதிரி. இங்கதான் ஆயிரக் கணக்கில இருக்கே... ஏதாவது ஒரு எறும்பு வந்திருக்கும்...

**லக்ஷ்மி**: இல்ல... அந்த எறும்பை எனக்கு அடையாளம் தெரியும்

**சக்காராம்** : அதெப்படி?

**லக்ஷ்மி** : எப்படியோ... அது வந்தா எனக்குத் தெரியும்.

**சக்காராம்** : அதுதான் கேட்கிறேன் எப்படித் தெரியும்...?

**லக்ஷ்மி** : அது நடக்குற மாதிரியில தெரியும்.

**சக்காராம்** : நடக்குற மாதிரியில இருந்து உனக்கு அடையாளம் தெரியுமா?

**லக்ஷ்மி** : சத்தியமாதான் சொல்றேன். அது ஓடி வராது. மெல்லமா நடந்து தான் வரும். சர்க்கரைய வாயில கவ்வுரதுக்ககு முன்னால் ஒரு சுத்து சுத்தி வருவான்.

**சக்காராம்** : சுத்தி வருவான்... யாரது...?

**லக்ஷ்மி** : அந்த எறும்புதான்.

**சக்காராம்** : அதுகூட ஆம்பள எறும்பு. அதுவும் உனக்கு தெரியுது. பரவா யில்ல... அப்புறம் என்ன பண்ணுவான்?

**லக்ஷ்மி** : சர்க்கரைய தின்னுட்டு வாய தொடச்சிக்கிருவான்.

**சக்காராம்** : அதுவும் பரவாயில்ல. அதுக்கு அப்புறம் என்ன செய்வான்.

**லக்ஷ்மி** : இப்ப ரெண்டு நாளா... சர்க்கரைய தொடாம நேரா எங்கிட்டவே வர்றான்.

**சக்காராம்** : சபாஷ் ! கெட்டிக்காரன். என்னையும் மிஞ்சிட்டான் உன்னோட எறும்புபய ....

**லக்ஷ்மி** : என் மேல ஏறிடுவான்.

**சக்காராம்** : (மிகவும் ரசித்தப்படி) ஸ்.... நல்லது..... அப்புறம்...?

**லக்ஷ்மி** : கீழே இறங்கவே மாட்டான். என்ன செஞ்சாலும் என்னை விட்டு போகவே மாட்டான். அவனை கூட்டியாந்து காட்டவா?

**சக்காராம்** : யாரை... எறும்பையா? இந்தா லக்ஷ்மி... இங்க பாரு... எனக்கு இன்னும் மூளைக்கோளாறு உண்டாகல்ல. எறும்பு பேசுதாம். இந்த மாதிரி கதையெல்லாம் என்கிட்ட சொல்லாதே. இங்க நீ இருக்கனும்னா இந்தப் பைத்தியக்கார தனத்தையெல்லாம் விட்டுடனும்... புரியுதா? சரி போய் வேலையைப் பாரு...

*(லக்ஷ்மி போகிறாள். சக்காராம் அவளையே வியப்போடு பார்த்துக் கொண்டு...)*

இது ஒரு டைப்... முந்தினவ புருஷனோட சேட்டைப் புடிச்சிக்கிட்டு கிடந்தா... இவ என்னடான்னா எறும்பைப் புடிச்சிக்கிட்டு இருக்கா... *(தனக்குள்ளாக)* இந்த தாவுத் எங்கே போயிட்டான்...

**லக்ஷ்மி** : *(எறும்போடு)* பொடிப்பயலே... உன்னால நான் எவ்வளவு ஏச்சு வாங்க வேண்டியிருக்கு ... திருட்டு ராஸ்கல்... நீ சக்கரைய சாப்பிட நான் ஏச்சு வாங்கனும். எறும்பு காகம் இதெல்லாம் என்னோட பேசுதுன்னா ஒருத்தரும் நம்புறாங்க இல்ல. நீ என்னோட பேசுனது போதும். இனி என்னோட பேசாதே. ம்... பேசுவியா....பேசுவியா *(செல்லமாக திட்டுகிறாள்)* போக்கிரிப்பயலே! ம்... சொல்லு.

*(சக்காராம் நெருப்பு வாங்க வருகிறான். அவள் தனியாக பேசுவதை கவனித்துவிட்டு ஆத்திரத்தோடு...)*

**சக்காராம்** : இந்தா... இங்கே என்ன நடக்குது? இதென்ன வீடா? பைத்தியக்கார ஆஸ்பத்திரியா...

*(அவள் பயந்து நிற்கிறாள்)* இப்போ தானே உனக்கு சொன்னேன். நீ என்ன நினைச்சுக்கிட்டு இருக்கிறே ஆங்... *(நடுங்குகிறாள்)* மண்டையப் பொளந்திடுவேன். இது மாதிரி இன்னொரு தரம் நடந்ததுன்னா...? எனக்கு இப்ப நெருப்புத் தணல் வேணும். கொண்டா!...

*(அவள் தட்டை வாங்கி அதில் தணலைப் போட்டுக் கொடுக்கிறாள்.)*

**சக்காராம்** : ஏன்... சிணுங்குறே? இப்ப யார் செத்துபோனா... ஓம் புருஷனா?

*(லக்ஷ்மி அவசரமா கண்ணீரைத் துடைக்க சேலை தலைப்பை எடுக்கிறாள். தணல் அவள் காலில் கொட்டிவிடுகிறது. வலியால் காலை பிடித்துத்துக்கு கொண்டு உட்காருகிறாள்.)*

வேணும். இது உனக்கு நல்லா வேணும் கால் பொங்கி

கொப்பளிக்கணும். அப்போதான் உனக்கு புத்திவரும்.

*(அவள் வலியோடு சிந்திய தணலை தட்டில் பொறுக்கி போடுகிறாள்.)*

உள்ளே போய் காயத்துக்கு ஏதாவது போடு. இல்லேன்னா எப்படியாவது தொலைஞ்சுபோ. *(அவள் உள்ளே போய் காலைத் தடவுகிறாள்.)* இந்த தாவுதை இன்னும் காணலியே? எங்கே போய் தொலைஞ்சானோ...

*(சக்காராம் தலையை தூக்கிப் பார்க்கிறான். லக்ஷ்மி காலில் உள்ள காயத்துக்கு ஊதுகிறாள்.)*

**லக்ஷ்மி :** *(காலைத் தடவியபடி எறும்போடு...)* நீ போகமாட்டே? ஏன் என்னை பாாக்கிறே? நான் யாருக்குத் தேவை? கட்டினவனால கைவிடப் பட்டவ. நான் எப்படி போனா என்ன? ஏன் என்னை முறைச்சு பாாக்கிறே? வெட்கமில்லே? எனக்கு ஒன் ஊட்டு கரிமுஞ்சிய காட்டாதே...

*(மேடையில் இருள் சிறிது நேரத்தில் அடுக்களையில் மட்டும் சற்று வெளிச்சம் தெரிகிறது. வெளியறை முழுதும் இருள். குரல் மட்டும் கேட்கிறது.)*

**சக்காராம் :** ஏய்... இந்தா லக்ஷ்மி எழும்பு... எழும்புறியா இல்ல ரெண்டு வேணுமா? சொல்றது கேக்குதா? *(அருகில் வந்து)* இந்தா எந்திரி....

**லக்ஷ்மி :** *(கொட்டாவி விட்டவாறு)* என்ன வேணும்...? தூக்கம் வருது....

**சக்காராம் :** எந்திரின்னா... எந்திரி...

**லக்ஷ்மி :** பின்னாடி எழும்புறேன். ரெண்டாம் சாமம் ஆகுதுங்க ...

**சக்காராம் :** அதான் எழுப்புறேன். எந்திரி...

**லக்ஷ்மி :** *(எழுந்து)* என்ன வேணும்... ஏன்?

**சக்காராம் :** சிரிக்கனும். நீ சிரிக்கனும் ...

**லக்ஷ்மி :** இன்னும் விடியல்லையே!

**சக்கா :** விடிஞ்சி சிரிக்க வேணாம். நீ சிரிச்சு விடியட்டும். அப்போ சிரிச்சியே அதே மாதிரி ...

**லக்ஷ்மி :** என்னது சிரிக்கவா? எனக்கு தூக்கமா வருது...

**சக்காராம் :** பிறகு தூங்கலாம்... இப்ப சிரி... சிரி... அந்த எறும்பைப் பார்த்துச் சிரிச்சியே.... அந்த எறும்பு ஒம்மேல ஏர்றப்போ சிரிச்சியே.... அதே மாதிரி சிரி ..ம்..ம்..

**லக்ஷ்மி :** ஐயோ.... இதென்ன இது. பிறகு.... இப்ப முடியாது... என் கால் வலிக்குது.

**சக்காராம் :** பரவாயில்ல சிரி.....சிரி.....

**லக்ஷ்மி :** முடியாது.

**சக்காராம் :** என்னது? எறும்பைப் பார்த்து சிரிக்க மட்டும் உன்னால முடியும். என்னைப் பார்த்து சிரிக்க முடியாதா? ஒன் காலை என்ன செய்றேன்னு பாரு. சிரிக்கல்லேன்னா எந்திரி. உட்காரு... உன்னை தூங்கவிடமாட்டேன்.

**லக்ஷ்மி :** நெசமா சொல்லுறேன்... இப்ப என்னால முடியாது.

**சக்காராம் :** முடியும். இப்பத்தான் சிரிக்கனும். எழும்பு. சிரி... சிரிக்காட்டி விடமாட்டேன். தோலை உரிச்சு புடுவேன். சிரி... சிரி...

*(அவளது காயம்பட்ட காலை பலமாக மிதிக்கிறான். லக்ஷ்மி பலவந்தமாக சிரிக்கிறாள். தொடர்ந்து சிரிக்கிறாள். பின் முன்பு சிரித்தது போல் இயல்பாக சிரிக்கிறாள். அவளோடு சேர்ந்து சக்காராமும் சிரிக்கிறான்.)*

**லக்ஷ்மி:** *(சிரிப்பை நிறுத்திவிட்டு)* ஐயோ கடவுளே! களைச்சு போனேன். இனி சிரிக்க முடியாது. இனியாவது என்னைத் தூங்கவிடுங்க. என்னால நிற்க முடியல்லே. என் கால் வலிக்குது.

**சக்காராம் :** எங்கே காலை பார்க்கலாம்.... இந்த பொம்பளைங்களுக்கு எந்த வேலையும் ஒழுங்கா பார்க்க தெரியாது.

*(என்றவாறு முன்னறைக்கு வந்து சக்காராம் மிருதங்கத்தைக் கையில் எடுக்கிறான்.)*

**(ஒளி மங்குகிறது)**

## காட்சி : 04

*(ஒரு பகல் வேளை. விநாயகர் சதுர்த்தி தினம். அந்தப் பகுதி முழுவதும் சதுர்த்தியை மிகக் கோலாகலமாகக் கொண்டாடிக்கொண்டிருக்க அதிலே சக்காராமும் பங்கெடுத்துக் கொள்கிறான்.)*

**சக்காராம் :** (வெளியே இருந்து) விநாயக மூர்த்திக்கு...

**சிறுவர்கள் :** அரோகரா !

**சக்காராம் :** எல்லாரும் சொல்லுங்கோ.... விநாயக மூர்த்திக்கு...

**சிறுவர்கள் :** அரோகரா !

*(விநாயகர் சிலையை தலையில் வைத்துக்கொண்டு வாசலில் வந்து நின்று...)*

**சக்காராம் :** விநாயக மூர்த்திக்கு...

**சிறுவர்கள் :** (வெளியில் இருந்து) அரோகரா !

**தாவூத் :** (சக்காராம் அருகிலிருந்து) பிள்ளையார் அப்பனுக்கு....

**சக்காராம் :** அரோகரா....

*(லக்ஷ்மி ஆரத்தியெடுத்து விநாயகரை பூசைபீடத்தில் வைக்கிறாள்.)*

**சக்காராம் :** அப்பனே! பிள்ளையார் அப்பா! ஆறுதலாக அமருவீராக. என்னோட அப்பன் பாட்டன் எல்லாம் உன்னை எப்படி செவிச்சாங்களோ தெரியாது. ஆனால் என்னோட வீட்டுக்கு இப்போதான் முதன் முதலா வந்திருக்கே...

**தாவுத் :** நேரமாகுது சஹாப் ...கடைக்கு போகணும்.

**சக்காராம் :** மூச்சுவிடக்கூடாது. பூசை முடிஞ்சுதான் எல்லோரும் போகணும்.

**தாவுத் :** அதுவும் சரிதான். எந்தக் கடவுளா இருந்தாலும் அதனோட கோபத் துக்கு ஆளாகக்கூடாது.

**சக்காராம் :** நம்ம மனசு சுத்தமாவும் நேர்மையாவும் இருந்துட்டா எந்தக் கடவுளுக்கும் பயப்படத் தேவையே இல்ல.

**தாவுத்:** கரெக்ட். ஆனா நம்ப மனசு சுத்தமாவா இருக்கு? ஆண்டவன் நாளைக்கு மறுமையில கேப்பானே... இப்ப நாம பாவத்துக்கு மேல பாவம் செய்துகிட்டு இருக்கோம்.

**சக்காராம் :** நாம செய்யிறது பாவமுன்னு சொல்றது யாரு? மனுஷங்க.. அங்கே கடவுளுக்கு முன்னாடி ஒன்னே ஒன்னுதான் பாவம். அதுதான்

மனசாட்சிக்கு விரோதமா நடக்கிறது. அது ஒன்னுதான் பாவம். தாவுத் நான் தெரியாமதான் கேட்கிறேன். இந்த எலும்பையும், சதையையும் படைச்சது யாரு? இதை ஒடம்புன்னு சொல்லி இந்த உலகத்துல விட்டது யாரு? சொல்லு பார்ப்போம். ஆண்டவன் தானே? அவனுக்கு தெரியாதா இந்த உடம்பைப் பத்தி? கடவுளே மனுஷனா அவதாரம் எடுத்து வந்தாரே... என்ன நடந்தது? ஒன்னும் வேணாம் கிருஷ்ணரை எடுத்துக்குவோம். என்ன நடந்தது?

**லக்ஷ்மி:** (பூசைத் தட்டைக் கொடுத்தபடி...) இந்தாங்க. தாவுது அண்ணா கொஞ்சம் தள்ளி நில்லுங்கோ... (சக்காராமிடம்) சரி பூஜையை ஆரம்பிக்கலாம்.

**சக்காராம்:** தாவுத்... ஸ்டார்ட் பண்ணுப்பா...

**தாவுத்:** எல்லாரும் சொல்லுங்க... கைத்தல நிறைகனி.... அப்பமோடவல் பொரி... வைத்திடும் அரண் மகன் அடிப்பேணி மத்தள வயிறனை உத்தமிப் புதல்வனை ...

(தாவுத் தாளத்தோடு சொல்கிறான். லக்ஷ்மி தாவுதின் வாயைப் பொத்தி வேண்டாம் என்கிறாள்.)

**சக்காராம்:** ஏன் தாவுத் நிப்பாட்டிட்டே... சொல்லு ... கைத்தல நிறைகனி (தாவுத் மௌனம்) தாவுத் என்ன? என்ன நடந்தது? ஏன் படிக்கல்ல... ஏன்னு சொல்லு... ஏன் யாரும் படிக்க வேணாம்ன்னு சொன்னாங்களா? யாரு சொன்னது ? (லக்ஷ்மியைப் பார்த்து... ) ஓ... நீதானா? ஏன் தாவுது பாடக்கூடாது?

**லக்ஷ்மி:** ஏன்னா ... அவர் முஸ்லீம் !

**தாவுது:** பரவாயில்ல சஹாப். விட்டுருங்க.

**சக்காராம்:** நீ பேசாதே தாவுத்... (லக்ஷ்மியிடம்) ஏன் தாவுத் பாடக்கூடாதுன்னு சொன்னே?

**லக்ஷ்மி:** அவர் ஒரு முஸ்லிம்... நாங்க இந்து... அதுலேயும் சைவம்... (கன்னத்தில் அறைகிறான்)

**சக்காராம்:** எங்கே இன்னொரு தரம் சொல்லு...

**லக்ஷ்மி:** நான் சொன்னதுல என்ன தப்பு? ஒரு முஸ்லிம் கணபதியை வணங்கலாமா?

**சக்காராம் :** நான் வணங்கினா... ஏன் அவன் வணங்கக் கூடாது. ஒரு முஸ்லீம் வணங்கினா கணபதிக்கு பிடிக்காதா? அதுதான் அவருக்கு நல்லாப் பிடிக்கும். தெரியுமா? *(மீண்டும் அறைகிறான்)*

**தாவுத்:** தோஸ்த்து... அவளை விட்டுருங்க. பாவம்....

**சக்காராம் :** எங்கே... இன்னொருதரம் சொல்லு அவன் பாடக்கூடாதுன்னு... *(ஒரு பெல்ட்டை எடுத்து)* ஒரு முஸ்லீம் கணபதியைப் பத்தி பாடக்கூடாது. ஆங்... அதுவும் என்னுடைய வீட்டுல...? *(பெல்டால் விளாசுகிறான்)*

**தாவுத் :** *(சக்காராமை தடுத்தவாறு...)* சஹாப்....

**லக்ஷ்மி :** *(பயப்படாமல்)* என்னை அடிக்கனும்னா அடியுங்க.. ஆனா உள்ளே வைச்சு அடிங்க... கணபதிக்கு முன்னால அடிக்காதீங்க... அவர் வீட்டுக்கு வந்திருக்கிற விருந்தாளி...

**தாவுத்:** சக்காராம்! நான் சொல்லுறதை கேளுங்கோ...

**சக்காராம் :** *(லக்ஷ்மியை முறைத்து)* அப்படியா? ரொம்ப நல்லது வா உள்ளே. வாடி... ஒரு கை பார்க்கிறேன். *(சக்காராம் அவளை சமயலறைக்கு இழுத்துக்கொண்டு போகிறான். உள்ளே அவளை நையப் புடைக்கிறான். வேதனையோடு அலறுகிறாள். ஆனால் அழுகையில்லை. இதை பொறுக்க முடியாது தாவுத் வெளியேறுகிறான். சிறிது நேரத்துக்கு பின் சக்காராம் வெளியே வந்து பெல்ட்டை வீசி எறிகிறான் . லக்ஷ்மி மெதுவாக தள்ளாடியபடி வெளியே வருகிறாள். விளக்கை ஏற்றி பூசைக்குரிய பொருட்களை ஒழுங்கு செய்து விநாயகரை வணங்குகிறாள்.)*

**சக்காராம் :** ஒரு முஸ்லீம் இந்து கடவுளை பாடக்கூடாதா? நீயும் பாடல்ல... அவனையும் பாடவிடல்ல... *(தனக்குள்)* தாவுத்... நீ ஒரு நண்பன். உண்மையான நண்பன். பரவாயில்லை. நீ போயிட்டே... இன்னைக்கு போ... நாளைக்கு வராமலா இருக்க போறே? நாளைக்கு நீ கணபதியைப் பாடுறதை யார் தடுக்கிறாங்கன்னு பாப்போம். *(லக்ஷ்மி உள்ளே போகிறாள். சக்காராம் கணபதியைப் பார்த்து...)* உன் மேல தப்பு இல்லேப்பா... உன்னை நான் குறை சொல்லமாட்டேன்.

(காட்சி முடிவு)

## காட்சி : 05

*(சக்காராம் மிருதங்கம் வாசிக்கிறான் லக்ஷ்மி களைத்துபோய் தேநீர் தயாரிக்கிறாள்.)*

**சக்காராம்** : சீக்கிரமா காப்பிய போடு...

**லக்ஷ்மி:** போட்டுக்கிட்டுத்தானே இருக்கேன். கொஞ்சம் பொறுங்களேன்... ஆத்துல இருந்து தண்ணீ தூக்கியாந்த... களைப்பே இன்னும் போகல்ல. அதுக்குள்ள காப்பின்னா... மனுஷனா... மாடா... நான் செத்தாத்தான் உங்களுக்கு நிம்மதி...

**சக்காராம்** : *(அவளருகே வந்துகொண்டே...)* என்ன சொன்னே... ?

**லக்ஷ்மி :** இப்பத்தான் தண்ணீ கொதிச்சிக்கிட்டு இருக்குது...

**சக்காராம்** : முதல்ல என்ன சொன்னே? அதை சொல்லு இன்னொரு தடவை. *(லக்ஷ்மி அடுப்பையே பார்த்துக்கொண்டு இருக்கிறாள்.)* சொன்னதை சொல்லுடி....*(பக்கத்தில் நெருங்கி வருகிறான்.)*

**லக்ஷ்மி :** *(ஆத்திரத்தோடு)* சொல்றதுக்கு என்ன இருக்கு? எவ்வளவுதான் ஒருத்தியால பொறுத்துக்க முடியும். நான் வந்து ஒரு வருஷமாச்சு. ஒரு நாளாவது நிம்மதியா இருந்திருக்கேனா? இந்த வீட்டுல நல்ல நாள் பெருநாள்ன்னு இருக்கா. நோய் நொடின்னு இருக்கா...? ஒண்ணும் கெடையாது. எந்தநாளும் வேலை வேலை வேலை... பகல்லதான் இப்படி சித்ரவதைன்னா இரவிலேயாவது நிம்மதியா தூங்க முடியுதா? அதுவுமில்லே... நான் செத்து தொலைஞ்சாத் தான்...

**சக்காராம்** : *(இடையில் குறுக்கிட்டு)* செத்தா என்ன? உன்னை சுட்டு பொசுக்கி ஆத்துல கரைச்சி கையைகழுவிட்டு நிம்மதியா வந்து தூங்கு வேன். உன்னை உன் புருஷன் வீட்டைவிட்டு துரத்தினானே... அப்போ நான் உன்ன கூட்டியாந்து சோறு போட்டேனே... அதுக்கு இப்ப இப்படித்தான் பேசுவே...

**லக்ஷ்மி** : நீங்க கூட்டியராட்டி... கால்போன போக்கிலே போயிருப்பேன். எங்கேயாவது ஆத்துல குளத்துல விழுந்திருப்பேன். என்னை கூட்டியாந்து சோறுபோடுங்கன்னு கெஞ்சினேனா? ஆத்துல

விழுந்து செத்திருந்தாலும் இந்த தொல்லையை அனுபவிக்க வேண்டி வந்திருக்காது.

**சக்காராம்**: இப்பகூட ஆத்துல இருந்துதானே வந்தே... அப்படியே விழுந்து தொலைஞ்சிருக்க வேண்டியதுதானே. உன்னை யார் தடுத்தது....?

**லக்ஷ்மி**: நான் அப்படியொன்னும் கேவலமா சாகவேண்டியது இல்லே. எங்க அம்மா பத்து மாதம் சுமந்து பெத்தது இப்படி ஆத்துல விழுந்து சாகுறதுக்கு இல்லே... இப்ப வக்கு இல்லாம போனாலும் ஒசந்த குடும்பத்துல பொறந்தவளாக்கும். எங்க அப்பா ஒரு செயார்மேன்...

**சக்காராம்**: உங்கப்பா என்னவா இருந்தா என்ன? புருஷன் வீட்டைவிட்டு தொரத்தின பொம்பளைக்கு என்ன மதிப்பிருக்கு. உன்னை எவன் ஆதரிப்பான்? நான்தான் ஏதோ பாவமுன்னு கூட்டியாந்தேன்.

**லக்ஷ்மி**: நீங்க கூட்டியாந்தது பெரிசில்ல... நான் தான் இங்க நிக்க சம்மதிச் சேன். வேற ஒருத்தியா இருந்தா ஓடியிருப்பா..

**சக்காராம்**: ஏய்.. இங்கே இதுவரைக்கும்... ஆறு பேர் இருந்திருக்காங்க. நீ ஏழாவது. ஞாபகம் வைச்சிக்கோ...

**லக்ஷ்மி**: ஆறுல ஒருத்தியையாவது ஒழுங்கா வைச்சிருந்தா ஏழாவதா என்னை ஏன் கூட்டியாரனும்?

**சக்காராம்**: நீ இல்லாம வாழமுடியாதுன்னு நினைச்சியா?

**லக்ஷ்மி**: இல்லே. எனக்கு பெரிய உதவி செய்யிறதா நீங்க நினைக்கிறீங்க...

**சக்காராம்**: *(கொதிப்படைந்து)* அப்படியா...? இந்த வீட்டைவிட்டு வெளியே போ... *(லக்ஷ்மி தேனீரை தம்ளரில் ஊற்றுகிறாள்)* இப்பவே வெளியே போ...

**லக்ஷ்மி**: நான் போறேன்... காப்பியை குடிங்க ...

**சக்காராம்**: *(தேநீரை வாங்கி குடிக்கிறான்)* இவ்வளவு நாள் இங்கே இருந்ததால உனக்கு கொழுப்பு வைச்சிட்டுது... ம்... உன் கொழுப்பை வத்த வைக்கிறேன் பார்... புறப்படு. இனி என் முகத்திலேயும் முழிக் காதே. ம்... இப்பவே கிளம்பு. சீக்கிரம். இல்லே.... கழுத்த புடிச்சி வெளியே தள்ளிடுவேன் போ... இனி இந்த பக்கமே வராதே.

**லக்ஷ்மி**: நான் ஏன் வரப்போறேன்... நான் ஒன்னும் அநாதையில்ல.. எங்க பெரியப்பா மகனோட போய் இருப்பேன்.

**சக்காராம்**: யாரோடையாவது போய் இரு. முதல்ல வெளியே போ...

**லக்ஷ்மி**: போகத்தான் போறேன்...

**சக்காராம்:** போய்த் தொலைன்னுதான் சொல்லுறேன்.

**லக்ஷ்மி:** போகவேண்டிய நேரம் போவேன்...

**சக்காராம்:** என்னது...? அந்த அளவுக்கு மிஞ்சிப்போச்சா?

**லக்ஷ்மி:** மிஞ்சிறதுக்கு என்ன இருக்கு? வெள்ளம் தலைக்கு மேலே போன பிறகு சாண் போனா என்ன, முழம் போனா என்ன? கேட்கவேண்டி யதையெல்லாம் கேட்டாச்சு... வாங்கவேண்டியதெல்லாம் வாங்கி யாச்சு..என் ஒடம்பு இப்போ நல்லா மறத்து போச்சுங்க...

**சக்காராம்:** தப்பு செஞ்சா ஒத்துக்கணும். உப்பைத் தின்னா தண்ணி குடிக் கணும்...

**லக்ஷ்மி:** ஒத்துக்கிறேன். நான் இங்க வந்ததே தப்பு...!

**சக்காராம்:** லக்ஷ்மி பேசுறத நிதானமா பேசு...

**லக்ஷ்மி:** இல்லேன்னா என்ன நடக்கும் ? இன்னும் நாலு அடிவிழும்...

**சக்காராம்:** ஏங்... கோவத்த கிளறாதே. நான் பொல்லாதவனா ஆகிடுவேன்...

**லக்ஷ்மி:** இது வரைக்கும் நல்லவரா இருந்தீங்களாக்கும். ஒருநாள்... ஒரு பொழுது என்ன அன்பா கூப்பிட்டிருப்பீங்களா? எந்தநேரமும் ஏச்சு பேச்சு அடி உதை. இதைவிட வேற என்ன தந்தீங்க? என்னை பெல்டால துடிக்க துடிக்க அடிச்சிங்களே நீங்களும் ஒரு மனுஷனா? ஆத்திரத்தால அடிச்சிங்க. ஆத்திரம் அடங்கின பிறகாவது ஒரு ஆறுதல் வார்த்தை. ஊஹுீம்... அதுக்குப் பதிலாக வலி தாங்காம தவிச்சிக்கிட்டு இருந்த என்னை எழுப்பி சிரி... சிரி... சிரின்னீங்க எறும்பைப் பார்த்து சிரிச்சியே என்னை பார்த்து சிரி. செத்தா பரவா யில்லை. சிரிச்சிக்கிட்டே சாவுன்னீங்களே... சாகுறேன். ஏன்னா நரகம் இதைவிட மோசமில்ல...

**சக்காராம்:** சரிதான் நிறுத்துடி. நீ இங்க வந்த அன்னைக்கே என்ன சொன் னேன். நான் எப்படிப்பட்டவன்னு ஒளிவுமறைவு இல்லாம சொல்ல லையா? நீ எப்படி நடக்கனும்னு சொல்லலையா? எனக்கு கோவம் வந்தா பொல்லாதவன்னு சொன்னேன் இல்லே... அப்போ உன் காது எங்கே போச்சு? நீ உன் மூட்டையத் தூக்கிக்கிட்டு இங்கே நிக் கிறப்போ... என் கண்டிசனுக்கு எல்லாம் சம்மதம் இல்லேன்னா அப்பவே வெளியே போயிடுன்னு சொன்னேன். அப்போ ஏன் நீ வெளியே போகல்ல? போயிருக்க வேண்டியதுதானே ஏன்

போகல்ல... இப்ப நியாயம் பேசுராளாம்... நியாயம். நான் முன்னா லேயே எல்லாம் சொல்லியிருக்கேன். புதுசா என்ன அநியாயம் பண்ணிட்டேன். நான் இப்ப தண்ணி போடுறதையும் குறைச்சிட் டேன். அது உனக்கு தெரியும். போன மாசம் எத்தனை தரம் தண்ணி போட்டேன். ரெண்டே ரெண்டு தரம்... நான் எப்பவாவது குளிக்கிறதுண்டா? இப்ப குளிக்கிறேன். சாமியே கும்பிடாத நான் இப்போ தினசரி பூசை பண்ணுறேன். விநாயகர் சதுர்த்தி கொண் டாடுறேன். ஒழுங்கா உடுத்துறேன். இதுவரைக்கும் இருந்த ஆறு பேருல எவளாவது ஒருத்தி சொல்லி நான் கேட்டு நடந்தது இல்லே ஆனா நீ சொன்னதைக் கேட்டு நான் திருந்தலையா? இதுக்கெல் லாம் என்ன சொல்றே?

**லக்ஷ்மி:** பெருமைப்படுறேன்.

**சக்காராம்:** நான் என் அப்பனையே தூக்கி எறிஞ்சவன். உன்னோட பேச்சை கேட்டேன்... கேட்டேனா? இல்லையா?

**லக்ஷ்மி:** அதுக்கு பதிலா கிடைச்சது அடியும், உதையும்...

**சக்காராம்:** பின் என்ன செய்ய சொல்லுறே? தாயே நான் செஞ்சதெல்லாம் தப்பு.. அப்பிடீன்னு உன் கால புடிச்சி உனக்கு பாதபூஜை பண்ண சொல்றியா?

**லக்ஷ்மி:** நான் போனாத்தான் என்னோட அருமை தெரியும்...

**சக்காராம்:** போய்த்தொல... போனாத்தான்... போனாத்தான்னு... ஏன் நிக்கிறே? போ... போய்... நாயா அலை. பேயா சுத்து. போ...

**லக்ஷ்மி:** வீதியில கெடக்கிற நாய்க்கும் இந்த வீட்டுல இருக்கிற எனக்கும் என்ன வித்தியாசம்?

**சக்காராம்:** வித்தியாசம் இல்லதானே...? அப்போ வெளியே போ... இப்பவே போயிடு.

*(இழுத்துவந்து கழுத்தைப்பிடித்து வெளியே தள்ளி கதவைச் சாத்துகிறான்)*

தொலைஞ்சு போ... இனி இந்த பக்கம் வராதே... உன்னை கை கழுவியாச்சு... *(திரும்பி)* தொலைஞ்சிது சனியன்

*(மேலும் கீழும் உலாவுகிறான். கதவு தட்டப்படுகிறது.)*

யாரது? நீயா..? முடியாது கதவை திறக்கமாட்டேன். போயிடு. சனியன்... திரும்பி வரப்பாக்குது...

**தாவுத்:** (வெளியிலிருந்து) சஹாப்...

**சக்காராம்:** யாரது? தாவூதா... நீ தனியாவா நிக்கிறே?

**தாவுத்:** முதல்ல கதவை தொறங்க...

*(சக்காராம் கதவை திறக்க தாவூதும் அவனுக்குப் பின்னால் லக்ஷ்மியும் வருகிறாள். அவள் நேராக அடுக்களைக்குப் போய் தன் வேலையை கவனிக்கிறாள்.)*

**சக்காராம்:** ஏய்....உன்னை யார் வரச்சொன்னது? போ வெளியே...

**தாவூத்:** சரி... சரி... விடுங்க... ஏன் இப்படி ஆத்திரப்படுறீங்க... அப்படி என்னா நடந்துட்டுது?

**சக்காராம்:** என்னா நடந்ததா? இந்த கீழ்ஜாதி நாய் என்னையே அடக்க பார்க்கிறா...! நான் இதுவரைக்கும் யாருடைய சொல்லையும் கேட்ட தில்ல... இவ வீட்டால தொரத்தப்பட்ட மானங்கெட்ட, வெக்கங்கெட்ட, தெருப்பொறுக்கி நாய். இவ எனக்கு பாடம் படிப்பிக்கிறா?

**தாவுத்:** சரி விடுங்க... இப்போ நம்ப சுருட்டு எடுங்க...

**சக்காராம்:** ஏய் நீ இப்போ போறியா இல்லே...?

**லக்ஷ்மி:** மாட்டேன். நீங்க செய்யிறதை செய்யுங்க... அடியுங்க உதையுங்க நான் ஒண்ணுக்கும் உதவாத நாய்தானே....? செய்யிறத செய் யுங்க. கொல்லுறதுன்னாலும் கொன்னு போட்டுருங்க. எனக்கு யார் இருக்கா...?

*(லக்ஷ்மி விசும்பிறவாறு நிற்க சக்காராம் செய்வதறியாது திகைத்து நிற்கின் றான். தாவுத் மிருதங்கத்தை எடுத்து வாசிக்கிறான்.)*

**(காட்சி முடிவு)**

## காட்சி : 06

(லக்ஷ்மி அடுக்களையில் வேலை செய்து கொண்டிருக்கிறாள். சக்காராம் வெளியிலிருந்து வருகிறான். கையில் பார்ஸல் ஒன்றிருக்கிறது.)

**சக்காராம்** : லக்ஷ்மி... இன்னுமா ரெடியாகல்லே...?

**லக்ஷ்மி** : எதுக்குங்க?

**சக்காராம்** : சரியா போச்சு. நேற்றுதானே சொன்னே... உன்னோட சித்தப்பா வீட்டுக்குப் போறேன்னு...

**லக்ஷ்மி** : போறேங்க...

**சக்காராம்** : போறேன்னு நின்னுக்கிட்டு இருந்தா எப்படி? நீ போக வேண்டிய ஊருக்கு ஒரு டிக்கட் வாங்கிக்கிட்டு வந்துட்டேன். இன்னும் அரை மணி நேரத்திலே ரயில் புறப்படுது... நீ சீக்கிரம் கிளம்பு...

**லக்ஷ்மி** : நான் போகத்தான் வேணுங்களா?...

**சக்காராம்** : இந்தா லக்ஷ்மி... நான் சொல்றதை கேளு. நீ செய்யிறது எனக்கு பிடிக்கல்ல. நான் செய்யிறது உனக்கு சகிக்கலே. எனக்கும் கோபம் வந்துடுது. நானும் ஏதேதோ பேசுறேன். உன்னால எனக்கு ஏத்தப்படி நடந்துக்க முடியல. அதனால நீ உன் பாதையில போ. நான் என் வழியில போறேன். நாம சமாதானமாக பிரிஞ்சிக் குவோம். நாம ரெண்டு பேரும் அம்மி மிதிச்சது இல்ல... அருந்ததி பார்த்ததில்ல. அதனால ஒருத்தரைவிட்டு ஒருத்தர் பிரியக் கூடாதுங்குற கட்டாயமும் இல்லே. நம்ப ரெண்டு பேருக்கும் இனி ஒத்து வராது. அவ்வளவுதான். இந்தா இதுல ஒரு சேலையும் ஒரு ரவிக்கை துணியும் இருக்கு. வீசினகையும் வெறுங்கையுமா அனுப்பிட்டேன்னு பின்னாடி நீ நினைக்கக்கூடாது. இந்தா... இதுல அம்பது ரூபா இருக்கு. நான் உன்னோட வாழ்ந்ததுக்காக இல்லே... வழிச்செலவுக்கு. அதோட நீ கட்டியிருக்கிற சேலை கட்டின புருஷன் மாதிரி உனக்குன்னு வாங்கிகொடுத்த அத்தனை சாமான் களையும் நீ எடுத்துக்கிட்டு போகலாம்... ம்... புறப்படு ... ரெயிலுக்கு நேரமாகுது...

**லக்ஷ்மி** : கடைசியா ஒரு காப்பி போட்டு கொடுத்துட்டு போறேன்...

**சக்காராம்** : அதெல்லாம் ஒண்ணும் வேணாம் ...

**லக்ஷ்மி :** அப்போ சாமி கும்பிட்டு வந்துடுறேன்.

(லக்ஷ்மி சாமி கும்பிட, சக்காராம் ஒரு பீடியை எடுத்து புகைக்கிறான்)

**லக்ஷ்மி :** ஒருத்தர் வீட்டை விட்டுபோன உடனே வீட்டைப் பெருக்கக் கூடாது. அதனால... நானே கூட்டிட்டு போயிடுறேன்

(வீட்டை பெருக்கிவிட்டு உள்ளே போகும் போது....)

**சக்காராம் :** ஏய் அங்கே எங்கே போறே...?

**லக்ஷ்மி:** என் காகத்துகிட்ட சொல்லிட்டு வந்திடுறேன். இனிமே அதுக்கு தினமும் யாரு சாப்பாடு வைக்கப்போறாங்க?

**சக்காராம் :** சாப்பாடு போட்டு தண்ணியும் வைக்கிறேன்... முதல்ல நீ புறப்படு.

**லக்ஷ்மி:** கொஞ்சம் பொறுங்க. என்னோட எறும்புப் பயலுக்கு சர்க்கரை போட்டுட்டு வந்திடுறேன். (சிறிது சர்க்கரையை கையில் எடுத்துக் கொண்டு...) ஓடிவா... ஓடிவா... (எறும்புக்கு சர்க்கரை போடுகிறாள்) நான் வர்றேன். (சக்காராமிடம் வந்து) அதுக்கு தினமும் கொஞ்சம் சர்க்கரை போட்டுருங்க. நாளைக்கும் என்னை தேடி வரும். உங்களை கும்பிட்டு கேக்கிறேன். அந்த எறும்பை ஒன்னும் செய்திடாதீங்க. (சக்காராம் சிரிக்கிறான்)

**லக்ஷ்மி:** ஏன்? சிரிக்கிறீங்க... இப்படியும் ஒரு பைத்தியம்னா?

**சக்காராம் :** லக்ஷ்மி உலகத்துலயே நான் விரும்புற பாஷை ரெண்டுதான் இருக்கு. ஒன்னு மௌனம்... மற்றது சிரிப்பு... சில நேரத்தில மௌனத்தோட அர்த்தம் தெரியாமல் போயிடும்... ஆனால் எல்லா நேரங்கள்ளேயும் சிரிப்பு அர்த்தத்தோடுதான் இருக்கும். சரி..! சரி..! நீ கிளம்பு... (லக்ஷ்மி சக்காராமுடைய காலில் விழுகிறாள்)

**சக்காராம் :** ஏய்... என்ன இதெல்லாம்...

**லக்ஷ்மி:** என் புருஷனோடத்தான் வாழத்தான் கொடுத்து வைக்கலே.. ஏன்னா அவருக்கு என்னை பிடிக்கல்ல. உங்களுக்கு புடிச்சு போச்சுன்னுதான் இங்கே வந்தேன். இதை என் வீடாகிக்கிட்டேன். இதை விட்டுட்டு போறதுன்னா என்னால முடியல்லேங்க...

**சக்காராம் :** இந்த உலகத்த விட்டு நீ போகல்ல... இந்த உலகத்துலதான் நீ வாழப்போற...

(லக்ஷ்மி முன்னே செல்ல - சக்காராம் பின் தொடர்கிறான் மேடையில் இருள் சூழ்ந்து பின் ஒளி பரவுகிறது.)

(சக்காராம் ஆழ்ந்த சிந்தனையில் இருக்கிறான். தாவுத் வருகிறான்)

**தாவுத்** : (வந்துகொண்டே) சக்காராம் சஹாப்... என்ன யோசனை?

**சக்காராம்** : ஒன்னும் இல்லேப்பா...

**தாவூத்** : வீட்டு சாப்பாட்டுக்குத் தட்டுபாடு வந்துட்டுதோ. கழுதைய விடுங்க கிளிபோன... புறா. புறா இல்லேன்னா குருவி... சிட்டு குருவி...

**சக்காராம்** : இப்போதான் அவபோயிருக்கா. அதுக்குள்ள இன்னொன்னா...?

**தாவூத்** : நீங்க தான் கொறை வயித்துக்காரராச்சே...

**சக்காராம்** : அதனால தூக்கம் போகாதுன்னு சொல்றியா?

**தாவூத்** : தூக்கமே வராதுங்குறேன்.

**சக்காராம்** : (சிரிப்பு) சப்போஸ்... ஒண்ணு வரும் போலத்தான் தெரியுது...

**தாவுத்** : அதானே கேட்டேன். வந்தாகனுமே....

**சக்காராம்** : அடுத்த ஊர்ல ஒரு போலிஸ்காரன். சட்டத்தை மீறி நடந்ததாலே வேலைய விட்டு நீக்கிட்டாங்களாம். அவன் பொண்டாட்டி பெரிய ஆட்டக்காரி... அவளுக்கு அவனோட வாழ விருப்பம் இல்லையாம் அடுத்த விசாரணை அவளப்பத்திதான்...

**தாவுத்**: சஹாப்... கண்ணால தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய நிலைய இறைவன் வகுத்திருந்தா... தாரம் பொருளாதாரம்... இந்த ரெண்டுக்குமே உலகத்துல மவுசு இருக்காது.

**சக்காராம்** : (வாய்விட்டு சிரித்து) தாவுத்! நாட்டுல இருக்கிற அத்தனை குழந்தைகளுக்கும் அப்பன் பேரு தெரியாம போயிருக்கும்.

(அமைதியோடு) அதில்லே... இதுவரைக்கும் இங்கே எத்தனையோ பேர் இருந்துட்டாங்க... ஆனா இவளைப்போல ஒருத்தியும் இருக்கல்லே...

**தாவுத்** : லக்ஷ்மிதானே? கரெக்ட்டு. என்ன பண்ணுறது? செத்ததுக்கு பின்னாடி சுடுகாட்டு ஞானம் பிறக்கிறதால என்ன பிரயோசனம் சஹாப்?

**சக்காராம்** : வாஸ்தவந்தான். தெளிவு எல்லா மனுஷங்ககிட்டேயும் எல்லா நேரத்துலயும் இருக்கிறது இல்லே... (பெருமூச்சு) அவ இங்கே இருந்தாள்ங்கிறதை மறக்க முடியாம செய்திட்டு போயிட்டாளே...

**(காட்சி முடிவு)**

## அங்கம்: இரண்டு

### காட்சி : 07

(சில நாட்களுக்குப் பின் ஒரு மாலை நேரம். சம்பா எனும் ஒரு பெண்ணை சக்காராம் அழைத்து வருகிறான். அவள் லக்ஷ்மியை விட இளையவள். வசீகரத் தோற்றமும், வாலிப்பான உடற்கட்டும் கொண்டவள். அவள் கையிலே ஒரு தோல்பை.)

**சக்காராம்** : (வெளியில் இருந்து) என்னடா "ஆ"ன்னு வாயை பொளந்துக்கிட்டு நிக்குறீங்க... தள்ளி நில்லுங்கடா... பிச்சக்காரிய பார்த்து பெருமூச்சு விடுற பசங்க... (உள்ளே வருகிறான். யாரோ எதுவோ சொன்னது அவன் காதில் விழுகிறது) என்னடா சொன்னே அருவாள எடுத்தேன்... நாக்கை இழுத்துவச்சி வெட்டிப்போடுவேன்... (சம்பா உள்ளே ஓடிவருகிறாள்) ஆங்.. சரிதான் போடா...

(சம்பா ஒரு ஆப்பிள் பழத்தை கையில் வைத்து அலட்சியமாக சாப்பிட்டுக் கொண்டிருக்கிறாள். லக்ஷ்மியிடம் சொன்னதை எல்லாம் சம்பாவிடமும் சொல்லுகிறான். சக்காராம் அவள் அழகில் மயங்கியவனாக இருக்கிறான். அவனில் ஒரு வித்தியாசம் தெரிகிறது.)

**சக்காராம்** : இதுதான் சக்காரம் பைண்டரோட வீடு.

**சம்பா**: தெரியுது...

**சக்காராம்** : நல்லாப் பார்த்துக்கோ... என்னைய இல்ல... வீட்டை. இனிமே நீ இங்கேதான் வாழப்போறே. இந்த வீடும் என்னைப் போலத்தான். அப்புறம் அது சரியில்லே... இது பிடிக்கல்லேன்னு சொல்லக் கூடாது. உனக்கு புடிச்சுதுன்னா... உன் மூட்டைய கீழே வை ...ஓ... மூட்டை இல்லே ...பேக்... பேக்கை கீழே வை... பிடிக்கல்லே...?

**சம்பா**: இதான் பஸ் ஸ்டாப்புக்கு போற பாதையா?....

**சக்காராம்** : நான் உன்னோட முந்தின ஆள் மாதிரி இல்ல... அதை போகப் போக புரிஞ்சிக்குவே. இங்க எல்லாம் ஒழுங்கா நடக்கனும். இல்லே எனக்கு கெட்ட கோபம் வரும்... அது வராம பார்த்துக்கிறது உன்னோட கெட்டித்தனம். கோபம் வந்தா பொல்லாதவனா ஆகிடாம இருக்கிறது உன்னோட பொறுப்பு. என் நாக்கு ரொம்ப நீளம். என் வாய் கார்ப்பிரேசன் லாரி மாதிரி. நான் ஒரு போக்கிரியா

இருக்கலாம். இருக்கலாம் என்ன... போக்கிரிதான். என்னைப் பெட்டிப்பாம்பா மாத்துறது உன் கையில் தான் இருக்கு

**சம்பா:** சமாளிச்சிக்கிறேன்

**சக்காராம்:** இங்கே உனக்கு ரெண்டுவேளை சாப்பாடுதான் கிடைக்கும். அதோட இப்போதைக்கு ரெண்டு சேலை... அப்புறம் வருசத்துக்கு ஒன்னு (*அவளைப் பார்த்து சிறிது தயக்கத்தோடு*) உனக்கு மட்டும் சின்ன சலுகையும் ... போனசும் உண்டு.

**சம்பா:** (*குறுக்கிட்டு*) 'இன்கிரிமெண்ட்' டு...

**சக்காராம்:** என் 'எக்ரிமெண்ட்' டுல அது இல்லே... நீ நினைச்சபடி எல்லாம் ஆட்டம் போட முடியாது... கவனமா நடந்துக்கனும்.

**சம்பா:** இல்லேன்னா.... ?

**சக்கா:** இல்லேன்னா... (*தனது அதிகாரத் தோரணையை சற்று தளர்த்திய வனாக*) இல்லேன்னா... ஒண்ணும் இல்ல. இருந்தாலும் சொல்லி வைக்கிறேன். ஈவு, இரக்கம் ஏங்கிட்ட மருந்துக்குகூட கிடையாது. (*வேகமில்லாமல் பேசுகிறான்*) நான்... நானாக இருக்கணும்.... வீடு வீடாக இருக்கணும். நீ... நீயாகவும் இருக்கணும். ஏன்னா...

(*சம்பா அவனைப் பார்த்து தலையை அசைக்கிறாள்*)

நீ ஆட்டக்காரியா இருக்கக்கூடாதுங்கிறது என் கண்டிசன்.... வீட்டுக்காரியா இருக்கனும்ங்கிறது ஆடர்....

**சம்பா:** (*ஒரு நீதிபதியின் தோரணையில்*) ஆடர்..ஆடர்...

(*சம்பா சிரிக்கிறாள்– சக்காராமும் சிரிக்கிறான்*)

**சக்காராம்:** (*சிரிப்பை அடக்கிக்கொண்டு*) பாதியை அங்கே வைச்சி சொன்னேன். மீதியை இங்கே வைச்சி சொல்லிட்டேன்... மாரி காலத்துலே இங்கே நட்டுவாக்காலிக வரும்.

**சம்பா:** ஆங்... (*பயப்படுகிறாள்*)

**சக்காராம்:** பயப்படாதே. நான் இருக்கேன். ம்...ஆங்... தேவையில்லாம வீட்டைவிட்டு வெளியே போகக்கூடாது இது சீதைக்காக போட்ட கோடு இல்ல... இராவணர்களுக்காக போடுற வேலி. வெளியே இருந்து யாராவது வந்தா...

(*சம்பா வாசலை பார்க்கிறாள்*)

இப்போ யாரும் வரல்லே... தப்பித்தவறி யாராவது வந்தா நீ

தலையை நிமிர்த்தி பேசக்கூடாது. தலையை மூடிக்கிட்டுத்தான் பதில் சொல்லனும். அதெல்லாம் எதுக்கு...? நான் இல்லாத நேரம் பார்த்து வீட்டுக்குள்ள யாரும் வர்றதுக்கு 'நோ எட்மிஷன்....'

**சம்பா:** நட்டுவாக்காலி வந்தா...?

**சக்காராம்:** ம்... (*கோபமாக*) அதைக்கூட அனுமதிக்க கூடாது... அது கொட்டும்...

**சம்பா:** கொட்டினா வலிக்கும்...

**சக்காராம்:** நான் பொல்லாதவனா இருக்கலாம்... பொம்பளைப் பொறுக்கியா வும் இருக்கலாம்... சேச்சே! இப்ப அப்படியெல்லாம் கெடையாது. ஆனா ஒண்ணு... நல்லா தண்ணி போடுவேன். நல்ல நண்பர்கள் கொடுத்த 'கிப்ட்' டுங்கிறதுனால அதை என்னால மறக்க முடியல்ல. ஆனாலும் இந்த வீட்டுல என்னை மதிச்சுதான் ஆகனும்...

**தாவுத்:** (*வாசலில் நின்று*) சஹாப்... மன்னிக்கனும்....

**சக்காராம்:** பரவாயில்லை! உள்ளே வா.

**தாவுத்:** வீடு திறந்திருந்தாலும் வரலாமான்னு கேட்டுட்டு வர்றதுதான் நாகரீகம். அதை அடிக்கடி மறந்துடுறேன்.

**சக்காராம்:** பழக்க தோஷம்...!

**தாவுத்:** எப்படி இருந்தாலும்... (*சம்பாவைப் பார்த்து*) இப்படி ஒண்ணை நான் எதிர்பார்க்கவே இல்லை...

**சக்காராம்:** எப்படி ஒண்ணை...

**தாவுத்:** ஆங்...ஆங்.. வெட்கப்படாதீங்க. சக்காரம் சஹாப்...
(*சம்பாவை கடைக்கண்ணால் பார்த்து கச்சிதம் என்று விரலை மடக்கி காட்டுகிறான். சக்காராம் வாய்விட்டுச் சிரிக்கிறான்.*)
கொடுத்து வைச்ச மகராசன்தான்... ஆத்தக் கண்டவ சேத்தைக் கண்டிருக்கா..

**சக்காராம்:** (*அதட்டலாக*) தாவூத்..!

**தாவுத்:** வாய்தவறி வார்த்தை பிசகிருச்சி. சேத்தை கண்டவ ஆத்தை கண்டிருக்கா....ம்.. நான் வர்றேன்... அப்புறமா வர்றேன்...சஹாப்... 'யூ ஆர் வெரி லக்கி...'
(*சம்பாவை ஓரக்கண்ணால் பார்த்துவிட்டு போகிறான் தாவுத். சம்பாவும், சக்காரமும் ஒருவரையொருவர் பார்த்துக்கொள்கிறார்கள்.*)

**சக்காராம்:** வீடு பிடிச்சிருக்கா...

**சம்பா:** ம்.. எங்க வீடு இதவிட பெரிசு... அதோட புதுசு...

**சக்காராம்:** சுண்ணாம்பு பூசிட்டா போச்சு...

**சம்பா:** என்ன பூசினாலும் இது ரொம்ப ரொம்ப பழசு...

**சக்காராம்:** புதுசு வேணும்னா வெளியால போக வேண்டியதுதான்...

**சம்பா:** ஏன்? வெளியே இன்னொரு வீடு இருக்கா?...

**சக்காராம்:** உள்ளது இது ஒண்ணுதான்... இதுதான் சக்காரமுடைய வீடு...

**சம்பா:** அதாரு சக்காராம்?

**சக்காராம்:** வேற யாரு? நானேதான்.

**சம்பா:** நீங்க சொன்ன மாதிரிக்கு நான் யாரோ எவரோன்னு... நினைச்சேன்...

**சக்காராம்:** என்னையும் வீட்டையும் உனக்கு புடிக்கலையா?

**சம்பா:** நான் அப்படி சொன்னேனா?

**சக்காராம்:** நான் அப்பவே சொல்ல வேண்டிய ஒன்ன சொல்ல மறந்துட்டேன்... இங்கே நீ எனக்கு பொண்டாட்டியாகவும் நடந்துக்கனும்....

**சம்பா:** அதாவது..... சின்ன வீடா?...

**சக்காராம்:** சின்ன வீடோ பெரிய வீடோ குடிசையோ... எப்படி வைச்சிக்கிட்டாலும் சரிதான்.

**சம்பா:** அதெல்லாம் அப்புறம் பார்த்துக்கலாம். எனக்கு பசிக்குது. ஏதாவது சாப்பிட இருக்கா? சப்பாத்தின்னா எனக்கு ரொம்ப பிடிக்கும்...

**சக்காராம்:** ஏதாவது இருக்கும் உள்ளே போய்ப்பாரு ...

**சம்பா:** நீங்க போய் பார்த்து ஏதாச்சும் இருந்துச்சின்னா எடுத்துக்கிட்டு வாங்க...

**சக்காராம்:** ஏய்! இந்த வீட்டுக்கு வர்ற பொம்பளைங்க என்னைய மரியாதையா நடத்தனும் ... ஏங்கிட்ட மரியாதையாவும் நடக்கனும்...

**சம்பா:** ஒரு பொன்னுக்கு சாப்பாடு கொடுக்கிறது மரியாதை கொறைச்சலா...? எனக்கு பசிக்குது... ஏதாவது பண்ணுங்க...

**சக்காராம்:** நீ என்னோட இருக்கிறவரைக்கும் யாருக்கும் பயப்படத் தேவையில்ல.

**சம்பா:** பயமா? எனக்கா? நான் யாருக்கு பயப்படனும்... என் புருஷனுக்கா? அவனுக்கு பயந்தா நான் ஓடியாந்து இருப்பேனா? தண்டச்சோறு! எந்த நேரமும் மில்லியப் போட்டுட்டு நான் சாகப்போறேன்...

சாகப்போறேன்னு உளறிக்கிட்டு கிடக்கும். சாகமா செத்துக்கிட்டு இருக்கிறவனோட வாழமுடியுமா? சரி இப்போ சாப்பிடுறதுக்கு ஏதாச் சும் கொண்டாங்க...

*(சக்காராம் அவள் அழகுக்கு அடிமையானவனாக, அரை மனதுடன் உள்ளே செல்கிறான். சம்பா மிருதங்கத்தைப் பார்க்கிறாள். அதை மடியில் எடுத்து வைத்துக்கொண்டு ஒரு தட்டுத் தட்டுகிறாள். சக்காராம் ஒரு தட்டில் சப்பாத்தியை எடுத்து வருகிறான்.)*

**சம்பா:** நீங்க டோலாக்குக் கூட வாசிப்பீங்க போலிருக்கே...

**சக்காராம்:** அது டோலாக்கும் இல்ல, தபேலாவும் இல்ல... மிருதங்கம்...

**சம்பா:** *(சாப்பிட்டுக் கொண்டே...)* எல்லாம் ஒண்ணுதான். என்புருஷன் மூஞ்சிமாதிரி. ரெண்டு கன்னத்திலேயும் மாறி மாறி அடிக்கனும் போல இருக்கு. அவன் டூட்டியில இருக்கிறப்போ ஸ்டேஷன்ல உள்ள துப்பாக்கி களவு போயிட்டுதாம். துப்பாக்கிய பாதுகாக்க முடியாதவனா பொண்டாட்டிய பாதுகாகக்க போறான்...? இந்த லெட்சணத்துல ஊர்காவல் வேல... தண்ணிவண்டி...

**சக்காராம்:** பொம்பளைங்கன்னா அளவோடு பேசணும்... அடக்கமா இருக்கணும்... இந்த மாதிரி பேச்செல்லாம எனக்கு பிடிக்காது.

**சம்பா:** உண்மைதான் ஐயா! பேசக்கூடாதுதான். பேசவைச்சுட்டானே இப்போ... நினைச்சாக்கூட என் ரெத்தம் கொதிக்குதே... என்னை வித்து காசு சம்பாதிக்க பார்த்தான். புருஷன் விரும்பி ஒருத்தனோட போறதைவிட நான் விரும்பி ஒருத்தன எடுக்குகிதுல என்ன தப்பு? *(சாப்பிட்ட கையை நக்கிக்கொண்டு)*

அந்த மாதிரி பொம்புளையா நான்? என்னை யாருன்னு நினைச்சிட்டான்? சரி இப்போ அதெல்லாம் எதுக்கு? கொஞ்சம் டீ போட்டு தர்றீங்களா?

**சக்காராம்:** கீச்சிடுவேன்... கீச்சு! அதெல்லாம் பொம்பளையோட வேலை...

**சம்பா:** அப்போ... கூப்பிடுங்க பொம்பளைய...

**சக்காராம்:** எந்தப் பொம்பளைய? நான் சொன்னது வீட்டுக்காரிய... வேலைக்காரிய இல்ல...

**சம்பா:** அட என்னையா சொன்னீங்க... எனக்குத்தான் டீ போடவே தெரியாதே...

**சக்காராம்** : ஒரு நாள் கூட போட்டதில்ல?...

**சம்பா:** நான் ஏன் போடுறேன். கல்யாணத்துக்கு முன்னால அம்மா. பின் னால அத்தை. யாரும் இல்லேன்னா என் புருஷனே போட்டுத் தருவான். அவனை நினைச்சாத்தான ஆத்திரம் ஆத்திரமா வருது.

**சக்காராம்** : ஓங்கிட்டேயும் ஒரு நியாயம் இருக்கத்தான் செய்யிது. மனைவி நோய் நொடியில விழுந்துட்டாள்னா அவ துணிமணிகளைக்கூட கழுவுறதுதான் கணவன்ங்கிறதுக்கு அடையாளம். அதையே அவ தெம்பா இருக்கிறப்போ ஒருத்தன் செய்ய ஆரம்பிச்சிட்டான்னா... அவன் ஆண்மையிலே கோளாறுன்னு அர்த்தம்.

**சம்பா** : *(அவன் சொல்வதை காதில் வாங்கிக் கொள்ளாது...)* அப்போ... நான் சின்னப்பொண்ணு. எங்கம்மா பெட்டிக்கடை ஒன்னு நடத்துனாங்க. சிந்தாதரிப்பேட்டை சுந்தரின்னா... தெருவே கிடுகிடுக்கும். அந்த கடையில திருட்டுதனமா பட்டையும், ஜிஞ்சரும் விப்பாங்க கல்லாப்பட்டறையில நான் குந்திக்கினு இருப்பேன். இந்தப்பாவி என்னா பண்ணுனான்னா... லபக்குன்னு ஒரு நாள் கடைக்குள்ள ரேடு பண்ணிட்டான். பட்டைய பிடிக்க வந்த பய இந்த சிட்டையும் பிடிச்சிட்டான். அப்புறம் சிங்கில் சாயா குடிக்கிற சாட்டுல அடிக்கடி கடைக்கு வருவான். கண்ணைச் சிமிட்டுவான். சினிமா போஸ்ட ரைப் பார்த்து ஏங்குற பசங்களப்போல என்னையவே பார்த்துக்கிட்டு இருப்பான். கட்டிக்கிறியா... கட்டிகிறியான்னு கெஞ்சுவான். காக்கிச் சட்டைக்காரனாச்சேன்னு நானும் கழுத்தை நீட்டிட்டேன். சும்மா சொல்லக் கூடாதய்யா... அந்த நேரத்தில ஆளும் நம்ம வாத்தியார் மாதிரிதான் இருப்பான். கசமாலம்! இப்படி இருப்பான்னு யாருக்கு தெரியும்? ஓ... தப்பு.. தப்பு! நான் கண்டபடி பேசிட்டேன். போகட்டும்... இப்போ டீக்கு என்ன பண்ணுறது? சாப்பிட்டதும் டீ குடிச்சு பழகிப் போச்சு...

*(சக்காராம் செய்வதறியாது திகைத்து நிற்க... தாவுத் வருகிறான்)*

**தாவுத்** : சக்காராம் சஹாப்...

**சக்காராம்** : தாவுதா...

**தாவுத்** : வரலாமா?....

**சக்காராம்** : நல்ல சமயத்துல வந்தே... சீக்கிரம் வாய்யா...

(அவனை ஒரு பக்கமாக கூட்டிக்கொண்டு போய்)

உனக்கு டீ போடத் தெரியுமா?

**தாவுத்:** ஓ...யெஸ்... சிந்தாதரிப்பேட்டை சுந்தரியோட சிங்காரப் பைங் கிளிக்கு டீ... என்னா 'ஜூஸ்' கூட போடலாம். ஓ... நீங்க கோவிச் சிக்காதீங்க... (அடுக்களைக்குள் விரைந்து போகிறான்... அடிக்கடி சம்பாவையும் பார்த்துக்கொள்கிறான்.)

**சக்காராம்:** உனக்கு முன்னாடி இருந்தவ... அவதான் ஏழாவது! போன வாரம்தான் போனா...

**சம்பா:** செத்துப் போயிட்டாளா?

**சக்காராம்:** இல்லே... நான்தான் துரத்திட்டேன்... பிடிக்கிற வரைக்கும் வைச்சிருப்பேன்... பிடிக்கல்லேன்னா சீட்ட கீச்சிடுவேன்... அப் படியே வெளியே அனுப்புறப்போ போக வேண்டிய இடத்துக்கு ஒரு டிக்கட்... ஒரு சேலை... ஒரு ஜாக்கெட். வழிச்செலவுக்கு கொஞ்சம் காசு... இதெல்லாத்தையும் கொடுத்துத்தான் அனுப்புவேன்.

**சம்பா:** நான் இப்போ போறதா உத்தேசம் இல்ல... தாவுத்!

**தாவுத்:** (ஓடிவருகிறான்) கூப்பிட்டீங்களா?

**சம்பா:** ஒரே ஓட்டமா போய் ஜரிதா பீடா வாங்கிட்டு வர்றீங்களா?

**தாவுத்:** ஓ.. தாராளமா... இப்பவே வாங்கியாறேன்...

**சக்காராம்:** இந்தாய்யா... தாவுத்! ஏன் வெறி நாய் மாதிரி பிச்சுக்கிட்டு ஓடுறே.... இந்தா காசு. ரெண்டு வாங்கிட்டு வா...

**தாவுத்:** ஆல்ரைட்.. கண்மூடி முழிக்கிறத்துக்குள்ள வந்திடுவேன்...

(சம்பாவை ஒரு பர்வை. ஒரே ஓட்டம்)

**சக்காராம்:** போற போக்க பாத்தா பய எதுலயாவது முட்டிமோதிக்கிருவான் போலத்தெரியுது...

(சக்காராம் கதவை சாத்துகிறான் சம்பாவிடம் மனதை பறிக்கொடுத்த நிலையில் அவள் தோளில் கையை வைக்கிறான்)

**சக்காராம்:** சம்பா! உன்னோட கன்னம் சந்தனக் கிண்ணம்...

**தாவுத்:** (வெளியிலிருந்து) சஹாப்...(சக்காரம் கதவை திறக்கிறான்)

அதுக்கிடையில கதவை சாத்தியாச்சா..?

(பீடாவை கொடுக்கிறான் சம்பாவின் கவர்ச்சி பார்வை... தாவத் உள்ளே போய் தேநீர் தயாரிக்கின்றான்.)

**சம்பா**: நல்ல மனுஷன்...

**சக்காராம்**: ம்...

**சம்பா**: தங்க மனசு...

**சக்காராம்**: ம்...ம்... இங்க அடுத்தவங்களோட அநாவசியப் பேச்சு வைச்சிக்கப் கூடாதுன்னு சொல்லி இருக்கேன். ஞாபகம் இருக்கா?...

**சம்பா**: இருக்கு... இருக்கு. இப்போ நான் 'டிரஸ் சேஞ்' பண்ணிக்கப் போறேன்...

(சூட்கேஸை திறக்கிறாள். தனது ஆடையை மாற்ற தொடங்குகிறாள்.)

**சக்காராம்**: கொஞ்சம் பொறு. தாவுத் இங்கே வந்த பிறகு உள்ளே போய் மாத்திக்கலாம்...

**சம்பா**: இதுலே என்ன வெக்கம்... நீங்கதானே சொல்லியிருக்கீங்க யாருக் கும் பயப்பட வேணாம்னு...

(ஒரு ஓரமாக நின்று புடவையை மாற்றுகிறாள். தேநீரோடு வந்த தாவுத் அவளை பார்க்காதது போல் பார்த்துவிட்டு நாக்கை கடித்துக்கொள்கிறான்... சக்காராம் இதை சாடையாக கவனிக்கிறான்...)

**தாவுத்**: (சக்காராமிடம்) சஹாப்... டீ... ரெடி...

**சக்காராம்**: தாவுத்! இனிமே நாம ரெண்டு பேரும் உன்னோட கடையிலேயே சந்திச்சிக்குவோம்...

**தாவூத்**: ஓ... யெஸ்... சந்திச்சா போச்சுது... ச்சூ... ச்சூ

**சக்காராம்**: என்ன அது...?

**தாவுத்**: (சமாளித்துக்கொண்டு) ஒண்ணுமில்ல... ஒண்ணுமில்ல... நான் வர்ரேன் (சம்பாவிடம்) பிறகு வாரேன்...

**சக்காராம்**: வரவேணாம்... நானே வந்து சந்திக்கிறேன்...

**தாவூத்**: அப்படியா...? அப்போ... நான் போயிட்டு வர்ரேன்...

(அவன் வெளியே போக சக்காராம் உடனே தாழ்ப்பாள் போடுகிறான்)

**சக்காராம்**: போனா போதும்...

**சம்பா**: பாவம்... தங்கமான மனுஷன்...

**சக்காராம்**: இப்ப... என்னா அதுக்கு... எத்தனை தரம்தான் சொல்லுறே?. தங்கம்னா உரைச்சு பூசிக்கிறதா...?

(தேநீர் அருந்துகின்றனர்)

**சம்பா**: டீ கூட ரொம்ப நல்லா போட்டிருக்கிறாரு...

**சக்காராம்** : (அதை விரும்பாதவனாக) ஹூம்....

**சம்பா:** கைராசிக்காரர் போலிருக்கு.

**சக்காராம்** : என்ன சொல்லுறே...

**சம்பா:** பீடா ரொம்ப டேஸ்டா இருக்கு... சாப்பிட்டு பாருங்களேன்...

**சக்காராம்** : நீயே... என் வாயிலே போட்டுவிடு...

**சம்பா :** அதுக்கென்ன? வாயத்திறங்க...

*(பீடாவை சக்காராம் வாயில் போடுகிறாள்)*

ஒரே தூக்கமா வருது. அந்த பரதேசி நாலு நாளா என்ன தூங்கவே விடல்ல... ராத்திரிபூரா... ஒரே சாகப்போறேன்னு... பொலம்பிக் கிட்டு இருந்தான். நான் கொஞ்ச நேரம் தூங்கபோறேன்...

**சக்காராம்** : இந்த நேரத்திலேயா?

**சம்பா:** தூக்கத்துக்கும் துக்கத்துக்கும் நேரம் காலம் ஏது? சாப்பாடு ரெடின்னா எழுப்புங்க... கட்டில் மெத்தை ஒண்ணுமில்ல...

**சக்காராம்** : உள்ளதே ஒரு பாயும் ஒரு விரிப்புந்தான். நான்கூட அதை வைச்சுத்தான் சமாளிக்கிறேன்.

**சம்பா:** எனக்கு தூக்கம் வருதுன்னா...

*(விரிப்பை எடுத்துக் கொண்டு அவள் நித்திரைக்கு போகிறாள்)*

**சக்காராம்** : இங்க தூங்க கூடாது. உள்ளே போய் தூங்கு... யாராவது வந்தா என்ன சொல்வாங்க ...

**சம்பா:** என்னத்த சொல்லுறது....? யாரோ ஒரு பொம்பளை படுத்து தூங்குறான்னா சொல்லுவாங்க?...

*(சம்பா உள்ளே போய் விரிப்பை விரித்து உறங்குகிறாள். சக்காராம் அவளை பார்த்து இரசித்தபடி மிருதங்கத்தை எடுத்து வாசிக்கிறான். இருள் சூழ்கிறது. மிருதங்க ஒலி மட்டும் கேட்டுக்கொண்டே இருக்கிறது.)*

**(சில விநாடிகளின் பின் மெதுவாக ஒளி பரவுகிறது)**

*(சக்காராம் மிருதங்கத்தை எடுத்து வைத்துவிட்டு அவன் சம்பாவின் அருகே போய் அமர்ந்து அவளைத் தட்டியெழுப்புகிறான்)*

**சக்காராம்** : சம்பா... உன்னைத்தான் எந்திரின்னா...

*(அவள் உறக்கத்திலிருக்கிறாள்)*

நான் தூங்க முன்னாடி நீ தூங்கக்கூடாது... *(பலமாக)* எந்திரி...

**சம்பா:** *(திடீரென எழுந்து)* யாரது இந்த... நேரத்துல... ஓ... நீங்களா?

நான் நினைச்சேன் அந்த சோடாப்புட்டிதான் எழுப்புதாக்கும்னு...

**சக்காராம்** : யாரைச் சொல்றே?...

**சம்பா**: வேற யாரு... என்னோட கசமாலம்தான்... இப்ப எதுக்கு என்னை எழுப்புனீங்க...

**சக்காராம்** : ( அருகில் நெருங்கி ) சம்பா.... பரோட்டா... போடட்டுமா...

**சம்பா**: ஊம்... இதுதானே கூடாது... உங்க மனசு இப்போ எனக்கு நல்லா புரிஞ்சிப்போச்சு நான் புருஷனை விட்டுட்டு வந்திருக்கலாம். ஆனா... மூர்மார்க்கெட் இல்ல.

**சக்காராம்** : சூப்பர் மார்க்கெட்டாவே இருந்துட்டு போயேன். எனக்கு எல்லாமே ஒண்ணுதான்.

**சம்பா**: நீங்க நினைக்கிற மாதிரி பொம்பளை இல்ல நான். நான் வீட்டை விட்டு ஓடியாந்ததே என் மானத்தைக் காப்பத்திக்கத்தான். தெரியுமா அது? மனைவி இருக்கிறபோ கணவன் இன்னொருத்தியோட போகட்டும். அது தப்பு கிடையாது. கணவனே மனைவியை இன்னொருத்தனோட அனுப்ப துணிஞ்சிட்டான்னா அவனை எதுல சேர்க்கிறது. என்ன தண்டணை கொடுக்கிறது. செருப்பால அடிக்க வேணாம்? அவனோட சேர்ந்து வாழலாமா? அவனுக்கு பயந்து இங்கே வந்தா... நீங்க பொட்ட நாய்க்குப் பின்னால சுத்துற மாதிரி என்னையே சுத்துறீங்க. அவன் தண்ணி போட வக்கில்லாம தடுமாறுறான். நீங்க தண்ணி போட்டுட்டீங்கன்னா வேற வழியில் லாம தடுமாறுறீங்க.

**சக்காராம்** : அங்கேதான் ரெண்டு வித்தியாசம். அவன் தண்ணி போடனும்னா உன்னை விப்பான். நான் தண்ணி போட்டுட்டேன்னா என்னை யவே விப்பேன்.

**சம்பா**: விக்கிறதும் விலைபேசுறதும் நல்ல ஆம்பிளைங்களோட குவாலிபி கேஷன் இல்ல சார். இந்தாங்க... இது எல்லாத்தையும் விட்டுட்டு முதல்ல சாப்பாட்டுக்கு வழியைப் பாருங்க.

*(சம்பா கொட்டாவி விட்டவாறு நிலத்தில் சாய்கிறாள். சக்காராம் ஏமாற்றத்தோடு திரும்புகின்றான்.)*

**(இருள் மெல்லச் சூழ்கிறது)**

## காட்சி : 08

(பகல் நேரம். சக்காராம் தூங்கிக்கொண்டிருக்கிறான். சம்பா வீட்டில் இல்லை. சம்பாவின் கணவனான ராஜேஸ் காக்கிச்சட்டை அணிந்தவனாக கதவோரம் நின்று பார்த்துவிட்டு உள்ளே வருகிறான். அவன் தலையில் ஒரு போலிஸ் தொப்பி. சவரம் செய்யாத முகம். கையில் ஒரு துணிப்பை. சோகமான தோற்றம். செருப்பை கழற்றி வைக்கிறான். சக்காராமை சுற்றி வந்து, சுவர் ஓரமாக பையை வைத்துவிட்டு ஒரு ஏப்பம் விடுகிறான். பின்பு சமையலறைக்குச் சென்று பார்த்துவிட்டு, முகத்தைக் கழுவிக்கொண்டு திரும்பி வந்து சுவர் ஓரமாக உட்கார்ந்து கொள்கிறான். தனது பையிலிருந்து ஒரு போத்தலை எடுத்து ஒரு மடக்கு குடித்து விட்டு வைக்கிறான். சக்காராம் திரும்பிப் படுக்கிறான். சில விநாடிகளுக்குப் பின் கண்விழித்தவாறு...)

**சக்காராம்** : இதென்ன வெளிச்சம்... ஏய் கதவை மூடு (போர்த்திக் கொள்கிறான்) தூங்க முடியல்ல. கதவை மூடு... யார் கதவை திறந்துவிட்டது? சொல்றது கேக்கலையா? (நன்றாகக் கண்ணைத் திறந்து பார்த்துவிட்டு) யாரது...? (ராஜேஸை காண்கிறான்) யார் அங்கே இருக்கிறது? எங்கே சம்பா? (எழும்பி உட்கார்ந்துக்கொண்டு) நீ எப்படி உள்ளே வந்தே? யார் கதவை திறந்துவிட்டது? ம்.. சம்பா எங்கே..? நீ யாரு... நீ எப்படி உள்ளே வந்தே? ஏன் பேசாம இருக்கே? உனக்கு என்ன வேணும்? இது என்ன சத்திரமா? ஆங்... நீ யாரைப் பார்க்கணும்? நீ ஊமையா?

(ராஜேஸ் இல்லையென்று தலையை அசைக்கிறான்)

இங்கே எதுக்கு வந்தே? பதில் சொல்லலேன்னா போலீஸ்ல புடிச்சி கொடுத்துடுவேன்...உன்னை பார்த்தா போலீஸ்காரன் மாதிரி இருக்கு... இங்க என்ன வேலை... சொல்லு... 'வு ஆர் யூ....?'

**ராஜேஸ்:** நான்... சம்பா... என்னோட 'ஒய்ப்...'

**சக்காராம்** : ஹ ஹ் ஹ ஹ ஹா... (சிரிக்கிறான்) சம்பாவோட புருஷனா...? இங்கே என்ன வேலை? சம்பா எங்கே? அவளை என்ன செய்தே? எப்படி உள்ளே வந்தே?....

**ராஜேஸ்** : நான் அவளை பார்க்கத்தான் வந்தேன். கதவு தொறந்து கிடந்தது. உள்ளே வந்தேன்.. சம்பாவை காணல்ல. உங்களை சந்திச்சது ரொம்ப சந்தோஷம்...

**சக்காராம்** : என்னை சந்திக்கிறது உனக்கு சந்தோஷமா? ஏன் சம்பாவை கூட்டிக்கிட்டு போகலாமுன்னு வந்தியா? 'டெபனீட்லி' அவ வர மாட்டா...

**ராஜேஸ்** : இல்ல...இல்ல... நான் அவளைக் கூட்டிட்டுப் போகவரல்ல.. அவ என்கிட்ட இருக்கிறதவிட இங்க சந்தோஷமா இருந்தா எனக்கு போதும்.

**சக்காராம்** : பின்ன ஏன் வந்தே...?

**ராஜேஸ்** : சும்மா பார்த்துட்டு போகலாம்னு வந்தேன். அவளை பார்க்காம என்னாலே இருக்க முடியல...

**சக்காராம்** : அவ்வளவு பாசம்....?

**ராஜேஸ்**: என்ன இருந்தாலும்... பொண்டாட்டிதானே...?

**சக்காராம்** : அவ எங்க காப்பி போட்டுகிட்டு இருக்கிறாளோ ?...

**ராஜேஸ்**: இல்லே...

**சக்காராம்** : என்ன இல்லே...?

**ராஜேஸ்**: காப்பிபோட இல்ல...

**சக்காராம்** : அது உனக்கு எப்படித் தெரியும்?

**ராஜேஸ்**: உள்ளே பார்த்தேன்...

**சக்காராம்** : வீட்டை சோதனை போட்டுட்டியா? போ வெளியே... இல்லே கழுத்த புடிச்சி வெளியே தள்ளிடுவேன்...

**ராஜேஸ்**: சத்தம் போடாதீங்க. சம்பாவை பாத்துட்டு போயிடுறேன்...

**சக்காராம்** : அவ உன்னை பார்க்க மாட்டா...உன்னை அவளுக்கு பிடிக்காது...

**ராஜேஸ்**: பிடிச்சாலும் பிடிக்காட்டியும் பொண்டாட்டி பொண்டாட்டிதானே?

**சக்காராம்** : அவ உன்னை வேணாம்னு வந்தவ...

**ராஜேஸ்**: அவ வேணாம்னாலும் என்னால பார்க்காம இருக்க முடியல்ல.

**சக்காராம்** : இப்போ அவ என்னோட வாழ்ந்துக்கிட்டு இருக்கா...

**ராஜேஸ்**: அதனால தான்... அவள பார்க்க நான் இங்கே வந்திருக்கேன்...

**சக்காராம்** : உன்னோட அவ வரமாட்டா...

**ராஜேஸ்**: 'டேக்கிட் ஈஸி...' அவ சந்தோசமாயிருந்தா அதுவே எனக்கு போதும்.

**சக்காராம்** : அவ உன்ன வெறுக்குறா...

**ராஜேஸ்:** அது என்னோட தரித்திரம்...

**சக்காராம்** : அப்ப ஏன் இங்க வந்து தொலையிற...?

**ராஜேஸ்:** அவ என் சொந்தம்... அது ஆண்டவனால நிச்சயிக்கப்பட்ட பந்தம்... அவ ஒரு ரதி.... ரம்பை... அவ உடம்பு... என்னா சைஸ்.... முன்னால சாத்துக்குடி... பின்னால அத்துப்படி...

**சக்காராம்** : *(ஆத்திரத்துடன் எழும்புதல்)* சீ... போ வெளியே... இதுக்கு மேல உளரி னேன்னா பல்லை கழட்டிபுடுவேன். சொந்தப் பொண்டாட்டியப் பத்தி பேசுற பேச்சு...வெக்கங்கெட்ட நாயே! போடா வெளியே...

*(கழுத்தை பிடித்து வெளியே தள்ளுகிறான்.)*

**ராஜேஸ்:** ஐய்யய்யோ என்னோட பை... *(உள்ளே வந்து)* சம்பாவை பார்த் துட்டு போறேன். என்னை வெளியே தள்ளிடாதீங்க....

**தாவுத்:** சக்காராம் சஹாப் *(உள்ளே வந்துகொண்டே)* எங்கே மணிப்புறாவை காணோம்.

**சக்காராம்** : இதுதான் புறாவோட புருஷன்...

**தாவுத்:** நினைச்சேன்... ஏட்டா இருக்கிறவன் ரிடையர் ஆனாலும் சேர்ட்டு பெரிசாதான் இருக்கும். கிளி இருந்த கூடு இதுதானா?... சலாம் சஹாப்...

*(ராஜேஸ் அசட்டு சிரிப்பு சிரிக்கிறான்)*

நீங்க கிளிய கொண்டாந்தீங்க. கூடு பின்னாலேயே வந்துட்டுது..

**சக்காராம்** : பார்த்தா... அப்பாவி மாதிரி இருக்கான்... ஆனா... அயோக்கிய ராஸ்கல்! தன் சொந்த பொண்டாட்டிய வர்ணிச்ச மாதிரிய நீ கேக்கணுமே...

**தாவூத்** : அனுபவிச்சவன்... அளந்து சொல்லி இருப்பான். அதுல என்ன தப்பு?

**சக்காராம்** : அவனா அனுபவிச்சான். சுத்த போக்கிரிப்பய. எனக்கு வர்ற ஆத்திரத்துக்கு இவனோட எலும்பை ஒவ்வொண்ணா எண்ணனும் போல இருக்கு...

**தாவூத்:** கிளிதான் உங்ககிட்ட இருக்கே. கூண்ட விட்டுத்தள்ளுங்க...

**சம்பா:** *(வெளியில் இருந்தபடி)* நாளைக்கு வர மறந்துடாதீங்க.

*(துவைத்த துணிகள் தோளில் தொங்க வருகிறாள்...)*

**சம்பா:** எழும்பிட்டீங்களா! நான் ஆத்துக்கு போறப்போ நீங்க நல்ல தூக்கம். *(சம்பா ராஜேஸை காண்கிறாள்)* இந்த பேஜாரு இங்கே எப்போ வந்தது *(தோளில் இருந்த ஈரத்துணிகளை ஒரு கொடியில் போடுகிறாள். சேலைத் தலைப்பை இடுப்பில் சொருகிக்கொண்டு.)*

**சக்காராம்:** நான் தூக்கத்துல இருக்கிறப்போ அது உள்ளே வந்து குந்திக்கிட்டு இருக்கு... உன்னை பார்க்கணுமாம்....

**சம்பா:** ம்.. என்னை பார்க்காம போகாதாமோ? ஏய்... இந்தா! பாத்திட்டே இல்ல.... போ வெளியே. போ... உன்னை யார் இங்க வரச்சொன் னது? போய்த் தொலை. உன்னோடு வாழ்ந்தது போதும். இனி இந்த பக்கம் தலை காட்டாதே. உன்னோட எனக்கு எந்தவிதமான தொடர் பும் இல்ல.. போய்த்தொலை... போயிடு...

**ராஜேஸ்:** போறேன்... நான் போறேன். உண்மையிலே சாகப்போறேன். போய்ச் செத்து தொலையிறேன்.

**சம்பா:** சாகுறேன்னு சொல்லிக்கிட்டு இருக்காதே. இப்பவே செத்துத் தொலை... ஒரு துளி விஷமும், ஒரு முழங்கயிறும், நீ குடிக்கிற மில்லியோட விலைக்கும் கம்மிதான்.

**தாவுத்:** மனுஷன் இங்கேயே செத்துபோயிடுவான் போலிருக்கு...

**சம்பா:** சாகட்டும்... செத்தா ஒரு குழிய தோண்டி புதைச்சிடலாம்.

**ராஜேஸ்:** *( தடுமாறிக்கொண்டு )* பை...பை...ஏம்புட்டு பை... நான் சாகிறேன். செத்தே போறேன்.

*(போத்தலை எடுத்து குடிக்கிறான் சம்பா அவனை எட்டி உதைக்கிறாள். சக்காராம் சம்பாவைப் பிடித்துக்கொண்டு... )*

**சக்காராம்:** சம்பா அவன் உன்னோட புருஷன் உனக்கு இரக்கம்ங்கிறதே கிடையாதா...?

**சம்பா:** இவனுக்கா? இரக்கமா? கல்யாணம்னா என்னான்னு தெரியாத வயசுல என்னை கல்யாணம் முடிச்சான். அந்த வயசிலேயே இரவு இரவா சித்திரவதை பண்ணுவான். அவன் வூட்டு ஆசைக்கு இடங்கொடுக்கல்லேன்னா.... உடம்பெல்லாம் சிகரட்டால சுடுவான். தாங்க முடியாம நான் ஓடினேன். விட்டானா பாவி... என்னை பிடிச்சிகிட்டு வந்து என்ன செய்தான் தெரியுமா? உடம்பெல்லாம் எரியுது எரியுதுன்னு கதறக் கதற மிளகாய்த்தூள அள்ளி தேச்சான்.

ஐயோ என்ன மாதிரி துடிச்சிருப்பேன்? இவனுக்கா இரக்கம்? இரு... இப்ப அதே மாதிரி மிளகாய் தூளை உனக்கும் தேய்க்கிறேன். (சமையல் கட்டுக்கு போக எத்தனிக்கையில் சக்காராம் அவளைப் பிடித்துக்கொள்கிறான்)

**சக்காராம்:** தாவுத்....அவனை எப்படியாவது வெளியே தள்ளு

(தாவுத் ராஜேஷை இழுத்து வெளியே தள்ளுகிறான்)

**சம்பா:** இந்த பக்கம் இனி வந்தே... உன்னை மிளகாய் பொடியைப் போட்டே தாழிச்சி எடுத்துடுவேன்.

(தாவுத் வெளியே வந்து கதவை சாத்துகிறான்)

விடுங்க என்னை...

(திட்டிக்கொண்டு உள்ளேபோய் துணிகளை காயப்போடுகிறாள்)

**தாவுத்:** அப்பா... புயலே அடிச்சு ஓஞ்சமாதிரி இருக்கு. இவ பொல்லாதவ... பத்தரகாளி... கவனம். நினைச்சாலே பயமாயிருக்கு. என்ன பொம்பளை இவ.... சைய்....

**சக்காராம்:** ஆம்பளை ஆம்பளையா இல்லாதபோது பொம்பளை எப்படி பொம்பளையா இருக்கப்போறா? வீட்டுக்கு வீடு வாசப்படிதான்.

(தாவுத் பெருமூச்சு விடுகிறான். சக்காராம் பீடி ஒன்றை பற்ற வைக்கிறான்.)

(காட்சி முடிவு)

## காட்சி : 09

*(இரவு நேரம். சக்காராம் இரவு சாப்பாட்டுக்கு பிறகு திருப்தியுடன் காணப்படுகிறான். தூங்கிக்கொண்டிருக்கும் சம்பாவை பார்க்கிறான். வெளியறையில் போய் உலாவுகிறான். திரும்பி வந்து சம்பாவை பார்த்து ரசிக்கிறான். மிருதங்கத்தை எடுக்கிறான். ஒரு தட்டு தட்டிவிட்டு மீண்டும் அதனை ஓரமாக வைத்துவிட்டு சம்பாவின் அருகில் வந்து உட்காருகிறான். சம்பா திரும்பி தூங்குகிறாள். சக்காராம் அந்தரப்படுகிறான். கடைசியில் அவளை மெதுவாக தொடுகிறான். அவள் விழித்து எழுந்து கொள்கிறாள்.)*

**சம்பா:** என்னது? ஆங்..நீங்களா? *(அவனை உற்று பார்த்துவிட்டு)* என்ன வேணும்? தெரியுமே அதுக்குதான் மறுபடியும். நான்தான் சொல்லியிருக்கேனே எனக்கு அது பிடிக்காதுன்னு... ஏன் அப்பவும் திரும்ப திரும்ப வாரீங்க... வாயால ஒழுங்கா சொன்னா புரியாதா? என்னை தொந்தரவு செய்யாதீங்க... எனக்கு பிடிக்காது... பிடிக் காது... என்னை சும்மா தூங்க விடுங்க போங்க... போயிடுங்க...
*(சக்காராம் விலகி நிற்கிறான்)*

**சக்காராம் :** உனக்கு பிடிக்குதோ.... இல்லையோ எனக்கு அதுதான் பிடிக்கும். நீ என்னோட மனைவியா இருக்கணும்ங்குறது என்னோட கண்டி ஷன்... இதுக்கு நீ சம்மதிச்சு இருக்கே... இங்க வர்ர ஒவ்வொரு பொம்பளையும் அதை 'கீப் அப்" பண்ணிதான் ஆகணும்... இது வரைக்கும் ஏழு பேர் இருந்தாங்க. ஒருத்திக்கூட மறுப்பு சொன்னது கிடையாது...

**சம்பா:** அவளுகளும் உங்க டைப்பா இருக்கும்...

**சக்காராம் :** உன்னை ஏங்கிட்டே அடகுவைச்சிருக்கே ....

**சம்பா:** அடகு வைச்ச பொருளை அடகுகடைக்காரன் அனுபவிக்கிறதுக்கு கூட உரிமை இல்லே.

**சக்காராம் :** இங்கே உள்ள ஒவ்வொண்ணையும் நான் அனுபவிச்சே ஆகணும்.

**சம்பா:** இப்ப என்னை தூங்கவிடப் போறீங்களா இல்லையா?...
*(சக்காராம் சற்று தள்ளிப் போகிறான்)*

**சக்காராம் :** சரி... தூங்கு. தூங்கித்தொலை.
*(போத்தலிலுள்ள மதுவை எடுத்துக்குடிக்கிறான்)*

**சக்காராம்** : மூக்குமுட்ட குடிக்கவேண்டியது. குறட்டைவிட்டு தூங்கவேண்டியது. பெருமூச்சுவிட்டு ஏங்க வேண்டியது நான். இதை மனசுல வைச்சிக்க. நாளைக்கு நீ நிக்கப் போறது பிளாட்பாரம். ஒண்ண சுத்த போறது பிணந்தின்னி கழுகுக...

*(சம்பா சிறுது நேரம் யோசிக்கிறாள். அவளுக்கு மட்டும் தனியாக ஒளி பரவுகிறது. 'கலர்வில்' அவளது முகத்தில் பலவித வர்ணங்களைப் பாச்சுகிறது. சக்காராம் கூறிய வார்த்தைகள் எதிரொலிக்கிறது.)*

**குரல்:** இதை மனசுல வைச்சிக்க. நாளைக்கு நீ நிக்கப் போறது பிளாட்பாரம். ஒண்ண சுத்த போறது பிணந்தின்னி கழுகுக... *(அவள் ஒரு தீர்மானத்துக்கு வருகிறாள்)*

**சம்பா:** *(சக்காராமின் கையை பிடித்து)* வாங்க...வாங்க... நீங்க கேக்கிற எல்லாத்தையுமே கொடுக்கிறேன்... எங்கே அந்த போத்தல்? முதல்ல அந்த போத்தல கொடுங்க... அப்புறம் உங்களுக்கு எதுவேணுமோ அத எடுத்துக்குங்க... நான்தானே வேணும். இன்னும் கொஞ்சம் நேரம்... *(மீண்டும் குடிக்கிறாள்)* மீட்க முடியாத பொருளை அடகுக்காரன் அனுபவிக்கிறதும் ஞாயம்தான்... மது உள்ளே போன உடனே மதி வெளியே போயிடுது... அப்புறம், என்னை எதுவுமே கேக்க தேவையில்ல. ஆயிரம் மிருகங்களை சந்திக்கிறதைவிட ஒரு மிருகத்துக்கிட்டேயே 'சரண்டர்' ஆகிடலாம். *(போதையில் சிரிக்கிறாள். சக்காராம் மோகத்தில் திளைக்கிறான்...)*

**(மேடையில் இருள் சூழ்கிறது.)**

*(பொழுது விடிகிறது. மேடையில் மெல்ல ஒளி பரவுகிறது. சம்பா உறங்கிக் கொண்டிருக்கிறாள். சக்காராம் சேட்டை மாற்றுகிறான். சம்பாவை மெதுவாக தொட்டுவிட்டு வாசலில் இருந்த செருப்பை மாட்டிக்கொண்டு வெளியே போகிறான். சம்பா விழிக்கிறாள். சோம்பல் முறிக்கிறாள். முகம் கழுவி வந்து சாப்பிடுகிறாள். - சிறிது நேரத்தில் சக்காராம் திரும்பி வருகிறான்.)*

**சக்காராம்** : *(செருப்பை வாசலில் கழட்டி வைத்தவாறு)* சம்பா...

**சம்பா:** என்ன இன்னைக்கும் வேலை இல்லையா?

**சக்காராம்** : வேலை தான். லீவு போட்டேன்.

**சம்பா:** ஏன்?

**சக்காராம் :** ஏன்னு சொல்லு பார்க்கலாம்?

**சம்பா:** யாருக்கு தெரியும்?

**சக்காராம் :** எல்லாம் ஒன்னாலதான். (சேட்டை கழட்டி மாட்டுகிறான்)

**சம்பா:** அடங்கொப்புறானே... என்னாலேயா?

**சக்காராம் :** வேலையில மனச செலுத்தவே முடியல்ல. (அருகில் போகிறான்)

**சம்பா:** என்னமோ என்னை சாப்பிடவிட்டா சரி..

**சக்காராம் :** பகல்னு ஒண்ணு இல்லாம இருந்தா...

**சம்பா:** ராத்திரிங்கிறதே தெரியாம போயிடும்...!

**சக்காராம் :** நேத்து ராத்திரி ஒரு மறக்க முடியாத ராத்திரி... உனக்கு எப்படி?

**சம்பா:** அப்படி என்ன விஷேசம்? பொறுங்க யோசிச்சு சொல்லுறேன்...

**சக்காராம் :** என்னால மறக்கவே முடியல்ல...

**சம்பா:** எனக்கு ஒண்ணுமே ஞாபகம் இல்ல...

**சக்காராம் :** இன்னும் அதே நினைப்புத்தான்...

**சம்பா:** ஆம்புளைகளுக்கு அதவிட வேற வேலையே கெடையாது...! 'பைண்ட்' பண்ண நெறைய இருக்கு... ஆனா 'மைண்ட்' இல்ல. இந்த சக்காராமுடைய 'டைப்'பு... உமர்கையாமோட 'லைப்'பு.....

**சம்பா:** தள்ளி உக்காருங்க... நான் இன்னும் குளிக்கவே இல்ல...

**சக்காராம் :** அடுத்த மாசம் இதை சொன்னேன்னா என்மனசு இன்னும் குளிர்ச்சியா இருக்கும். சம்பா...

(கையை பிடிக்கிறான். சம்பா அவன் கையைத் தட்டிவிடுகிறாள்)

**சம்பா:** ச்சீ..ச்சீ... சாப்பிடுற நேரத்தில தொந்தரவு செய்யாதீங்கன்னா கேக்க மாட்டீங்களா....?

**சக்காராம் :** இந்த வீட்டுல நான் சொல்லுறதத்தான் மத்தவங்க கேக்கணும். கேட்டால் அடங்கி போவேன். கேக்கலேன்னா ஆத்திரக்காரனா ஆகிடுவேன். அப்படி ஆகிட்டேன்னா அப்புறம் ஒதைஒதைன்னு ஒதைப்பேன்... அதை யாரும் தடுக்க முடியாது...

**சம்பா:** ஆங்.. எனக்கா சொல்றீங்க...

**சக்காராம் :** நீ என்ன கொம்பா? இப்பவே... இந்த நிமிஷமே நான் சொல்லு றதை கேக்கணும்...

**சம்பா:** சும்மா வேலைய பாத்துக்கிட்டு போவீங்களா...?

**சக்காராம் :** சம்பா....

**சம்பா:** இந்தாங்க... கைய எடுங்க... என்னை தொந்தரவு பண்ணாதீங்க. கைய எடுங்கன்னா...!

**சக்காராம்:** கைய விடுறேன். நாளையிலிருந்து கைய கழுவுறேன். நீ வீட்டை விட்டு போயாகணும். உன் வயித்த கழுவுறத்துக்கு தெருநாயா நீ திரியணும்... தெருப்பொறுக்கிகள் உன் பின்னாலே சுத்தணும். அப்போ தான் உனக்கு புத்தி வரும்

*(சக்காராம் முன் அறைக்கு வருகிறான் சம்பா எல்லாவற்றையும் எடுத்து எறிகிறாள்)*

**சம்பா:** *(அவன் அருகில் வந்து)* எங்கே போத்தல்... போத்தல் எங்கே? நான் கேக்கிறது காதுல விழலையா? அந்த போத்தலை கொடுங்க...

**சக்காராம்:** நீயே எடுத்துக்குடி...

**சம்பா:** *(எடுத்துக்குடிக்கிறாள்)* இந்தாங்க... நீங்களும் ஊத்துங்க *(சக்காரா மின் வாயில் ஊத்துகிறாள்)*

இனி வாங்க. எதை வேணுமானாலும் எடுத்துக்குங்க... ஒரு பெண்ணோட சுகத்தை அனுபவிக்க நினைக்குறீங்க ஆனா அந்த பெண்ணோட சுகத்தை பத்தி அக்கறையே இல்ல. *(குடிக்கிறாள்)* வாங்க... ராத்திரி பகல் எந்த நேரமானாலும் வாங்க. நீங்க மட்டுமில்லே வேறு யாராயிருந்தாலும் வரச்சொல்லுங்க. அது வெறி நாயா இருந்தாலும் சரி. சொறி நாயா இருந்தாலும். சரி... *(குடிக்கிறாள். சற்று போதையுடன்)* இப்போ எனக்கு எல்லாமே ஒண்ணுதான்... *(தாவுத் கதவை திறந்துக்கொண்டு வந்தவன் அப்படியே நிற்கிறான்.)* யாரு தாவூதா? வாங்க... வாங்க... நீங்க மட்டும் ஏன் சும்மா இருக்கணும். நீங்களும் அனுபவிங்க... ஏய்... வா இங்கே... வா... வந்திடு... *(சக்காராமின் தோளில் சம்பா கையை போட்டுக் கொண்டு வெறியோடு சிரிக்கிறாள் - தாவுத் முகம் சுளித்தவாறு திரும்பிப் போகிறான்.)* என்னை போத்தலுக்குள்ள சிறை வச்சிருக்காங்க...

*(இருவரும் தள்ளாடியபடி உள்ளே போக மேடையில் இருள் சூழ்கிறது)*

**(காட்சி முடிவு)**

## காட்சி : 10

(ஒரு மாலை நேரம் : சக்காராம் சரஸ்வதி பூஜைக்கான ஏற்பாடுகளை கவனித்துக் கொண்டிருக்கிறான். தாவுத் ஜன்னல் ஓரமாக நின்று பார்த்துக்கொண்டிருக்கிறான். வீடு முன்னைவிட களையிழந்து காணப் படுகிறது.)

**தாவுத்:** (உள்ளே வந்துகொண்டே) சஹாப்... தொழில் இருக்கிறப்போ சோபாவுல உட்கார சொல்லுறவங்க தொழிலே இல்லேங்கிறபோது திண்ணை யில ஒதுங்கிறதகூட சகிக்க மாட்டாங்க...

**சக்காராம்:** எனக்காகத்தான் வேலையே தவிர... வேலைக்காக நான் இல்ல ...

**தாவுத்:** நல்ல ஜாதகத்துக்கு இந்த முடிவு சாதகமா இருக்காது. சஹாப்... வேலையில இருந்து உங்கள 'டிஸ்மிஸ்' பண்ணிட்டா...

**சக்காராம்:** 'ஐ டோன்ட் கெயார்' என் உடம்புல இன்னும் தெம்பு இருக்கு. இந்த வேலை இல்லேன்னா இன்னொரு வேலை. மண்ணுல வேரோடி வள்ர மரமும் தண்ணீர்ல வேர்விட்டு முளைக்கத்தான் செய்யிது. மான அவமானத்தை பற்றி எனக்கு கவலையில்ல. மிஞ்சிபோனா மூட்டை தூக்கி சம்பாதிக்கமாட்டேனா? பூசாரியா இருக்கிறதால இந்த பூணூலுக்கு கிடைக்கிற பெருமை, ஆசாரியா இருக்கிறதால ஒண்ணும் குறைஞ்சிட போறதில்ல. எங்கம்மா என்னை கீழ் ஜாதி நாயேன்னுதான் கூப்பிடுவா... எங்கப்பா மகனேன்னு வேணா... நாயேன்னு கூட கூப்பிடமாட்டார். ஏன்னா என்னால நாய்க்கு அவ மானம் வந்திடக் கூடாதுங்கிற நினைப்பு. இதுவரைக்கு யாருடைய உதவியும் இல்லாமல் காளான் மாதிரி வளர்ந்தவன் நான்.... இனிமேயும் எந்த பயலோட உதவியாலையும் வாழப்போறது இல்ல. சேலைய நேசிக்கிற மாதிரி நான் வேலைய நேசிக்கல்ல. இப்போ எனக்கு வேண்டியது சம்பா மட்டும்தான். என்னுடைய சொத்து, சுகம், சொந்தம், பந்தம் எல்லாமே சம்பாதான். மித்ததெல்லாம் எனக்கு ரெண்டாம் பட்சம்...

**தாவுத்:** உலகம் நமக்குள்ள இல்ல சஹாப்... உலகத்துக்குள்ளதான் நாம இருக்கோம். அதனால ஊர்ஜனங்கல பத்தியும் கொஞ்சம் நினைச்சு பார்க்கனும்....

**சக்காராம்** : அவுங்கள போய் படுக்க சொல்லு. (*கீழே உட்காருகிறான்*) பதவியில இருக்கிற ஒருத்தனுக்கு பிராந்திய கொடுத்து சாஸ்டாங்கம் பண்ணுற சனங்க... பசியால தவிக்கிறவங்களுக்கு பச்சத்தண்ணியும் கொடுக்க மாட்டாங்க. அவ்வளவு ஏன்? நான் ஆஸ்பிட்டல்ல ஒரு மாசமா சாகக் கெடந்தேன். அப்போ எவனாவது வந்து இவன் உயிரோட இருக்கானா, செத்துபோனானான்னு பார்த்தாங்களா? கெடக்குறானுக பொறுக்கி பயலுக. இப்போ என்ன சொல்ல போறாங்க? குடிகாரன்னு சொல்லப்போறாங்களா... இல்ல கூத்தி கள்ளன்னு சொல்ல போறாங்களா? இல்ல சம்பாவால தான் கெட்டு குட்டிசுவராகிட்டான்னு சொல்ல போறாங்களா?

**தாவுத்**: தூசு ஒட்டினா தட்டிவிடலாம். சேறு பட்டா கழுவித்தான் ஆகணும். இந்த வீட்டையே எடுத்துக்குங்க, அப்போ எப்படி இருந்தது... இப்போ எப்படி இருக்கு? என்ன இருந்தாலும் லக்ஷ்மி... லக்ஷ்மி தான்..

**சக்காராம்** : (*எழும்பியவாறு*) லக்ஷ்மி என்ன பொறுத்த வரையில செத்துப் போயிட்டா... கை நழுவுன பொருளையும் கை கழுவுன பொம்பளையையும் திரும்ப நினைக்கிறது என் வழக்கமில்ல. இப்போ சம்பாவோட... கால்தூசுக்கு ஒருத்தியும் ஈடாக மாட்டா...

**தாவுத்**: என் மனசுல பட்டதை சொன்னேன்... அப்புறம் உங்க இஷ்டம். கடையில ஒரு பையனை வச்சிட்டு வந்தேன்....

**சக்காராம்** : உருப்பட்டாபுலதான்.... சீக்கிரம் போயிடு. என்னை பத்தி கவலைப் படாதே.

(*தாவுத் வெளியே போகும்போது சம்பா குடத்துடன் வாசலுக்கு வருகிறாள். தாவுது சற்று நிற்கிறான். அவள் கைவிரல்களால் தண்ணீரைத் தொட்டு தாவுத் மீது தெளித்துவிட்டு உள்ளே வருகிறாள். சக்காராம் இதை கவனியாது பூசையில் ஈடுபட்டிருக்கிறான். சக்காராம் மணி அடிக்கிறான். சம்பா அடுக்களையில் மது அருந்துகிறாள்.*)

**சக்காராம்** : சம்பா...சம்பா...

**சம்பா**: கூப்பிட்டீங்களா..?

**சக்காராம்** : விடிஞ்சும் விடியாம போட்டாச்சா...?

**சம்பா**: யார் சொன்னது? லேசா வாய கொப்பளிச்சேன்..

**சக்காராம்** : இன்னைக்கு சரஸ்வதி பூசைன்னு நேத்தே சொல்லி இருக்கேன் இல்லே...

**சம்பா:** சம்பாவோட பூஜை எதுன்னு தெரியுமில்ல...?

**சக்காராம்** : வாயை மூடுடீ... நல்லா நாள் அதுவுமா... ஒரு பொம்பளை இருக்கிற லட்சணமா இது? இன்னிக்காவது குளிச்சி முழுகி இருக்க கூடாது... ச்சீ... வெட்கக்கேடு... யாராவது பார்த்தா என்ன நினைப்பாங்க... போ உள்ளே. வேறொருத்தியா இருந்தா கன்னத்தை திருப்பிவைச் சிடுவேன்...

**சம்பா:** கிழிச்சீங்க... சக்காரம் பைண்டர்... இந்த சம்பாவுக்கு 'சரண்டர்...' (அவன் அருகே போகிறாள்)

**சக்காராம்** : ஆங்... ஏய்.. அங்கேயே நில்லு. இந்தபக்கம் வந்திராதே. அபச்சாரம் அபச்சாரம்...

**சம்பா:** தீர்த்தத்தை மறந்துட்டீங்களா?

**சக்காராம்** : பூஜை முடியட்டும்...

**சம்பா:** (சிரிப்பு) என்னடா இது... வழக்கமா தீர்த்தம் முன்னால பூஜை பின்னால நடக்கும். இன்னிக்கு என்னடான்னா... பூஜை முன்னால தீர்த்தம் பின்னால. வழக்கத்தை மாத்துறது நல்ல பழக்கம் இல்ல சார்...

**சக்காராம்** : ச்சீ... வெட்கங்கெட்ட நாயே (கன்னத்தில் அறைகிறான்) போ வெளியே... (சம்பா சிரிக்கிறாள்) இப்பவே தொலைஞ்சி போயிடு... (தலைமயிரைப் பிடித்து தள்ளுகின்றான். அவள் நிலத்தில் விழுகிறாள். அதிர்ந்துபோன சக்காராம் அவள் அருகே ஓடி வருகிறான்) ஆண்டவா... அடி பலமா பட்டுட்டுதா?... எங்கே பார்க்கலாம் காயம் ஒண்ணும் இல்லையே...? காட்டக் கூடாதா...? ம்... காட்டுனா...

(சற்று ஒளி மங்குகிறது . சிரித்தவாறு சம்பா அவனை இழுத்துக்கொண்டு சமயலறைப் பக்கம் வருகிறாள். சக்காராம் சாராய போத்தலை எடுத்துக் குடிக்கிறான்)

**சம்பா:** கொடுங்க....கொடுத்திடுங்கன்னா... போத்தலை கொடுங்கன்னா... (போத்தலைப் பறித்தெடுத்து சிறிது மது குடித்துவிட்டு சம்பா சிரிக்கிறாள்) குடிங்க ... நீங்களும் குடிங்க... (வாயில் பருக்குகிறாள்) கொஞ்சம்...

**சக்காராம்** : சமர்த்து. (செல்லமாக அவள் கன்னத்தைக் கிள்ளுகிறாள்)

**சம்பா:** இன்னும் கொஞ்சம்.... (*சக்காராம் குடிக்கிறான்*) அச்சா... (*சம்பா போதையில் நிலத்தில் சாய்கிறாள்*)

**சக்காராம்:** (*போதையுடன்*) வதனமே சந்திர பிம்பமோ... மலர்ந்த சரோசமோ... வதனமே... சம்பா...

(*அவள் அருகில் அமர்ந்து சக்காராமும் அவரோடு சாய்கிறான். இருவரும் தங்களை மறந்து உறங்குகின்றனர். சிறிது நேரத்தில் கதவு தட்டப்படுகிறது*)

**சக்காராம்:** யாரப்பா... (*தூக்கக் கலக்கத்தோடு*) இந்த நேரத்தில கதவை தட்டுறது... சம்பா... சம்பா.. கதவை தட்டுறது யாருன்னு பாரு... (*சம்பாவைத் தட்டி எழுப்புகிறான்*)

**சம்பா:** என்னை தொந்தரவு பண்ணாதீங்க...

(*மீண்டும் கதவு தட்டப்படுகிறது. சக்காராம் எழுந்து சுற்றும் முற்றும் பார்க்கிறான் ஒளி பரவுகிறது. சம்பா உறக்கத்தில் இருக்கிறாள்*)

**சக்காராம்:** இப்படி புரண்டுகிட்டு கெடக்கிறவ எங்கே எழும்புறது..?

**சக்காராம்:** யாரது? தடிப்பசங்களுக்கு நவராத்திரியும் விளங்காது, சிவ ராத்திரியும் விளங்காது. (*கதவை திறக்கிறான்*) யாரது இந்த நடு ராத்திரியில

(*கண்ணை கசக்கிக்கொண்டு பார்க்கிறான். வெளிப்புறத்தில் இருந்து லக்ஷ்மி மெதுவாக வருகிறாள்.* ) ஏய் நீயா?... இங்கே எங்கே வந்தே...?

**லக்ஷ்மி:** எனக்கு போக இடமில்லேங்க... அதனாலதான் இங்கேயே வந்திட்டேன். என் சித்தப்பா வீட்டைவிட்டே துரத்திட்டான். நான் எங்கே போவேன். அதான் இங்கேயே வந்துட்டேன்... இனிமே எங்கேயும் போகமாட்டேன். இங்க இருந்தே செத்துப்போயிடுறேன்.

**சக்காராம்:** செத்து போறதே போற... எங்கேயாவது போய் செத்து தொலை... (*அவளை வெளியே தள்ளி கதவை மூடுகிறான்*)

(காட்சி முடிவு)

## அங்கம்: மூன்று

### காட்சி : 11

*(பொழுது விடிகிறது. சக்காராம் வீட்டில் இல்லை. சம்பா துடைப்பத்துடன் உள்ளிருந்து வருகிறாள். முன் கதவை திறந்துவிட்டு வீட்டை கூட்டுகிறாள். லக்ஷ்மி வெளியிலிருந்து வந்து மூட்டையை வாசலில் வைத்துவிட்டு ஓரமாக நிற்கிறாள்)*

**சம்பா:** *(லக்ஷ்மியை பார்த்து)* ரொம்ப நல்லா இருக்கே. ஏண்டி வாசல்ல நிண்டு பிச்சை கேட்டது போக இப்போ வீட்டுக்குள்ளே வந்து பிச்சை கேக்க ஆரம்பிச்சிட்டீங்களா?.. போ....போ அடுத்த வீட்டை பாரு. போடின்னா... *(லக்ஷ்மி மௌனமாக நிற்கிறாள்)* சொன்னது கேக்கலையா? விலைவாசி இருக்கிற ஏத்தத்துக்கு பிச்சை வேற போடமுடியுமாக்கும். ஆமா உன்ன இதுக்கு முன்னாடி இங்கே பார்த்ததே இல்லையே. உடம்பு நல்லாதானே இருக்கு. ஏன் ராப்பட்டினி பகல் பட்டினி கிடந்து பிச்சை எடுத்துக்கிட்டு அலையிறே... போய் எங்கேயாவது வேலை வெட்டி இருந்தா செய்யப்பாரு... போ.

**லக்ஷ்மி:** நான் ஒன்னும் பிச்சைக்காரி இல்ல...

**சம்பா:** *(நாற்காலியில் அமர்ந்து)* பின்னே...?

**லக்ஷ்மி:** ஆமா! நீ கூட்டுற தொடப்பத்தால இந்த வீட்டை எத்தனையோ நாள் கூட்டியிருக்கேன்..

**சம்பா:** அப்படின்னா... நீ...?

**லக்ஷ்மி:** லக்ஷ்மி... அவர் சொல்லியிருப்பாரே... என்னைபத்தி... நான் இங்கே சரியா ஒரு வருஷமும் இருபத்து ஒருநாளும் இருந்தேன்.

**சம்பா:** அது சரி..இப்ப ஏன் இங்கே வந்தே...?

**லக்ஷ்மி:** எங்க சித்தப்பா இல்ல... எங்கப்பாவோட தம்பி. அவரு வீட்டுல தங்கலாம்னுதான் போனேன். அவரு பதினாறு வயசுல புதுசா ஒன்ன கட்டிக்கிட்டு குடித்தனம் நடத்துறாரு. நான் இருக்கிறது இடைஞ்சல்னு என்னை போக சொல்லிட்டாரு எனக்கு போறதுக்கு வேற இடமே கெடையாது.

**சம்பா:** ஏன்... உன் புருஷன் மண்டைய போட்டுட்டானா...?

**லக்ஷ்மி:** ராம்.. ராம். இன்னும் என் கழுத்துக்கும் தாலிக்கும் உறவு விட்டுப்போயிடல்ல.

**சம்பா:** தாலியா...?

(நாற்காலியில் இருந்து எழுந்து அவள் முன்னால் வந்து)

சேவைக்காக வாங்கிக்கிற விபச்சார லைஸன்ஸ் அது. போகட்டும் (விட்டை கூட்டிக்கொண்டே) இப்போ என்ன பண்ண போறே? அவர் இப்போதான் பிரஸ்ஸுக்கு போயிருக்காரு...

**லக்ஷ்மி:** அவர் போறப்போ நான் பாத்துக்கிட்டுதான் இருந்தேன்..

**சம்பா:** அப்போ காலங்காத்தாலேயே நீ வந்துட்டியா?

**லக்ஷ்மி:** நேத்து ராத்திரியே வந்துட்டேன்....

**சம்பா:** பிளாட்பாரத்துலதான் பொழுது விடிஞ்சிதா?

**லக்ஷ்மி:** இல்லே... வெளிவாசலோட இருக்கிற திண்ணையில கைகால முடக்கிக்கிட்டேன்.

**சம்பா:** கதவை தட்டியிருக்கலாமே?

**லக்ஷ்மி:** உதவிக்கு வந்த இடத்துல உபத்திரத்தை கொடுக்கலாமா?

**சம்பா:** அப்படி கொடுத்தாலும் 'வேஸ்ட்'டுதான்... ஏன்னா நேத்து நான் இந்த உலகத்துலேயே இல்ல . அவ்வளவு தண்ணி...

**லக்ஷ்மி:** என்ன நீங்களும் குடிப்பீங்களா ?

**சம்பா:** குடிப்பீங்களாவா..? கொஞ்சநாளா மிதக்குறேன்

**லக்ஷ்மி:** நேத்து வெள்ளி கிழமையாச்சே...

**சம்பா:** உனக்கு கடவுள் பக்தி நிறைய இருக்கு போலிருக்கு...

**லக்ஷ்மி:** எனக்கு சின்ன வயசுல இருந்தே பக்திதான். கடவுள் பக்தி இருக்கிறதாலதான் கஷ்டம் ஏற்படுறபோது கூட என்னால தாங்க முடியுது.

**சம்பா:** இப்போ நீ என்ன பண்ண போறே...?

**லக்ஷ்மி:** அதுதான் தெரியல.

**சம்பா:** சத்தமில்லாம இங்கேயே தங்கிடு..

**லக்ஷ்மி:** அப்படித்தான் நினைக்கிறேன்...

**சம்பா:** நிக்கவச்சே பேசிக்கிட்டிருக்கேன். வா உள்ளே. காப்பிப்போட்டு தார்ரேன்...

**லக்ஷ்மி:** உங்களுக்கு ஏன் வீண் சிரமம்?

**சம்பா:** எனக்கும் காப்பி குடிக்கணும்

**லக்ஷ்மி:** அவரு உங்களோட பிரியமா இருக்கிறாரா?

*(சமயலறைப் பக்கம் போய்க்கொண்டே...)*

**சம்பா:** யாரு... சக்காராமா? அந்த மனுசனால ராத்திரி பூரா ஒரே தொல்ல... காலையில எந்திரிச்சா தலை சுத்துது. உடபெல்லாம் புண்ணா வலிக்குது...

**லக்ஷ்மி:** கோவிலுக்கு போறாரா?...

**சம்பா:** வீட்டையே கோவிலாக்கிட்டாரு....

**லக்ஷ்மி:** புரியல்ல...?

**சம்பா:** அவருடைய பக்தி... பஜனை தேவாரம் , திருவாசகம் எல்லாமே இதுக்குள்ளதான்.*(லக்ஷ்மி சம்பாவின் அருகில் வருகிறாள்)*

**லக்ஷ்மி:** நான் போறப்போ ரெண்டு சாமி படம் வச்சிட்டு போயிருந்தேன் இப்பவும் அவர் பூசை செய்யிறாரா?

**சம்பா:** அவருக்கு தெரிஞ்சது ஒரே ஒரு பூசைதான். அது தெனமும் தவறாம நடக்குது... இந்தா...

*(சம்பா காப்பி கொடுக்கிறாள். லக்ஷ்மி அதை வாங்கி கீழே வைக்கிறாள்.)*

**லக்ஷ்மி:** நான் இருக்கிறப்போ தினமும் குளிச்சிட்டு பூசை பண்ணுவாரு... ஆமா... நீங்களாவது சாமி கும்பிடுவீங்களா..?

**சம்பா:** நான் ஏன் கும்பிடனும் ? சாமிக்கும் சம்பாவுக்கும் சம்பந்தமே இல்ல...

**லக்ஷ்மி:** சாமி இல்லேன்னா ... பூமியே இல்ல...

**சம்பா:** அப்போ.. அந்த கடவுளை நான் கும்பிடவே தேவையில்ல. நீ காப்பி சாப்பிடு...

**லக்ஷ்மி:** *(காப்பியை கையில் எடுக்கிறாள். அதற்குள் ஒரு எறும்பு விழுந்து கிடக்கிறது. எறும்பைப் பார்த்து)* ஆ.. வந்துட்டியா? ஐயோ உன்ன யாரு இதுக்குள்ள வரச்சொன்னது?... ம்... ஏன் இதுக்குள்ள குதிச்சே. வாய் மூக்கெல்லாம் காப்பி. ஏன் இப்படி நெளியிறே... மூச்சடைக்குதா? வா தூக்கிவிடுறேன். *(சேலைத்தலைப்பால் தூக்குகிறாள்)* இனி இந்த மாதிரி காப்பிக்குள்ளே விழாதே. ஊம்... இப்போ ஓடித்தப்பு... *(மெதுவா கீழே விடுகிறாள். சம்பா காப்பி சாப்பிடுவதை நிறுத்திவிட்டு லக்ஷ்மியை அதிசயமாக பார்க்கிறாள்)*

**லக்ஷ்மி:** நான் இங்கே இருக்கிறப்போ ஒரு பெரிய கறுப்பு எறும்பு இருந்தது. அவன் பொல்லாதபய. ராஜான்னுதான் கூப்புடுவேன். ஆளும் ராஜா மாதிரிதான் நடப்பான். அதோட ஒரு காகமும் இருந்தது. ஒவ்வொரு நாளும் அது என்னை கூப்பிடும்.

*(ஜன்னல் பக்கம் பார்க்கிறாள். ஒரு காகம் கத்தும் சத்தம் கேட்கிறது.)*

அதோ அதுதான் கத்துது. அந்த காகம்தான் போலிருக்கு.

*(எழுந்து ஜன்னல் பக்கம் போகிறாள். ஆனால் களைப்பினால் சுவரோடு சாய்ந்துவிடுகிறாள். சம்பா எழுந்து அவளை விழாமல் தாங்கிப் பிடித்தப்படி...)*

**சம்பா:** இந்தா... நீ களைச்சு போயிருக்கே. முதல்ல காப்பியை குடி. காகம் எங்கேயும் போயிடாது *(அவளை உட்கார வைக்கிறாள்)* இந்தா இந்த 'பன்'ன (Bun) காப்பியோட சாப்பிடு... ஆமா எத்தனை நாளைக்கு இங்கே தங்க போறே...

**லக்ஷ்மி:** எல்லா வீட்டு கதவுகளும் அடைப்பட்டுபோச்சு. இதுவும் இல் லேன்னா உலகமே எனக்கு இல்ல.

**சம்பா:** *(உட்காருகிறாள்)* உன் புருஷன் ஏன் உன்னை கைவிட்டான்...?

**லக்ஷ்மி:** நான் மலடியாம்...

**சம்பா:** அவன்தான் மலடானா இருக்கணும்.

**லக்ஷ்மி:** சீ... அப்படி சொல்ல கூடாது... ஆமா நீங்க..?

**சம்பா:** என் புருஷன் இருக்கானே அவன் ஒரு உதவாக்கரை. ஒரு கடைஞ்செடுத்த மலடு... கையாலாகாதவன். அவன் என்னை துறத்தல்ல. நான் தான் அவனை விட்டுட்டு வந்துட்டேன். புருஷன்னு பேருக்கு ஒருத்தன் இருந்து என்ன பிரயோசனம்...?

**லக்ஷ்மி:** அவர் இப்போ எங்கே?..

**சம்பா:** யாருக்கு தெரியும் சனியன் இருக்கானோ செத்தானோ...

**லக்ஷ்மி:** ராம்... ராம்... *(காதைப் பொத்திக் கொள்கிறாள்)*

**சம்பா:** ஏன் காதை பொத்தி கொள்றே?...

**லக்ஷ்மி:** கட்டின புருஷன அப்புடி சொல்லலாமா? என்னவாயிருந்தாலும்... ஐயர் முன்னாலே அக்கினி சாட்சியா கைபிடிச்ச புருஷன்...

**சம்பா:** அதனால ஐயரும் அக்கினியுமா வந்து எங்களுக்கு சோறு போடப் போறாங்க?...

**லக்ஷ்மி:** அது நம்ம தலைவிதி....

**சம்பா:** அது விதியா இருந்தா இதுவும் விதிதான். அந்த கட்டையில் போறவனோட வாழ்க்கை நடத்த முடியுமா? சவத்தை கட்டிப் புடிச்சிக்கிட்டு எத்தனை நாளைக்கு தான் அழுறது. ஆளை விட்டாப் போதும்னு வீட்டைவிட்டு ஓடியாந்துட்டேன் அப்புறம்தான் உன் னோட சக்காராம் இங்கே கூட்டியாந்தாரு...

**லக்ஷ்மி:** என்னோடன்னா சொல்லுறீங்க.. அவர் இப்போ உங்க சொந்தம்...

**சம்பா:** சொந்தமாவது பந்தமாவது. தண்ணி போடுறவரைக்கும்தான் எல்லா சொந்தமும். அப்புறம் நான் வேறு அவர் வேறு. என்னதான் இருந்தாலும் பொல்லாத மனுஷன். *(பெருமூச்சு)* என்ன செய்யிறது? இதை விட்டுட்டு தெருவில நின்னா ஒரு நாளைக்கு பத்து மிருகத்துக்கு பதில் சொல்லணும். அதைவிட இங்கே ஒன்னோட மாரடிக்கிறது பரவாயில்லை.

**லக்ஷ்மி:** *(சிறிது தைரியமாக)* நான் இங்கே தங்கினா உங்களுக்கு தொந்தரவு கிடையாதா?

**சம்பா:** தொந்தரவு ஒன்னுமில்ல. ஆனா.. என்னை தொரத்த பார்த் தேன்னா அப்புறம் நான் பொல்லதவளா இருப்பேன்... இப்பவே சொல்லிவைக்கிறேன்

**லக்ஷ்மி:** ஐய்யய்யோ... நான் அப்படி மனசால கூட நினைக்க மாட்டேன். எனக்கு இங்கே வேற ஒன்னும் வேண்டாம். தங்க மட்டும் இடம் கொடுத்தா போதும். உங்களுக்கு தேவையான உதவிகளை செய்து கிட்டு காலத்தை கடத்திடுவேன்.

**சம்பா:** அப்படின்னா நீ இங்கேயே தங்கியிருக்லாம். நீ வீட்டை பார்த் துக்கோ. நான் வீட்டுக்காரரை பார்த்துக்கிறேன். இரண்டையும் சமாளிக்க என்னால முடியல்ல...

*(சக்காரம் வருகிறான்)*

**சக்காரம்:** சக்கரை வியாதிக்காரப் பசங்க... வேலை வேலைன்னு மனுஷன கொல்லுறாங்க. சம்பளத்தை மட்டும் உயர்த்த மாட்டாங்க . தொழிலாளி என்ன அடிமை சாசனமா எழுதிக் கொடுத்திருக்கான். *(லக்ஷ்மியை திடீரென பார்த்துவிட்டு ஒரு விநாடி திகைக்கிறான்)* நீயா... ஏன் திரும்பி வந்தே? உன்னை யார் உள்ளே விட்டது?

**லக்ஷ்மி:** நான் வேறே எங்கே போவேன்?

**சக்காரம்:** சொல்லித்தானே அனுப்பினேன் இந்த வீட்டைவிட்டு போன எவளும் திரும்பி வந்ததே இல்ல. அது உனக்கு தெரியும்தானே...? அப்புறம் ஏன் திரும்பி வந்தே...? போனா போனது தான்...

**லக்ஷ்மி:** எனக்கு எங்கே போறதுன்னே தெரியல்ல...

**சக்காரம்:** எங்க போறதுன்னு தெரியல்லேனா செத்துபோக வேண்டியது தானே...

**லக்ஷ்மி:** நீங்கதாங்க என் தெய்வம்...

**சக்காரம்:** மண்ணாங்கட்டி! இந்த மாதிரி பேச்சுத்தான் எனக்கு பிடிக்காது. இன்னொருதரம் அப்படி சொன்னே கழுத்தை துண்டாக்கிடுவேன். தெய்வமாம்... தெய்வம். தேவைக்காக உன்ன கூட்டியாந்தேன்... தேவை முடிஞ்சிது. தொலைஞ்சு போயிட வேண்டியது தானே... இந்த நிமிஷமே இந்த இடத்தைவிட்டு வெளியே போ...

*(சம்பா தலையில் சடை பின்னிப் போட்டுக்கொண்டிருக்கிறாள். சக்காராம் காலில் விழுகிறாள் லக்ஷ்மி)*

**லக்ஷ்மி:** என்னை போகச் சொல்லாதீங்க. தயவுசெய்து என்னை வெளியே அனுப்பிடாதீங்க. நான் உங்ககிட்ட ஒண்ணுமே கேக்கலை... உங்க மடியிலதான் சாகணும். அவ்வளவுதான்...

**சக்காரம்:** *(காலால் அவளை தள்ளிவிட்டு)* இந்த மாதிரி பேசாதேன்னு... எத்தனை தரம் சொல்லியிருக்கிறேன். இந்த நிமிஷமே போ வெளியே. மடியில் சாகப்போறாளாம்... போய் வீதியில சாவு... இல்லேன்னா உன் மண்டைய இங்க வைச்சி பிளந்திடுவேன் *(சக்காராம் காலால் தள்ளுகிறான். அவள் காலை பிடித்துக்கொள்கிறாள். விடுவிக்க முடியாமல் திட்டிக்கொண்டு தலையிலும் முதுகிலும் அறைகிறான். சக்காராம் பெல்ட்டால் அடிக்க கையை ஓங்க சம்பா பார்த்துக்கொண்டு நிற்கிறாள். சக்காராம் லக்ஷ்மியை அடிக்கிறான்.)*

**சம்பா:** சரி போதும் நிறுத்துங்க. அவ செத்து போயிட போறா...

**சக்காரம்:** செத்தா என்ன சாகட்டும்.

**சம்பா:** அவளை கொண்ணுட்டா அப்புறம் என்கதி என்ன ஆகிறது...?

**சக்காரம்:** நீ உன் புருஷனுக்கிட்ட போகவேண்டியதுதான்.

**சம்பா:** புருஷன்கிட்ட போற பொம்பளையா இருந்தா இங்கே ஏன் வர்றா?

**சக்காரம்:** (ஆத்திரத்தோடு லக்ஷ்மியை அடிக்க போகிறான்) நாயே! போ வெளியே.

**சம்பா:** (நடுவில் போய் நின்று தடுக்கிறாள்) நிறுத்துங்க. என்னை அடிங்க (லக்ஷ்மியை தூக்கிவிட்டு) எங்கே அடிப்பட்டுது வயித்துலேயா...? சரி ... உள்ளே வா...

**சக்காரம்:** உம்... வெளியே

**சம்பா:** நீ சும்மா வா... என்ன பாத்துக்கிட்டு நிக்கிறே?

(அடுக்களைக்குள் கூட்டிக்கொண்டு போகிறாள். சக்காரம் ஆத்திரத்தோடு)

**சக்காரம்:** சம்பா சொல்லுறது கேக்கலையா? அவளை வெளியே புடிச்சி தள்ளு..

**சம்பா:** (லக்ஷ்மியிடம் இப்படி உட்காரு... நல்லா அடிப்பட்டுடுச்சு) இந்தாங்க தண்ணி கை கால் கழுவுங்க.

**சக்காரம்:** முதல்ல அவ வெளியே போகணும். அவள அனுப்பு...

**சம்பா:** அவள் அனுப்ப நான் யாரு நானா கூட்டியாந்தேன்... இது உங்க வீடு. நீங்களே அனுப்புங்க ...

**சக்காரம்:** அப்ப ஏன் நீ குறுக்கால வந்து நின்னே?

**சம்பா:** நான் குறுக்கே வராட்டி நீங்க அவள கொண்ணுட்டு தூக்கு மரத்துக்கு போவீங்க. நான் ஒருவேலை சாப்பாட்டுக்கு தெருவுல திரியணும்.

**சக்காரம்:** இங்க அவளுக்கு ஒரு வேலையும் இல்ல.

**சம்பா:** எனக்கு உதவியா இருப்பா. கொஞ்சம் சோறும் பழைய சேலையும் கொடுத்தா போதும் ...

**சக்காரம்:** எனக்கு ரெண்டு வாய்க்கு சோறு போட முடியாது...

**சம்பா:** அப்போ நான் போறேன்..

**சக்காரம்:** நீ வேணாம். அவளை போகச்சொல்லு. என் மடியில சாகப் போறாளாம் (மீண்டும் அவனுக்கு ஆத்திரம் வருகிறது) ஏய் லக்ஷ்மி வீட்டைவிட்டு வெளியே போ... இங்க இருக்கிறதால உனக்கு எந்த வித பிரயோசனமும் இல்லை. (லக்ஷ்மி பயந்து போய் நிற்கிறாள்)

**சம்பா:** நீங்க இப்போ கைகால கழுவப் போறீங்களா இல்லாட்டி நான் எல்லாத்தையும் விட்டு வீசிட்டு போயிடவா?

(சக்காரம் அவளோடு முகம் கழுவ போகிறான். நடுங்கிக்கொண்டிருந்த லக்ஷ்மி காகம் கத்தவே ஜன்னலால் எட்டி பார்க்கிறாள்.)

*(சக்காராம் முகம் கழுவிவிட்டு முன் அறைக்குள் வருகிறான்)*

**லக்ஷ்மி:** *(வெளியே எட்டிப்பார்த்தப்படி)* மறுபடியும் கத்தக் காணோமே....

**சம்பா:** யார்...? காகமா?

**லக்ஷ்மி:** *(கேலாதவளாக)* இப்படித்தான் ஒவ்வொருநாளும் மத்தியானத்துல கூப்பிடும். அதே காகமாத்தான் இருக்கும்.

*(சம்பா தேநீரை சக்காராமுக்கு எடுத்துச்செல்கிறாள். சக்காராம் பாயில் உட்கார்ந்து இருக்கிறான். தேநீரை அவள் அவனது வாயருகே வைக்கிறாள். சக்காராம் குடிக்கிறான்.)*

**சக்காரம்:** சம்பா! அவள் இங்கே தங்கக்கூடாது. நாளைக்கு காலையில முதல்வேலையா அவளை அனுப்பிடணும். தெரிஞ்சிதா? நான் அவ புருஷனில்ல *(சிறிது நொண்டிக்கொண்டு லக்ஷ்மி உள்ளே அமைதியாக வேலை செய்கிறாள்.)*

**சம்பா:** கொஞ்ச நாளைக்கு இங்க இருக்கட்டும். அவ இப்போ எங்கே போவா?....

**சக்காரம்:** எங்கேயாவது போய்த் தொலையட்டும்... அவளை கட்டிக்கிட்டு அழனுமுன்னு என் தலைவிதியா? நாளைக்கு அவ இங்கே இருக்க கூடாது.

*(தேநீர் கோப்பையை மேசையில் ஆத்திரத்துடன் வைக்கிறான். சம்பா அதை எடுத்துக்கொண்டு உள்ளே போகிறாள்)*

**லக்ஷ்மி:** என்ன நடந்தது?

**சம்பா:** நீ உன் வேலையை பார்த்துகிட்டு இரு. அநாவசியமாக வாயை தொறக்கக்கூடாது..

*(சக்காராம் மேலும் கீழுமாக உலாவுகிறான். ராக்கையிலிருந்த போத்தலை எடுத்து ஒரு வாய் குடிக்கிறான். பிறகு மிருதங்கத்தை ஏதோ நினைவில் எடுத்து சூாசி தட்டி சுதி கூட்டி வாசிக்கிறான். சமயலறையில் இரு பெண்களும் வேலையில் ஈடுப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். லக்ஷ்மி மிருதங்க சத்தத்தை கேட்டு மகிழ்ச்சியடைகிறாள். சக்காராம் தன்னை மறந்து வாசிக்கிறான். தாவுத் வந்து நிற்கிறான்)*

**தாவுத்:** சக்காராம் சஹாப்..

**சக்காரம்:** *(தாவுதை கவனித்துவிட்டு)* என்ன... திடீர்னு இந்த பக்கம்?

**தாவுத்:** ரொம்ப நாளைக்கு அப்புறமா மிருதங்க சத்தம் கேட்டுது. பழைய

ஞாபகம் பொசுக்குன்னு வந்தது... லக்ஷ்மி இருக்கிறபோது கேட்டது.

*(சக்காராம் மிருதங்கத்தைப் பட்டென்று நிறுத்திவிட்டு பார்க்கிறான்)*

**லக்ஷ்மி:** *(எட்டிப்பார்த்து)* தாவூதா?

**தாவுத்:** யாரு... லக்ஷ்மியா என்னடா ஆச்சரியமா இருக்கு. ரெண்டு பேருமா... இல்லே சம்பா போயிட்டாளா?

**சக்காரம்:** அதைபத்தி நீ ஒன்னும் கேக்க வேணாம்...

**தாவுத்:** காலம் மாறிப்போச்சு. அத்திபழ மரத்துல ஆப்பில் பழம் காய்க்கிது. *(ஆத்திரத்தை மிருதங்கத்தில் காட்டுகிறான்)*

**சம்பா:** ஏய் நீ உள்ளே வா... உனக்கு அங்கே என்ன வேலை *(லக்ஷ்மி உள்ளே போகிறாள்)*

**தாவுத்:** ஒரு கொடியில் இரு மலர்கள். கன்னிராசி சும்மா டால் அடிக்கிது. *(தாவூத் போகிறான்)*

*(நடுநிசியாகிறது. சக்காராம் மிருதங்கத்தை வாசித்துக் கொண்டு இருக்கிறான். சில விநாடிகளுக்குப் பின் மிருதங்கத்தை நிறுத்திவிட்டு யோசனையில் ஆழ்கிறான். அப்போது உள்ளிருந்து பஜனை ஒலிக்கிறது.)*

**லக்ஷ்மி:** சீதாராம்... சீதாராம்... சீத்தாராம்... ஜெய சீதாராம்... *(கையிரண்டையும் தட்டிக்கொண்டு லக்ஷ்மி பாடுகிறாள். அவளது நிழல் பெரிதாகத் தெரிகிறது.)*

**சக்காரம்:** ஏய்! அங்கே என்ன நடக்குது? நிறுத்து உன் பஜனையை. ராத்திரியிலேயும் மனுசன் நிம்மதியா இருக்க முடியாது. *(சத்தம் நிற்கவில்லை)* ஏய் லக்ஷ்மி சொல்லுறது காதுல விழலையா? ஏதாவது சத்தம் கேட்டுது வாயால ரத்தம் கொட்டவைப்பேன். என்ன நினைச்சிக்கிட்டே... *(உள்ளே சிறிது அமைதி)* கீழ்சாதி நாய்... *(லக்ஷ்மி மெதுவாக பாடுவது கேட்கிறது)*

**சக்காரம்:** விளக்க அணைச்சிட்டு துாங்கப்போறியா... இல்ல? என்கையால அடிப்பட்டு சாகப்போறியா. மூதேவி! நிப்பாட்டுறியா இல்லையா.... *(சம்பா குடிபோதையில் உள்ளிருந்து உளறுகிறாள். லக்ஷ்மியும் உறங்க ஆரம்பிக்கிறாள். ஒளி மங்குகிறது)*

**(காட்சி முடிவு)**

## காட்சி : 12

*(ஒரு பிற்பகல் வேளை. வீடு பூட்டியிருக்கிறது. ஒரு காகம் கத்துகிறது. திடீரென லக்ஷ்மி எதையோ கண்டு மிரண்டவள்போல் கதவைத் திறந்துகொண்டு ஓடிவருகிறாள். உள்ளே வந்ததும் வெளிக்கதவை சாத்துகிறாள். மிகவும் பயங்கரமான அனுபவத்தைப் பெற்றவளாக சமயலறைக்குள் போய் சாமி படத்துக்கு முன்னால் நிற்கிறாள். அவளுக்கு மேல்முச்சு கீழ்முச்சு வாங்குகிறது. முகத்தில் வியர்வை கொட்டுகிறது. கலவரம் நிறைந்தவளாகக் காணப்படுகிறாள்.)*

**லக்ஷ்மி:** கடவுளே! என்னான்னு சொல்லுவேன். உனக்குத் தெரியாததா? நான் நம்பவே இல்ல. ச்சீ.. இப்படியொரு பொம்பளையா? எனக்கு ஒன்னுமே புரியல்ல. ராம்...ராம்.. *(கன்னத்தில் போட்டுக்கொள்கிறாள்)* பாவம்... இது மகா பாவம். சம்பா! என்ன இருந்தாலும் நீ இப்படி செய்ய கூடாது. வெட்கங்கெட்ட பொழைப்பு. ச்சீ.. நான் அவ பின்னால போயிருக்கவே கூடாது.ஆனா... எனக்கு போகாம இருக்கவும் முடியல்ல. ஒவ்வொரு நாளும் அவரில்லாத நேரத்துல இவ ஏன் வெளிய போகணும்? அதை தெரிஞ்சிக்கிறதுக்காகத்தான் அவ பின்னால போனேன். அதுவும் அவருக்காகத்தான் போனேன். நான் கட்டின புருஷனை விட இவரைத்தான் புருஷனா நம்பினேன். இவர் என்னை வெளிய தொறத்துன பிறகும் நான் அவருக்காக வணங்கலையா? *(மஞ்சள் கயிறை எடுத்து)* கடவுளே! இங்கே பாரு. அவர் பேரை சொல்லி இதை கட்டிக்கிட்டேன். நான் அவருக்கு சொந்தமானவ. என்னை அவரு ஒதைக்கிறதா இருந்தா ஒதைக்கட்டும். என் உயிர் போறதா இருந்தாலும் அவர் மடியில தான் போகணும். நான் தீர்க்க சுமங்கலியாதான் சாகணும். அதுக்காகத்தான் போனேன். போய் இந்த கண்றாவியத்தானா பார்க்கணும். ஐயோ... கடவுளே! இப்படியும் ஒரு பொம்பளை ஒரு ஆம்பளைய ஏமாத்தலாமா?

*(வெளியே கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. அவசரமாக நிலத்தில் விழ்ந்து*

*வணங்கிவிட்டு ஓடிப்போய் கதவை திறக்கிறாள். சம்பாவின் கணவன் பரிதாபமாக நின்று கொண்டிருக்கிறான்)*

**ராஜேஸ்:** சம்பா! ஏய் சம்பா. இதோ நான் வந்துட்டேன். உன்னை விட்டுவிட்டு என்னால வாழமுடியாது. நீ என்னை அடி உதை. என்ன வேணுமானாலும் செய். சம்பா... நான் சாகுறதுக்கும் தயார். அதுவும் உன் கையாலதான் சாகணும். சம்பா... (*லக்ஷ்மியை பார்த்துவிட்டு*) ஏய் யார் நீ? நீ சம்பா இல்ல... நீ வேற யாரோ. எங்கே என் சம்பா? எங்கே போயிட்டா? (*தடுமாறி விழப்போகிறான்*)

**லக்ஷ்மி:** ஐயோ பாவம்! நீங்க யாரு...? சம்பாவுக்கு என்ன வேணும்?

**ராஜேஸ்:** நான், நான்தான். சம்பாவுடைய புருஷன். உண்மையான புருஷன். தாலி கட்டினவனே நான்தான். எங்கே என் சம்பா? அவளைப் பார்க்கணும். அவகிட்ட அடி வாங்கணும். அவ கையால சாகணும் சம்பா.. என்னை அடி. என்ன கொல்லு சம்பா... கொண்ணுடு.

**லக்ஷ்மி:** அவ இப்போ வீட்டுல. இல்ல நீங்க எங்கேயிருந்து வாரீங்க?...

**ராஜேஸ்:** சந்தியில... சகதியில... சவக்காட்டுல... எங்கேயும் இருப்பேன். எங்கேயாவது இருப்பேன். எந்த மடமும் இல்லையின்னா சந்தை மடம்...

**லக்ஷ்மி:** ச்சூ... ச்சூ... ச்சூ... இங்க பாருங்க... ஆம்பளைங்க அழலாமா? அழக்கூடாது. ஏன் அழுறீங்க? ஐயோ அழாதீங்க. கடவுளே! காய்ச்சல் மாதிரி இருக்கே. (*அவனை தொட்டு பார்த்துவிட்டு*) இல்லே அப்படின்னா பசியாத்தான் இருக்கும்.

(*உள்ளே போய் சாப்பாடு கொண்டு வருகிறாள் அதற்கு இடையில் ராஜேஸ் போத்தலை எடுத்து இரண்டு மடக்கு குடிக்கிறான்*)

**லக்ஷ்மி:** (*வந்துகொண்டே...*) இந்தாங்க சாப்பிடுங்க.

**ராஜேஸ்:** (*மௌனம்*)

**லக்ஷ்மி:** வாயெல்லாம் அழுக்காயிருக்கு... (*தண்ணீரைக் கொடுத்து*) இந்தாங்க கழுவுங்க (*லக்ஷ்மி தன் சேலை தலைப்பால் பயத்தோடும் தயக்கத்தோடும் துடைக்கிறாள்*) பாவம்... உடம்புல சத்தியே இல்ல. சாப்பிடுங்க. என்ன சாப்பிடக்கூட சீவன் இல்லையா? ஏதாவது உள்ளே போனாத்தான் உடம்பு தெம்பா இருக்கும்...

**ராஜேஸ்:** (*விக்கலுடன்*) தண்ணி...

*(லக்ஷ்மி உள்ளே போகிறாள். ராஜேஸ் மீண்டும் மது அருந்துகிறான்)*

**லக்ஷ்மி:** இந்தாங்க...*(தண்ணீரை குடிக்க கொடுக்கிறாள்)* ஏன் ஒடம்பை இப்படி கெடுத்துக்குறீங்க. ஏன் ஒடம்பெல்லாம் தடிச்சி போயிருக்கு. இந்த வீக்கம் நல்லதில்ல... இதென்ன காயம்...?

**ராஜேஸ்:** அவ...அவ...

**லக்ஷ்மி:** சம்பாவா... அவ என்ன ராட்சசியா? நீங்க சும்மாவா இருந்தீங்க? நீங்க ஒரு ஆம்பள இல்ல.

**ராஜேஸ்:** இல்ல... நான் தான் அடின்னு சொன்னேன். எனக்கு வாழ்க்கையில என்ன இருக்கு? உத்தியோகம் போச்சு. வீடுபோச்சு. பொண்டாட் டியும் போயிட்டா. எனக்குன்னு இந்த ஒலகத்துல ஒண்ணுமே கெடையாது. இடிவிழுந்து சாகிறதவிட அவ கையால அடிவிழுந்து செத்தாத்தான் எனக்கு நிம்மதி.

**லக்ஷ்மி:** சரி... சரி. சத்தம் போடாதீங்க. யாராவது கேட்டுக்கிட்டு இருக்க போறாங்க. சம்பா வர்ற நேரமாச்சு. அவ ஒங்கள கண்டாள்ன்னா பேயா மாறிடுவா. போங்க... போயி அவ இல்லாத நேரமா வாங்க. நான் ஒங்களுக்கு சாப்பாடு போடுறேன். அவ வர்றதுக்கு முன்னாடி போயிடுங்க. *(அவன் கையை பிடித்துக்கொண்டு போய் வெளியே விடுகிறாள்.)* கடவுளே! இதெல்லாத்தையும் பாத்துக்கிட்டா இருக்கே? கட்டுன புருஷன விட்டுட்டு இன்னொருத்தனோட போறது. அவனு க்கும் தெரியாம வெறொருத்தனோட உறவுவைக்கிறது ச்சீ.. இந்த அநியாயத்துக்கு நீதான் முடிவு கட்டணும். நீ கல்லாகிட்டதால உன் மனசுமா கல்லாயிட்டுது. கல்லுக்குத்தான் உயிர் இல்லேன்னா உன் சொல்லுக்குமா உயிர் இல்ல...

*(சம்பா பரபரப்போடு உள்ளே வருகிறாள்)*

**சம்பா:** லக்ஷ்மி... லக்ஷ்மி.. கொஞ்சம் முன்னாடி யார் வந்தது?

**லக்ஷ்மி:** தெரியாது...

**சம்பா:** தெரியாது...? பொய்சொல்லி என்னை ஏமாத்த பார்க்காதே..

**லக்ஷ்மி:** இங்கே ஒருத்தரும் வரல்ல

**சம்பா:** என்கிட்டேயே பொய் சொல்றியா? *(கோபமாக)* என் புருஷன் வந்தானா இல்லையா?

**லக்ஷ்மி:** ஆமா..

**சம்பா:** என்ன ஆமா?

**லக்ஷ்மி:** வந்தாரு... உன்ன தேடினாரு.

**சம்பா:** பின்னே ஏன் என்னை பார்க்காம போகணும்

**லக்ஷ்மி:** யாருக்குத் தெரியும்?

**சம்பா:** உனக்கு ஒண்ணுமே தெரியாது... நீதானே அவனை கூப்பிட்டு உபசரிச்சே... நீ தானே அவனை உள்ளே வரவிட்டே...?

**லக்ஷ்மி:** உன்னத் தேடி வர்ற ஒருத்தரை வரவேணாம்னு நான் எப்படி தடுக்கிறது?

**சம்பா:** அப்போ ஏன் அதை எனக்கு சொல்லல்லே?

**லக்ஷ்மி:** (தடுமாற்றத்துடன்) நான்... வந்து... சொல்லலாமா வேணாமான்னு யோசிச்சிக்கிட்டு இருந்தேன்.

**சம்பா:** இந்தா பாரு... இந்த வீட்டுல என் தயவுலதான் இருக்கிறே. என்னை ஏமாத்த பாத்தியின்னா இங்க ஒரு நிமிஷம் கூட இருக்க முடியாது. ஞாபகம் வச்சிக்கோ. இனியொரு தரம் அவன் உள்ளே வந்தான்னா நீ வெளியே போக வேண்டியதுதான்.

*(சம்பா கோபத்தோடு உள்ளே போகிறாள். லக்ஷ்மி ஆத்திரத்தை அடக்கி கொண்டு அவள் போகும் திசையை பார்த்தபடி நிற்கிறாள். மேடையில் இருள் சூழ்கிறது.)*

**(காட்சி முடிவு)**

## காட்சி : 13

(இரவுநேரம். லக்ஷ்மியும் சம்பாவும் சமையலறையில் இருக்கிறார்கள். லக்ஷ்மி சாமி படத்துக்கு முன்னால் பஜனை புத்தகமொன்றை வைத்துக் கொண்டிருக்கிறாள். சம்பா மாவு அரைக்கிறாள். வெளியறையில் சக்காரம் பீடியை புகைத்தவாறு இருக்கிறான். பாய் விரித்தபடி இருக்கிறது. அவனுக்குப் பக்கத்திலே மிருதங்கம் இருக்கிறது.)

**சக்காரம்:** சம்பா..

**சம்பா:** (வெறுப்புடன்) வர்றேன்....

**சக்காரம்:** அங்கே என்னத்த புடுங்கிக்கிட்டு இருக்கே...?

**சம்பா:** காலையில பலகாரம் போடவேணாமா?

**சக்காரம்:** நாளைய வேலைய நாளைக்கு பார்க்கலாம். இப்போ இங்கே வா... சம்பா...

(அவள் ஆத்திரத்தோடு சேலையில் கையை துடைத்துக்கொண்டு வருகிறாள்)

**சம்பா:** என்ன?

**சக்காரம்:** அந்த கதவை தாழ்ப்பாள் போட்டுட்டு விளக்கை அணை..

(சம்பா கதவை மூடுகிறாள். லக்ஷ்மி அவர்கள் இருவரையும் கவனித்துக் கொண்டிருக்கிறாள்.)

**சக்காரம்:** வந்து தூங்கு (சம்பா பாயில் உட்காருகிறாள்) சொல்றது கேக்கல்ல காது என்ன செவிடாவா போச்சுது? படுத்து தொலையேன் (லக்ஷ்மி பக்கம் திரும்பி) ஏய்... அங்கே என்ன பண்ணுறே? விளக்கை அணைச்சிட்டு படுக்குறதுக்கு என்ன கேடா?

(லக்ஷ்மி விளக்கை அணைக்கிறாள்)

**(மேடையில் மங்கிய ஒளி)**

**சம்பா:** (கடுமையாக) முடியாது. ஊஹூம்... முடியாதுன்னா முடியாது. வேணாம்... இல்லே...

**சக்காரம்:** ஏய் வாயை மூடு....!

**சம்பா:** நீங்க தள்ளி போங்க...

**சக்காரம்:** ஹா.. (*கையைக் கடிக்கிறாள். அவன் அலறுகிறான்*) கையவா கடிச்சே... என்ன திமிரு உனக்கு...? இப்ப உன்னை என்ன பண்ணுறேன்னு பாரு....

**சம்பா:** என்னைத் தொட்டீங்கன்னா தெரியும்... சீ... கைய எடுங்க...

**சக்காரம்:** எலும்புக்கு அலையிற நாய்க்கு இறைச்சியை வைச்சா அப்படித் தான்.

**சம்பா:** கிட்ட வராதீங்க... வந்தீங்க... சத்தம் போட்டு ஊரைக் கூட்டுவேன்.

**சக்காரம்:** போடு... சத்தம்போடு... எவன் வருவான்னு பார்ப்போம். என் வீட்டுல நான் எதையும் செய்வேன். எந்த பய கேக்கிறது?

**சம்பா:** (*ஆத்திரத்தோடும், வேதனையோடும்*) ஐயோ... என் உடம்பு தாங்காது.

**சக்காரம்:** உன் உடம்பை பத்தி எனக்கு கவலையில்லே.

**சம்பா:** நீங்க ஆம்பளையே இல்ல. (*வெறுப்போடு எழும்புகிறாள்*)

**சக்காரம்:** (*கோபத்தோடு*) சம்பா!

**சம்பா:** வேணாம். என்ன விடுங்க. நீங்க முன்ன மாதிரி இருந்தா பரவாயில்ல. இப்போ உள்ள நிலையில உங்களால முடியாது. என்ன தண்ணிய போட்டாலும் உங்களால முடியாது. சமயக்கட்டு பக்கம் சின்ன சத்தம் கேட்டாப்போதும் அஞ்சும் சோர்ந்து அறிவும் சோர்ந்திடும். உண்டா இல்லையா?

**சக்காரம்:** என்னடி சொன்னே? இன்னொருதரம் சொன்னியின்னா கழுத்த நெரிச்சுக் கொண்ணுடுவேன். ஜாக்கிரதை.. வாய் ரொம்பவும் தான் நீளுது.

**சம்பா:** சும்மா பயமுறுத்தாதீங்க. சோளக்கொல்லை பொம்மை கூட உங்க மிரட்டலுக்கு பயப்படாது. லக்ஷ்மியை கண்டா போதும் நீங்க எப்படி ஆகிடுறீங்க. அவளுக்கு முன்னால நீங்க ஒரு செத்த பிணம்.

**சக்காரம்:** (*ஆத்திரம் தாளாது*) என்ன சொன்னே? உன்னை என்ன செய்யிறேன் பாரு...

(*சம்பாவை அடிக்கிறான். சம்பாவின் முனங்கல் சத்தம் கேட்கிறது*) இந்தா குடி... ஊம்... குடி. வாயத் திற. ச்சீ... துப்பாதே... நாயே குடி... குடி...

(*சிறு அமைதி. லக்ஷ்மி சமயலறை விளக்கை ஏற்றுகிறாள்*)

**சக்காரம்:** (*லக்ஷ்மியின் அருகில் வந்து*) சின்னச்சாதிக் கழுதை! போ வெளியே

**சக்காரம்:** இந்த நிமிசமே போயிடு... உன்னாலதான் எல்லாம். கேட்டியா... அவ சொன்னத கேட்டியான்னேன். நீ என்ன ஒண்ணுக்கும் உதவாதவனா ஆக்கிட்டியாம். கேவலம்... இதுக்குத்தானா இங்க வந்தே? ஏன் என் பிராணனை வாங்குறே? போய்தொலை... உன் சாமியையும் தலையில தூக்கிக்கிட்டு போயிடு.

**லக்ஷ்மி:** போறேன்... காலையில போறேன்.

**சக்காரம்:** அப்பீலே கிடையாது. இப்பவே போகணும். நான் என் இஷ்டப்படி வாழணும். நீ இருந்தா அது நடக்காது. அதனால இப்பவே போயிடு. நீயும் வேணாம். உன் சாமியும் வேணாம்.

**லக்ஷ்மி:** ஐயைய்யோ... அபச்சாரம் அபச்சாரம்... சாமியை பார்த்து அப்படி எல்லாம் செல்லக்கூடாதுங்க. சாமிக்கு கோபம் வந்திடும்.

**சக்காரம்:** நான் யாருக்கும் பயமில்லை. ஏன்னா... நான் எவரையும் ஏமாத்த இல்ல. யாருக்கும் அநியாயமும் செய்ய இல்ல. பின்ன எதுக்காக நான் பயப்படணும்? யாருக்கு பயப்படணும்? என்ன செய்திடப் போகுது உன் சாமி? நான் எப்படி வாழ்றேன்னு எனக்குத் தெரியும். நீயும் எப்படியாவது வாழனும்னா உன் சாமியை துக்கிக்கிட்டு போயிடு.

*(சம்பாவை வெறுப்போடு பார்த்தபடி வாசலுக்குப் போகிறாள். சக்காராம் அவளைப் பின்தொடருகிறான். சம்பா உணர்வற்ற நிலையில் கிடக்கிறாள். லக்ஷ்மி வாசலருகில் சக்காராமின் காலை தொட்டு வணங்கப் போகிறாள்.)*

**சக்காரம்:** என் காலை தொடாதே ..அதுபாத பூஜைக்கே லாயக்கு இல்ல... எனக்கும் உனக்கும் எந்த தொடர்பும் கெடையாது.. இதுக்கு மேல நின்னுக்கிட்டு இருந்தே ஒதைச்சி தள்ளிடுவேன்.

**லக்ஷ்மி:** *(ஒருவித துணிவுடன்)* போறேன்... போறதுக்கு முன்னாடி ஒன்ன சொல்லிட்டு போறேன்.

**சக்காரம்:** நீ ஒண்ணும் சொல்ல வேணாம்...

**லக்ஷ்மி:** எல்லாம் ஒங்க நன்மைக்காகத்தான்...

**சக்காரம்:** இந்த இடத்தை காலிபண்ணுறதுதான் நீ எனக்கு செய்யிற பெரிய நன்மை...

**லக்ஷ்மி:** நான் சொல்ல வேண்டியதை சொல்லிட்டேன்னா... ஒரு நிமிஷம் கூட நிக்க மாட்டேன்...

**சக்காரம்:** சரி சொல்லு சீக்கிரம்...

**லக்ஷ்மி:** அவ... நல்லவ இல்ல...

**சக்காரம்:** நீ கூடத்தான்...

**லக்ஷ்மி:** உங்களுக்கு துரோகம் செய்யிறா...!

**சக்காரம்:** அதை நான் பார்த்துக்கிறேன்...

**லக்ஷ்மி:** அவ நடத்தை கெட்டவ...!

**சக்காரம்:** *(கன்னத்தில் அறைகிறான்)*

**லக்ஷ்மி:** கள்ளப்புருஷன் வச்சிருக்கிறவ கணவனுக்கு விஷம் கொடுக்கவும் தயங்க மாட்டா...

**சக்காரம்:** அயோக்கிய ராஸ்கல்... *(அவளின் கழுத்தை நெரிக்கிறான்)*

**லக்ஷ்மி:** கொல்லுங்க ஒங்க கையாலேயே கொல்லுங்க... உங்களால என்னை கொள்ள முடியும். ஆனா...அவ அந்த முசல்மானோட போறதை உங்களால தடுக்க முடியாது...

**சக்காரம்:** முசல்மானா.. எந்த முசல்மான்...?

**லக்ஷ்மி:** தாவுத்....

**சக்காரம்:** ஏய்... பல்லை கழட்டிடுவேன். பொய் சொல்லாதே...

**சம்பா:** *(குடிபோதையில தன்னை மறந்த நிலையில்)* என்கிட்ட வராதே... நீ ஒரு சவம்... நீ ஆம்பளையே இல்ல. உன்னால முடியாது போ...

**லக்ஷ்மி:** சத்தியமா சொல்றேன் நான் என் கண்ணால கண்டேன்...

**சக்காரம்:** *(லக்ஷ்மியின் தோளைப் பிடித்து)* என்ன சொன்னே? இன்னொரு தரம் சொல்லு...

**சம்பா:** *(மீண்டும் உளறுகிறாள்)* உன்னால ஒண்ணும் பண்ண முடியாது. விதைக்கவும் முடியல்ல... வேலி போடவும் தெரியல்லேன்னா... நீ விவசாயி இல்ல. வெவஸ்த்த கெட்டவன்.

**லக்ஷ்மி:** உண்மையா சொல்லுறேன். நீங்க பிரஸ்ஸுக்கு போனா... அவ வீட்டுல இருக்கிறதே இல்ல... நேரா தாவுத்தோட கடைக்கு போயிடுறா... விபச்சாரிக்கும் வியாபாரிக்கும் வித்தியாசம் இல்லேங்கிறத அவள் உண்மையாக்கிட்டா...

**சம்பா:** *(மெய்மறந்த நிலையில்)* என்ன இருந்தாலும் தாவுத்... தாவுத்தான்... ஆம்பளை சிங்கம்...

**சக்காரம்:** உங்க ஆத்தா... இதோ வர்ரேண்டி... இதோ வந்திட்டேன்

(வேகமாக வெளியே போகிறான். லக்ஷ்மி செய்வதறியாது நிற்கிறாள். சம்பா போதையில் பிதற்றிக்கொண்டே இருக்கிறாள்.)

**சம்பா:** ஒருத்தனுக்கு வைப்பாவும் இல்ல... வைப்பாட்டியாவும் இல்ல. அப்புறம் என்ன லைப்...

**லக்ஷ்மி:** (சாமி படத்திற்கு முன்னால் அமர்ந்து பஜனை பாடுகிறாள்) சீதாராம்..... சீதாராம்..... சீதாராம்..... ஜெயசீதாராம்....

**சம்பா:** தாவுத்...!

(வெளியிலிருந்து வந்த சக்காராம் வாசலிலேயே நின்று விடுகிறான்)

**சம்பா:** (உணர்ச்சி வசப்பட்ட நிலையில்) எனக்கு புருஷனா இருக்கிற தகுதி... தாவுத்...! உங்களுக்கு மட்டும்தான் இருக்கு...

(சக்காராம் கதவை மூடுகிறான். லக்ஷ்மி பஜனையில் மூழ்கி இருக்கிறாள். சக்காராம் சலனமில்லாமல் நடந்து வருகிறான்)

**சம்பா:** தாவுத்... என்னை நம்பிட்டான் சக்காராம்... ஆனா... உங்களை மனப்பூர்வமா நம்புறா சம்பா...

**சக்காரம்:** வாஸ்த்தவம்தான்டி.. திருடன் நீதிபதியாகிட்டா அவன் பின்னாலேயும் பத்து வக்கீல் நிக்கத்தான்டி செய்வான்.

**லக்ஷ்மி:** (பஜனையில் மும்முரமாக இருக்கிறாள்)

**சம்பா:** தாவுத்...! நீங்க மட்டும் என்னை கைவிட்டீங்க.... உங்களை பழிக்குப்பழி வாங்குவேன்...

**சக்காரம்:** பழிக்குப்பழியா... வாங்குறேண்டி... (சம்பாவை பார்த்து) ஏன்டீ எனக்காக விதைக்க தெரியாது... ஆங்... பயிரை வளர்க்கவும் தெரியும். பயிரோட பயிரா வளர்ர களைகளை பறிக்கவும் தெரியும். (சம்பாவின் கழுத்தை நெறிக்கிறான். சில விநாடிகளுக்கு பின் சம்பாவின் கழுத்திலிருந்து கையை எடுக்கிறான். சம்பா மரக்கட்டையைப் போன்று அசைவற்றிருக்கிறாள். பேச்சு மூச்சற்று இருக்கும் சம்பாவை சக்காராம் பார்க்கிறான். அவள் மரணித்து விட்டதை உணர்கிறான்.)

**சக்காரம்:** (மெதுவாக) கொலை... (சற்று பலமாக) கொலை செய்திட்டேன்... நான் கொலை செய்திட்டேன்... நான் கொண்ணுட்டேன் நான் சம்பாவைக் கொண்ணுட்டேன்... என்னோட சம்பாவை நானே கொண்ணுட்டேன்... (சக்காராம் திகைப்பும் பயமும் கொண்டு அங்குமிங்கும் ஓடி ஒளிந்துகொள்கிறான்.)

*(லக்ஷ்மி நொண்டி நொண்டி அவன் அருகில் வருகிறாள்)*

**லக்ஷ்மி:** *(சற்று தைரியத்துடனும், நிதானத்துடனும்)* உஷ்.. சத்தம் போடாதீங்க... யாராவது கேட்டிட போறாங்க... மூச்சுவிடாதீங்க *(சம்பாவை பார்க்கிறாள்)* இப்ப என்ன நடந்து போச்சு. இவ உயிரோட இருக்கிறதே பாவம். நீங்க பயப்படாதீங்க... நான் இருக்கேன். நீங்க என்ன சொன்னாலும் நான் கேக்கிறேன்... உங்க மடியில சாகுறது தான் என்னாசை...

**சக்காரம்:** நான் கொலை செய்திட்டேன்.. நானொரு கொலைகாரன்...

**லக்ஷ்மி:** ஏன் இப்படி பயப்புடறீங்க... இவளை புதைக்கிறதுக்கு வழிய பாருங்க.... வெளியே தெரியக் கூடாது. நான் சொல்லிடுறேன் சம்பா ஊருக்கு போயிட்டான்னு. யாருமே சந்தேகப்பட மாட்டாங்க... ஒருத்தருக்குமே ஒண்ணும் தெரிய வராது...

**சக்காரம்:** உங்கப்பனுக்கு...?

**லக்ஷ்மி:** கடவுளுக்கு தானே? அவருக்கு தெரிஞ்சா பரவாயில்லை. என்னோட புண்ணியம் உங்களை காப்பாத்தும.. நான் செய்த நன்மைகள் உங்களைச் சேரும்

*(பூமியை தொட்டு கும்பிடுகிறாள்.)*

**லக்ஷ்மி:** வாங்க சீக்கிரம். மண்வெட்டிய எடுத்துக்கிட்டு வாங்க... இந்த சமையல் அறையிலேயே பொதைச்சிருவோம். பொழுது விடிஞ்சிதுன்னா ஒண்ணுமே பண்ண முடியாது. இருட்டோடு இருட்டா விசயத்தை முடிச்சிருவோம். இருட்டுல கடவுள்தான் பார்த்துக்கிட்டு இருப்பாரு. பகல்ல மனுசங்க பாத்திடுவாங்க... மனுசாளும் இவளைப்போல நன்றிகெட்ட ஜென்மங்கள்தான். விடியிறத்துக்கு முன்னாடி எல்லாத்தையும் முடிச்சிறனும். *(கடவுளை வணங்குகிறாள்.)* அவன் உத்தரவு தந்துட்டான்... என்ன யோசிக்கிறீங்க...? இவ மகா பாவி! நான் ஒரு பாவமும் செய்யாதவ. ஒரு ஈ... எறும்புக்கு கூட பாவம் செய்யாதவ. அதனால ஒண்ணுக்கும் பயப்படாதீங்க...

**சக்காரம்:** *(பதட்டத்தோடு)* போலிஸ் நாய் வந்துட்டா...

**லக்ஷ்மி:** இந்த தாலி உங்களை காப்பாத்தும். இதை இத்தனை நாளா உங்களுக்காகத்தான் கழுத்துல போட்டிருக்கேன். இதை முதல்ல

கட்டினவரு அந்த பந்தத்தையே அறுத்திட்டாரு. ஆனா இவ... இவ புருஷனையே தூக்கி எறிஞ்சவ. உங்களுக்கு துரோகம் பண்ணுனவ. அதனால இவளை கொன்னதுல பாவமே கிடையாது. ஏன் நின்னுக்கிட்டு இருக்கீங்க? இப்படியே நில்லுங்க இதோ நான் வந்துட்டேன்...

**சக்காரம்:** சம்பா... *(அவள் கால் மாட்டிலிருந்து அழுகிறான்.)*

*(லக்ஷ்மி கையில் மண்வெட்டியுடன் வருகிறாள்)*

**லக்ஷ்மி:** இந்தாங்க ...இதைப் புடிங்க. *(சக்காராம் கைகள் நடுங்க அதை வாங்குகிறான்)* வாங்க சமையகட்டுக்கு...

*(சக்காராம் சம்பாவை பார்த்துக்கொண்டே நிற்கிறான். லக்ஷ்மி ஒரு துணியை எடுத்து உயிரற்ற சம்பாவின் உடலை தலை முதல் கால் வரை மூடுகிறாள். சக்காராம் கையில் இருந்த மண்வெட்டி அவனை அறியாமலே கீழே விழுகிறது.)*

**லக்ஷ்மி:** அந்த நன்றி கெட்ட முகத்தை பார்க்காதீங்க. அது இப்போ நரகத்துல கெடந்து வேகும். விடியிறத்துக்க முன்னாடி பொதைச் சிடுவோம்.

*(லக்ஷ்மி கீழே கிடந்த மண்வெட்டியை எடுத்துக் கொண்டு சக்காராமின் கையை பிடித்து இழுக்கிறாள். சக்காராம் ஆடாது அசையாது நிற்கிறான்)*

பாவத்தை பொதைக்கிறதுதாங்க புண்ணியம். அதுக்கு ஏன் தயக்கம்...?

*(சக்காராம் அனைத்தும் இழந்தவனாக, சோகம் தாழாதவனாக உணர்வற்று நிற்கிறான்.)*

உங்களுக்கு முடியல்லேன்னா நானே செய்யிறேன்... உங்களுக்கு அவ குழிதோண்டினா. அவளுக்கு நான் தோண்டுறேன்.

*(லக்ஷ்மி மண்வெட்டியை கொண்டு வேகமாக குழியை வெட்டுகிறாள். அவள் களைத்து போய் நிற்கும் சந்தர்ப்பத்தில் கதவு தட்டும் சத்தம் கேட்கிறது. சக்காராம் அதிர்ந்து போகிறான். லக்ஷ்மியின் பின்னால் அவன் மறைந்து கொள்கிறான்.)*

**ராஜேஸ்:** *(வெளியிருந்தவாறு)* சம்பா... சம்பா... என் சம்பா எங்கே ? ஆசை யோடு வந்து என்ன கூட்டிக்கிட்டு போ சம்பா. சம்பா... கதவை திற... நீ வந்து... என்னை அடி உதை, குத்து , கொல்லு. கதவை திறந்திடு

சம்பா... நான் உனக்காக வாசலிலேயே நிற்கிறேன் உன்னை கடைசியா ஒரு தரம் பார்த்துட்டேன்னா இந்த வாசலிலேயே செத்திடுவேன். சீக்கிரம் வந்திடு சம்பா....

*(விம்மிவிம்மி அழுகிறான்)*

**லக்ஷ்மி:** *(சக்காராமிடம்)* பயப்படாதீங்க.... சம்பாவோட புருஷன்தான்.. குடிகாரன் கொஞ்ச நேரம் தட்டிட்டு போயிடுவான்

*(மீண்டும் அவள் பலமாகவும் விரைவாகவும் தோண்டுகிறாள். இடைக்கிடையே கதவு தட்டப்படும் ஓசையும் –சம்பா... சம்பா... என்ற ஓலமும் கேட்டுக்கொண்டே இருக்கிறது. சக்காராம் பரிதாபமாக நிற்கிறான்.)*

(இருள் மேடையை மறைத்து விடுகிறது)

**- முற்றும் -**

## மராட்டிய நாடகாசிரியர் விஜெய் டெண்டுல்கார்

**- சில தகவல்கள் -**

மராட்டிய அரங்கில் 'கோபக்கார இளம் மனிதன்' எனப் பேசப்பட்டவர் விஜெய் டெண்டுல்கார். ஐம்பதின் நடுப்பகுதியில் நாாடகத் துறையில் ஈடுபட்ட இவர் எழுதிய முதல் நாடகப் பிரதி 'ஒரு தீவு அழைக்கும் மனிதன்' (And Island Called Man) என்பதாகும்.

இந்நாடகத்தைத் தொடர்ந்து இருபத்தெட்டு முழு நீள நாடகங்களையும் 17 சிறுவர் நாடகங்களையும் மராட்டிய மொழியில் எழுதியுள்ளார். அமைதி, நீதிமன்ற அமர்வு! (Sielenve, The Court is in Session) என்ற நாடகம் அறுபதுகளில் இவருக்குப் பெரும் புகழைக் கொடுத்தது.

பொது விவாதங்களின் மையமாக டெண்டுல்கார் காட்சியளித்தாலும் அவர் ஒரு கலகக்காரன் என்பதே பலரது கணிப்பீடாகவும் இருந்தது. அதற்குக் காரணம் அவர் தனது படைப்புக்களில் நவீன மனிதனை வித்தியாசமான கோணங்களில் பாத்திரங்களாக வார்ப்பதே ஆகும்.


காசிராம் கொத்வல் (Ghasiram Kotwal) என்ற நாடகம் எழுபதுகளில் இவருக்கு சர்வதேச புகழைப் பெற்றுக்கொடுத்தது. இவரது குறிப்பிட்ட சில நாடகங்கள் இந்தியாவின் அனைத்து மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள் ளது. அவரது நாடகத்தின் விசேட அம்சம் அவர் கையாளும் தனித்துவமான உரையாடல்களே ஆகும்.

சக்காராம் பைண்டர் என்னும் இந்நாடகம் இருபத்தேழு இந்திய மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டபோதும், எல்லா மொழிகளிலும் அந்நாட கத்தை அரங்கேற்றுவதற்குத் தடை விதிக்கப்பட்டது. இறுதியில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் வழக்கு ஒன்றைத் தாக்கல் செய்து நாடக அரங்கேற்றத்துக்கான அனுமதியைப் பெற்றுக்கொண்டார்கள். இலங்கையிலும் தணிக்கை சபையின் அங்கீகாரம் மறுக்கப்பட்டது. மராத்திய மண்ணுக்குச் சொந்தக்காரனான சக்கா ராமை சென்னைவாசியாக மாற்றியே அர்ங்கேற்றத்திற்கான அனுமதியைப் பெற்றதையும் இங்கு குறிப்பிடுவது பொருத்தமானது. இந்நாடகம் சிங்கள மொழியிலும் 'தாச மல்லிகே பங்களாவ' என்ற பெயரில் அரங்கேற்றப்பட்டது.

இந்தியாவின் மிகச் சிறந்த நாடக ஆசிரியர்களில் ஒருவரான டெண்டுல்கார் பத்மபூசணம் போன்ற உயர் விருதுகளையும் பெற்றுள்ளார்.

# கலைஞர் கலைச்செல்வனாருக்கு கிடைத்த கௌரவ பட்டங்கள்

| | |
|---|---|
| குறிஞ்சி இலக்கியப் பண்ணை– | **இயக்குநர் சிகரம்** |
| திருச்சி. கலை இலக்கியப் பேரவை– | **புரட்சிக் கலைஞர்** |
| முஸ்லிம் சமய ராஜாங்க அமைச்சு– | **கலைச்சுடர், [வியாவுல் பன்னான்]** |
| ராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலயம்– (ஜெகத்குரு ஸ்ரீ சங்கராச்சாரியார் நூற்றாண்டு விழாவில் ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனா அவர்களால்) | **நாடகக் கலாபமணி** |
| அகில இன நல்லுறவு ஒன்றியம்– | **கலைஞர் திலகம்** |
| லண்டன். ஈழவர் திரைகலை மன்றம்– (கலையரசு .சொர்ணலிங்கம் அவர்களின் ஞாபகார்த்த பட்டம்) | **கலா விநோதன்** |
| அகில இலங்கை அண்ணா தி.மு.க.– (புரட்சித் தலைவி ஜெயலலிதாவின் 52வது பிறந்ததின விழாவின்போது) | **கலைஞானி** |
| கவியரசர் வைரமுத்து– | **கலை இலக்கிய நாயகன்** |
| கலாசார அலுவல்கள் அமைச்சு– | **கலாபூஷணம்** |
| கிருஷ்ண கலாலயம்– | **கலை உலக நாயகன்** |
| கலாசார தேசிய மரபுரிமைகள் அமைச்சு– (வழங்கியவர் மாண்புமிகு பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க அவர்கள்) | **முதுகலைஞர் – தேசிய விருது** |




## முனைவரின் பார்வையில் கலைஞர்...



நாடக வளர்ச்சிக்குரிய முதல் நிலை ஆதாரமாக இருப்பது நாடக எழுத்துரு ஆகும். நாடக எழுத்துருவின் "படிமலச்சிப் பாங்கினை" நன்கு விளங்கிக்கொண்டவர் கலைஞர் கலைச்செல்வன் அவர்கள். எழுத்துருவின் முதல்நிலை வரைபுக்கும் முடிவுநிலை வரைபுக்கும் இடையேயுள்ள படிமலர்ச்சித் தொடர்ச்சி பற்றிய அவரது தெளிந்த புலக்காட்சி தமிழின் நாடக எழுத்துருக் கலையை வளமாக்கி வருகிறது. மரபுவழி எழுத்துருவின் மாயவித்தைப் பாங்கினையும் நவீன எழுத்துருவின் பார்வையாளரை அந்நியமாக்கிவிடாப் பாங்கினையும் நன்கு அறிந்து நிற்கும் துல்லியமான நிலையை கலைஞர் கலைச்செல்வனது எழுத்துருக்கள் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனை அரங்க மொழியிலே கூறுவதானால், வெக்னரும், பிரெச்ற் என்பாரும் சங்கமமாகி நிற்கும் அறிகை தளத்திலே கலைச்செல்வனது எழுத்துருக்கள் ஆக்கம் பெறுவதைக் காணலாம்.

– பேராசிரியர் சபா ஜெயராசா

SAKHARAM BINDER
ISBN 978-955-518-03-1

Design Lab - 0112 431 531, www.dsignslab.com